அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 52 | செப்டெம்பர் 2025 | திருவள்ளுவர் ஆண்டு 2056



## தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல்

## திலீபன்

## பார்த்திபன் கனவு

அகிம்சையின் உச்சமான திலீபன்!!

அறவழியில் போராடிய காந்தி

## பார்த்தீ!



பவானி

# திலீபன்

தமிழீழ தேசத்தின் தவப் புதல்வன்
தன்னுயிரை விட
தமிழீழம் பெரிதென
தியாகத் தீயில் ஆகுதியான
திலீபன் எனும் நாமத்தான்.

கண்ணாடியணிந்த கம்பீர உருவம்
கனீரென்ற குரலில்
மக்களின் மனங்களில்
விடுதலை உணர்வை
விதைத்திட்ட வித்தையாளன்.

தாயக விடுதலைப் போரிலும்
தமிழீழத் தனியரசிலும்
தேசியத் தலைவரிலும்
நம்பிக்கைகொண்ட இளம்புலி.

ஊரெழு மண் தந்த
உயரிய சிந்தனையாளன்.
தாயின் அரவணைப்பு இன்றி
தந்தை கைகளில் வளர்ந்தவன்.

பேச்சாற்றல் அவனது பிறப்புரிமை
பண்பாடு. பழக்க வழக்கம்
நன்னடத்தை
கடைபிடிக்கும் நற்குணங்கள்
அவனின் இயல்புநிலை!

பெண்சமூக அடக்கு முறையில்
கொதித்துப் போனவன்.
பெண்களை மதிப்பதும்
பெண் கல்வியின் முக்கியமும்
செயலில் காட்டிய
சாதி சமயம் பாரா
சமத்துவப் போராளி!

சிங்கள அரசின் இனவெறி கண்டு
சினம்கொண்டு
மறவர் படையில் பயணித்த
மாவீரன்.
கொண்ட கொள்கையில்
மாறாத குணம் கொண்ட
தூயவன்.

பல்கலைக்கழகம் தெரிவான
மருத்துவ மாணவன்
தரப்படுத்தலுக்கு எதிராய்
தாங்கொணா துயரோடு
மக்கள் மீதான
சிறிலங்கா அரசின்
கொடுமைகளுக்கு
சாவுமணியடிக்க
தலைவன் அணியில்
புலியானவன்.

பெண்கள் மீது நம்பிக்கை
கொண்டு
மதித்திட்ட மாவீரன்.
சுதந்திரப்பறவைகளின்
வழிகாட்டி.

தலைவர் வழியினில்
முன்னோடியாய்
செயலாற்றியவன்.
யாழ் மாவட்ட அரசியல்துறையின்
பொறுப்பாளராய்
பரிணமித்த போது..
அத்தனை மக்களின்
மனங்களையும் வென்ற
பேரன்பு உடையவன்.

சென்ற இடமெல்லாம்
மக்கள் ஆதரவு.
பொறுமையாய் அளவளாவி
யார் மனதும் நோகாமல்
கடந்து செல்லும் புயலவன்.

காயமுற்ற வேளையிலும் மற்றைய
போராளிகளின் நலனில்
அக்கறை
கொண்ட தாற்பரியம்
உடையவன்.

மனதில் தோன்றும்
சிந்தனைகளை
செயல் வடிவமாக்கும்
சிறப்பானவன்.
உயரிய பண்புகள் கொண்ட
உத்தமவீரன் திலீபன்!!

மக்களின் வாழ்வில் புயலெனப்
புகுந்து
நிம்மதி கெடுப்பார்...
பாலியல் கொடுமைகள்.
கொலைகள்
'அமைதிப்படை'யினால்
அரங்கேறும் என்பதில்
உறுதியோடிருந்தான்.

தலைவரின் வழிகாட்டலில்
ஐந்து அம்ச கோரிக்கையோடு
நல்லூரின் வீதியில்
யாகத்தீ வளர்த்தான்
எங்கள் திலீபன்!!

நல்லூர்க் கந்தன் வீதியில்
தியாகத்தின் சுடராய்
திலீபன் உருகினான்!

பார்ப்பவர்கள் மனங்கள் பதறியழ
பார்த்தீபன் சுருண்டு போனான்
ஒரு துளிநீர் கூட அருந்தாது
கொண்ட கொள்கையில்
உறுதியாய் போராடினான்!

அகிம்சையின் பிறப்பிடம் என
காந்தியை கொண்டாடும்
பாரத தேச அரசுக்கு
இரக்கமே வரவில்லை!

எங்கள் திலீபன்
எம் கண் முன்னே
உருகி உருகிப் போனான்!!

வார்த்தைகளால் வடிவம் கொடுக்க
முடியாத உணர்வுகள் இன்றும்
நெஞ்சைப் பிசைகின்றன.

ஒரு நேரம் உணவின்றியே
துடித்துப் போகும் எம்மிடை
ஒரு உயரிய இலட்சியத்திற்காய்
நம்பிக்கையோடு ஆகுதியான
திலீபனின் தியாகத்தின்
வலிமை புரிகிறதா?

தமிழீழ மண்ணுக்காய் - தம்
மக்களின் விடிவுக்காய்
உருகிப் உருகிப் போன
தியாகி திலீபனும்...
மண் மீட்புப்போரில்
மாவீரர்களாய் ஆனவர்
கனவுகளும் நனவாக
ஒற்றுமையாய். ஓரணியாய்
பயணிப்போம் வாருங்கள்!

மாத இதழ் | மணம்: 52
செப்டெம்பர்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

# உள்ளடக்கம்...

| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| அகிம்சையின் உச்சமான... | 06 |
| மீண்டும் பற்ற... | 09 |
| பார்த்தீபன் கனவு (கவிதை)... | 12 |
| ஐ.நா. மனித உரிமை.... | 13 |
| அழகே அழகு! (கவிதை)... | 16 |
| செம்மணியை தாண்டுமா.... | 17 |
| கிருஷாந்திக்கும் செம்மணிக்கும் ... | 21 |
| கிழட்டு யானையும்... | 24 |
| காவியநாயகி (கவிதை)... | 25 |
| படித்துச் சுவைத்தது... | 26 |
| கச்சதீவு அரசியல்... | 27 |
| கானல் நீர் (சிறுகதை)... | 29 |
| செயற்கை நுண்ணறிவின்... | 32 |
| பெண்ணே...(கவிதை)... | 34 |
| பார்த்தீ... (நினைவலைகள்) .... | 35 |
| கவிதைப் பூக்கள்... | 38 |
| நானுமே சாட்சியாய் (சிறுகதை)... | 39 |
| இலங்கை, வங்கதேசம்... | 41 |
| சுவிட்சர்லாந்து கருத்தரங்கு... | 44 |
| அண்ணா.... (கவிதை)... | 47 |
| ட்ரம்பின் இரட்டை... | 48 |
| பறவைகளின் அறிவியல்... | 50 |
| வலை... (நெடுங்கதை) | 51 |
| விஜயின் கூட்டத்தில்.... | 54 |



## திருக்குறள்

**குறள் 826:**

"நட்டார்போல் நல்லவை சொல்லினும்
ஒட்டார்சொல் ஒல்லை உணரப் படும்."

**விளக்க உரை:**

நண்பர்போல் நன்மையானவற்றைச் சொன்னபோதிலும் பகைமை கொண்டவர் சொல்லும் சொற்களின் உண்மைத் தன்மை விரைவில் உணரப்படும்.






# அகவை 5 இல்

எழுநிலம்




எழுநிலம் மணம் 51 அட்டைப்படம் மிகவும் உணர்வுபூர்வமாக இருந்தது. இத்தனை வருடங்கள் கடந்தும் பாடசாலைப் பிள்ளைகளை குண்டுபோட்டு கணப்பொழுதில் கொன்றொழித்த நிகழ்வின் சோகம் மனதைவிட்டு அகலவில்லை. செஞ்சோலை கவிதையும் நன்று. அனுரவின் உண்மையான குணத்தை கொஞ்சம் கொஞ்சமாக தோலுரித்துக் காட்டுவது சிறப்பு.

**–சுரேந்திரன் மகாதேவன்**
**சிட்னி, அவுஸ்திரேலியா.**

ஓமந்தை வீதி விபத்து கவனயீனமே அன்றி வேறில்லை. 7.5 கிலோமீற்றர் தூரம் கடப்பதற்குள் தூங்கிப்போய் விடுகிறார்கள் என்றால் பொறுப்பின்மைதானே அன்றி வேறில்லை.
வெளிநாடுகளில் ஐம்பது அறுபது மைல் நெடுஞ்சாலைகள் இருந்தும் இப்படி எவரும் தூங்கிப் போவதில்லை. கட்டுரைகள் அனைத்துமே காலத்துக்குக் காலம் கோலோச்சிய இனவாதிகள் எப்படி டிசைன் டிசைனாக எங்களை அழித் தார்கள்..
அழிக்கிறார்கள் என்பதைப் பற்றியே இருந்தன. கவிதைகள் சிறப்பு. கதைகளும் மனதைத் தொட்டன.

**–காஞ்சனா மதனகுமார்**
**மொன்றியல், கனடா.**

பலஸ்தீனத்துக்காக ஓடிவரும் நாடுகள் எங்களை கண்டு கொள்ளவே இல்லையே? இத்தனைக்கும் முப்படைகள் நடத்தி ஒரு அரசை திறம்பட நடத்திக் காட்டிய இனம். எழுநிலம் பத்திரிகை எனக்கு ஒன்றை ஞாபகமூட்டுகிறது. போர்க்காலத்தில் எமது இலக்கியம், பத்திரிகைத்துறை எப்படி தரமானதாகவும், நீதி வழுவாமலும் இருந்ததோ அதை அப்படியே பிரதிபலிப்பதாக எழுநிலம் பத்திரிகை இருப்பதால் தனித்துவமானதாகத் தெரிகிறது. இதன் தரத்தைக் காப்பாற்றுவது என்பது மிகப்பெரிய சவால். உங்களுக்கு எங்கள் வாழ்த்துகள்.

**–சிவஞானம் மகேந்திரன்,**
**டசில்டோ.:.ப், ஜேர்மனி.**

கட்டுரைகள் நீண்டவையாகவும் அதேசமயத்தில் கனதியானவையாகவும் இருந்தன. என்ன? எந்தப் பக்கத்தைப் பார்த்தாலும் சிங்கள இனவாதிகளின் படத்தைப் போட்டு வெறுப்பைக் கிளப்பி விட்டீர்கள்.
கவிதைகள் அத்தனையும் அருமை. செம்மணி புதைகுழி விவகாரம் நாளுக்கு நாள் பெரிதாகி வருவது கவலையளிக்கிறது. இதனை இப்படியே விட்டுவிடக் கூடாது. ஐநாவூடாக தண்டித்தே ஆகவேண்டும்.

**–வெண்ணிலா வாசவன்**
**கலிபோர்னியா, அமெரிக்கா.**

பெண்கள் நடத்தும் பத்திரிகை எழுநிலம். சாதாரண பெண்கள் பத்திரிகை போல் தையல், சமையல், அழகுக் குறிப்புகள், வீட்டை அலங்கரிப்பது என்று இல்லாமல் சமூக, இனப் பிரச்சனையை கையிலெடுத்து துணிச்சலோடு தரமான ஆக்கங்களைத் தருகிறீர்கள்.
அவற்றை தெரிந்து எடுத்து வெளியிடுவதோடு அவற்றிற்கு சிகரம் வைப்பது போல அட்டைப்படங்கள் வேறு.
வாழ்த்துகள். ஒரேயொரு குறை. பெண்களின் சமூக பிரச்சனைகளையும் ஒவ்வொரு பத்திரிகையிலும் கட்டாயம் எழுதவேண்டும். பாதிக்கப்பட்டுள்ள பெண்களுக்கு உங்களுக்குப் பின்னால் நாங்கள் இருக்கிறோம் என்று தைரியம் கொடுக்க வேண்டும். அதை வாசிப்பவர்களூடாக அவர்களுக்கு உதவிகள் கிடைக்க வாய்ப்புள்ளது அல்லவா?

**–மேகலை பிரணவன்**
**பாரிஸ், பிரான்ஸ்.**

ஐயையோ! வலை கதையில் ஆனந்தனைக் கொன்று விடாதீர்கள். தாயக மணத்துடன் சிறப்பாக வரும் கதை இது. என்னை விடவும் எனது வயது முதிர்ந்த அம்மாதான் மிகவும் கவலைப்பட்டா.
சிறு வயதிலேயே தாயகத்தை விட்டு புலம் பெயர்ந்த எனக்கு அரசியல் கட்டுரைகள் பெரிதாக புரியவில்லை. ஆனால், குட்டிக் கதைகள், கவிதைகள், தொடர்கதை என்று பத்திரிகை அட்டகாசமாக வருகிறது.

**–பிருந்தா புவீந்திரன்**
**பெங்களூரு, இந்தியா.**

காஸா படுகொலைகள் பற்றிய கட்டுரைகளை என்னால் வாசிக்கவே முடியவில்லை. படங்களைப் பார்க்க, நானே அங்கு இருப்பது போன்ற உணர்வு. எங்களை எப்படியெல்லாம் கொன்றொழித்தார்கள்? இறுதிச்சண்டை, குண்டுகளின் சத்தம், மரண ஓலங்கள், பசி, தாகம், மருத்துவ வசதியின்மை என்று எல்லாமாக இன்றும் நெஞ்சை ரணமாக்குகின்றன. இனவாத சிங்களவன் திருந்துவான் என்றா நினைக்கிறீர்கள்? வாய்ப்பே இல்லை.

**–கோமதி தயாபரன்**
**கோலாலம்பூர், மலேசியா.**

ஈழவன் அனுராஜ், பிரபா அன்பு, பொழில் ஆகியோர் எழுதிய மூன்று கவிதைகளும் ஒரே விடயத்தை பல கோணங்களில் பார்த்து எழுதப்பட்டதாகத் தெரிகிறது. நாங்களும் உங்களுடன்தான் நிற்கிறோம்.
சுயநலம் பிடித்த, தமக்குத்தாமே பட்டம் சூட்டிக்கொள்ளும் கூலிப்படைகளின் ஆட்டம் அடங்கிப்போகும். கட்டுரைகள், கவிதைகள், கதைகள் அத்தனையும் சிறப்பு.
வலை கதை நன்றாகப் போகிறது. அதை இப்போதைக்கு முடித்து விடாதீர்கள்.

**–வேழினி பவேந்திரன்,**
**கிரானடா, ஸ்பெயின்.**



## ஆசிரியர் பக்கம்

# ஒருமித்த குரல்களுக்காக ஏங்குகிறான் திலீபன்

தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் திலீபனின் நினைவுநாள் உணர்வுபூர்வமாக கொண்டாடப் பட்டிருக்கிறது. ஒரு சொட்டு நீர்கூட அருந்தாது உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்த தியாகி திலீபனின் 38வது நினைவுநாளை ஈழத்தமிழர்கள் வேதனையோடு நினைவு கூர்ந்திருக்கிறார்கள்.

திலீபனின் அகிம்சைப் போராட்டத்தை உதாசீனம் செய்து, அவனை இறக்கவிட்ட பாரதத்தின் கபட முகத்தையும் மீண்டும் ஒருமுறை ஈழத்தமிழர்கள் நினைவு படுத்தியிருக்கிறார்கள்.

இதனோடு சேர்த்து, திலீபனின் 8ம் ஆண்டு உண்ணாவிரத நினைவுக் காலப்பகுதியில், 20.09.1995 அன்று யாழ் நாகர்கோவில் பாடசாலை மீது நடத்தப்பட்ட புக்காரா விமானத் தாக்குதலில் துடிதுடித்துப் பலியான 21 பாடசாலை மாணவர்களும் நினைவுகூரப் பட்டிருக்கிறார்கள். வழமையைப் போல பெரிதாக எந்த அசம்பாவிதங்களும் நிகழவில்லை என்றாலும் சிறு சிறு சலசலப்புகள் இருக்கத்தான் செய்தன.

மக்கள் புரட்சி வெடிக்க வேண்டும் என்ற திலீபனின் இறுதிக் கோரிக்கை இன்றும் அப்படியேதான் இருக்கிறது. போராட்டங்கள் நடைபெறுகின்றனதான். இல்லையென்றில்லை. ஆனால் அவை ஒன்றிணைந்த ஒரு கூட்டு முயற்சியாக இல்லாது அங்கொன்று இங்கொன்றாகவே இருக்கின்றன.

எம்மை அழிப்பவர்களின் தலைமைதான் மாறியிருக்கிறது. தமிழர்கள் மீதான வன்மமும் எங்களுக்கு எதிரான சதியும் தொடர்ந்த வண்ணம்தான் உள்ளன. மன்னாரில், கடந்த வருடங்களில் அதானி நிறுவனத்தின் துணையுடன் காற்றாலைகள் அமைக்க போடப்பட்டிருந்த திட்டத்தை மன்னார் மக்கள் கடுமையாக எதிர்த்திருந்தார்கள். அதானி நிறுவனமும் பின்வாங்கியிருந்தது. அந்தத் திட்டம் கைவிடப்படும் என்று மக்கள் நம்பியிருந்தனர்.

தமிழ் மக்களின் ஓட்டுகளை தனதாக்குவதற்காக தமிழர்களின் காவலனாக நாடகமாடும் புதிய சிங்களத் தலைமை அந்தத் திட்டத்தை தன் கையில் எடுத்திருக்கிறது. அங்கு காற்றாலை அமைக்கும் காரியத்தை கனகச்சிதமாக நகர்த்திச் செல்கிறது. ராஜபக்சவின் பினாமிகள் கட்டுப்பாட்டில் இருக்கும் ஹெய்லிஸ் ஃபென்ரன் நிறுவனத்திடம் (Hayley's Fenton Ltd) ஜேவிபி அரசு அந்தக் கைங்காரியத்தை ஒப்படைத்திருக்கிறது.

காற்றாலை அமைக்கப்படவுள்ள இடம் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதி. காற்றாலைகள் அமைக்கப்பட்டால் 50,000 இற்கு மேற்பட்ட மக்கள் வாழும் குடியிருப்புகள் சாதாரண மழைக்கே வெள்ளத்தில் மூழ்கிவிடும். அத்துடன் அந்த மக்களின் வாழ்வாதாரமான கடற்தொழிலும் கடுமையாகப் பாதிக்கப்படும். மக்கள் மேல் உண்மையான கரிசனையுள்ள அரசாக இருந்தால் மக்களின் நியாயபூர்வமான எதிர்ப்புகளை செவி மடுத்திருப்பார்கள்.

காற்றாலை அமைக்கவுள்ள நிறுவனத்தினை, அதன் பெரிய பங்குதாரர்களாக இருக்கும் தம்மிக்க பெரேரோவும், ரேயினர் சில்வாவும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். இருவருமே ராஜபக்சவின் பினாமிகள். சூதாட்ட வர்த்தகர் தம்மிக்க 575 மில்லியன் ரூபா வரி ஏய்ப்பு செய்ததும், 5 மில்லியன் ரூபா அரச பணத்தை முறைகேடாக நாமல் ராஜபக்சவின் இளைஞர் அமைப்பிற்கு வழங்கிய குற்றச்சாட்டில் முன்பு கைதாகியவர் என்பதும் அநுரவுக்கு நன்கு தெரியும்.

இந்தத் திட்டத்தை அரங்கேற்றுவதற்கு முக்கிய சூத்திரதாரியாக அநுரவோடு கைகோர்த்து நிற்பவர் ஜேவிபியின் தற்போதைய மின்சக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி அவர்கள். சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக்காலத்தில், அநுர விவசாயத்துறை அமைச்சராக இருந்தபோது, உரக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 8 மில்லியன் ரூபாய்களைத் திருடியவர் இதே ஜெயக்கொடி.

ஒரு திருடனை அநுர மின்சக்தி அமைச்சராக நியமித்திருப்பது அவரின் நேர்மையை கேள்விக்குறி ஆக்குகின்றது. அப்படி இருக்கையில் ஊழலை ஒழிக்கப்போவதாக முழக்கமிடும் ஒரு தலைமையை எப்படி நம்ப முடியும்?

தனக்கு ஆதரவு திரட்டுவதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த புதிய தலைமை மக்களின் பிரச்சனைகளை தான் காதுகொடுத்துக் கேட்பதாகவும், அவற்றைத் தீர்த்து வைக்க தன்னாலான அனைத்தையும் செய்வதாகவும் எத்தனை வாக்குறுதிகளை அள்ளித் தெளித்தது? அதே தலைமைதான் 240 இற்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் கிடைத்த செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதியை திரும்பிக்கூடப் பார்க்காமல் கடந்து போனது.

கொலைகள், சித்திரவதைகள், காணாமல் ஆக்கப்படுதல்கள், சொத்து அபகரிப்பு போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் நேரடித் தொடர்புடையவர்களாக ஆதாரங்களோடு முந்திய தலைமைகளும் அவர்களது வாரிசுகளும் அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள். இருந்தும் அவை எவற்றையும் விசாரிக்காத அநுர அரசு, கையாடல் செய்ததாக கைது செய்வதும் பின்னர் பிணையில் விடுவிப்பதுமாக விசாரணை நாடகமாடுகிறது.

ஆக, பெரும்பான்மை இனத்தவர்களின் குற்றங்கள் எதற்கும் அநுர அரசு தண்டனை வழங்கப் போவதில்லை. இந்த அரசும் முந்தைய இனவாதத் தலைமைகள் போலவே குற்றவாளிகளுக்கு உயர் பதவிகள் வழங்கி கௌரவித்து வருகிறது. இந்த நிலையில் எங்கள் குரல்கள் பலவீனமாக ஒலித்தால் எவரும் செவிமடுக்கப் போவதில்லை. ஒன்று திரண்டு உரக்கக் குரலெழுப்பி எங்களின் ஏகோபித்த உணர்வலைகளைக் காட்ட வேண்டும். மன்னார் மக்களுக்காக அனைத்து மக்களும் ஒன்றிணைய வேண்டும்.

திலீபன் மண்ணைவிட்டுப் பிரிந்து விட்டாலும் அவனது 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்' என்ற கோரிக்கை உயிர்ப்புடன்தான் இருக்கிறது.



ஐங்கரன் விக்னேஸ்வரா

# அகிம்சையின் உச்சமான திலீபன்!!
# அறவழியில் போராடிய காந்தி

15.9.1987 தமிழரின் உரிமைக்காக தன்னை மெழுகாய் உருக்கத் தொடங்கிய திலீபனின் உண்ணா விரதம் ஆரம்பமாகிய நாள். மகாத்மா காந்தி உருவாக்கிய அகிம்சை வழிப் போராட்டம், திலீபனின் தியாகத்தால் உச்சம் தொட்டதை உலகம் உணர முடிந்தது.



**தன்னுடலை** வருத்தி, நீர்கூட அருந்தாது தன்னுயிரை ஈகம் செய்த தியாகி திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவுகள் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சில் நீங்காத நினைவுகளாக நிறைந்திருக்கும் .

ஆயுதந் தரித்து களமாடிய விடுதலைப் போராளியான திலீபன், காந்தி தேசத்திடம் தமிழீழ மக்களுக்காக நீதிகோரி சாத்வீக வழியில் போராடினான். உடனயாக தீர்வு காணப் படவேண்டிய ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் மேற்கொண்ட பயணம், எமது விடுதலைப் போராட்டத்தில் உன்னதமான அர்ப்பணிப்பாகியது. பன்னிருநாட்கள் தன்னை உருக்கி உருக்கி எரிந்து அணைந்த அந்தத் தியாக தீபத்தின் நினைவுநாள் உலகம் எங்கும் அனுஸ்டிக்கப்படுகிறது.






## காந்தியும் திலீபனும் :

அகிம்சை ஒரு நெடிய போராட்டம். போராடிக் கொண்டே இருக்கலாம். முடிவு போராட்டத்தின் கையில் இல்லை. எதிராளியின் வலிமையைப் பொறுத்தே உள்ளது.

காந்தியால் இந்திய நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்று சில வருடம் முன்பாக தமிழ்நாடு ஆளுநர் ஆர் என் ரவி சொல்லி இருப்பதை பலரும் விமர்சித்து உள்ளனர்.

இவ்வேளையில் அகிம்சையின் உச்சம் தொட்ட திலீபனின் தியாக த்தையும் உணர வேண்டும். மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் சொல்லியிருப்பது வன்மம் கலந்த நோக்கமே என்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளதுடன், முதல்வர் இதனை கடுமையாக சாடியுள்ளார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ரவி பங்கேற்று பேசியபோது மகாத்மா காந்தி குறித்து ஆளுநர் பேசிய கருத்துக்கள்தான் விமர்சனத்திற்கு உள்ளானவை.

எனினும் காந்தியின் அகிம்சை பற்றியும், காந்தி பெற்றுத் தந்த இந்திய சுதந்திரம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் உள்ளன. ஏன்? மகாத்மா காந்தியை விட திலீபன் தியாகத்தால் சிறந்தவன் என இந்திய அரசியல் தலைவர்களே கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் காந்தி தேசத்தின் தமிழின விரோத நிலைப்பாட்டின் அழியா சாட்சியாக விளங்குவதே தியாக தீபம் திலீபனின் உயிர்க் கொடையாகும். திலீபனின் போராட்டம் மற்றொரு முறை அகிம்சை என்ற தத்துவத்தின் உண்மை நிலையை பிரதிபலிப்பதாகவே உள்ளது.

## காந்தியை விட திலீபன் மேலானவன் - வை.கோ:

திலீபன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு இருந்த போது, அன்றைய இந்தியத் தூதுவர் தீக்சித் இடம் திலீபனின் உண்ணாவிரதம் பற்றி பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தார்கள். அதற்குப் பதிலளித்த தீக்சித், திலீபன் என்ன மகாத்மா காந்தியா? என்று இறுமாப்புடன் தெரிவித்திருந்தார்.

இந்தியத் தூதுவர் தீக்சித்தின் இந்தக் கூற்று பற்றி பின்னர் கருத்துத் தெரிவித்திருந்த வை.கோபால்சாமி அவர்கள், திலீபன் மகாத்மா காந்தியைவிட சிறந்தவன் என்று அடித்துக் கூறியிருந்தார்.


திரு வைக்கோ, தனது இந்த வாதத்திற்காக மகாத்மா காந்தியின் சுயசரிதையான சத்திய சோதனையில் இருந்து ஒரு சம்பவத்தையும் எடுத்துக் காண்பித்திருந்தார்.

மகாத்மா காந்தியின் இளமைப் பருவத்தின் போது அவரது தந்தை காலமாகிவிட்டார். தந்தையின் பூதவுடல் அஞ்சலிக்காக வீட்டின் கூடத்தில் கிடத்தி இருக்கையில், தனது இளமை யின் பாலியல் உணர்ச்சிகளை காந்தியால் கட்டுப்படுத்த முடியாமல் மறைவில் சென்று அதனை தீர்த்துக் கொண்டதாக சத்திய சோதனை யில் காந்தி தெரிவித்திருந்தார். இளவயதின் உணர்ச்சிகளை மகாத்மாவினாலேயே அடக்க முடியாது இருந்துள்ளது. ஒரு சோகமான நேரத்தில்கூட மகாத்மாவினால் தனது பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்த முடியாமல் அதற்கு வடிகால் தேடிச் சென்றுள்ளார்.

ஆனால் திலீபனோ தனது இள வயதில், அந்த வயதிற்கான அனைத்து உணர்ச்சிகளையும்








உதறித் தள்ளிவிட்டு, தனது கொள்கைக்காக தன்னுயிரை தியாகம் செய்ய முன்வந்திருந்தான். இதனாலேயே மகாத்மா காந்தியை விட திலீபன் மேலானவன் என வை.கோபால்சாமி தெரிவித்திருந்தார்.

### ஒப்பிலா அறவழிப் போராளி திலீபன்:

'நான் மனரீதியாக, ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து இறுதி விடைபெறுகிறேன்' - தன்னுடலுக்கு துரோகமும் தன்னினத்திற்கு தன்னையும் தந்த ஒப்பிலா அறவழிப் போராளி திலீபனின் இறுதி வார்த்தைகளே இவையாகும்.

தமிழீழம் என்பது சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிந்த ஒரு சமதர்ம சோசலிச தமிழீழமாகத் தான் மலரும் என்ற விடுதலைக் கனலை விழியில் ஏந்திய பார்த்திபன் இராசையா என்னும் இயற்பெயர் கொண்டவர் திலீபன். இவர் நவம்பர் 29, 1963-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள வலிகாமம் பிரதேசத்தின் ஊரெழு கிராமத்தில் ஆசிரியருக்கு மகனாகப் பிறந்தவர்.

சிறு வயதிலேயே தாயினை இழந்தார். தந்தையின் பாசம், இரு அண்ணன்களின் அரவணைப்பு என மிகவும் செல்லமாக வளர்ந்த திலீபன் படிப்பிலும், அறிவுக் கூர்மையிலும் மிகுந்த திறனுடையவராக இருந்தார்.




இலங்கை அரசு தமிழ் மாணவர்களின் கல்வியை நாசப்படுத்த கொண்டு வந்த தரப்படுத்துதல் அளவையும் தாண்டி அதிக மதிப்பெண் எடுத்து யாழ் மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு தேர்வாகி படிக்கச் சென்றார். மருத்துவம் படித்து மக்களுக்கு சேவை செய்ய நினைத்த மகத்தான மனிதன் தன்னின மக்கள் சிலரிடம் நோயாக மாறியிருந்த இனவுணர்வுக் குறைபாட்டை போக்க தனது உயிரையே மருந்தாக அளித்த துயரமும் நடந்தேறியது.

காந்தியின் அகிம்சை வழியில் தன் விடுதலையை பெற்றெடுத்ததாக கூறும் இந்தியா, உலகெங்கிலும் அகிம்சை குறித்து அறிவுரை கூறிக் கொண்டிருக்கும் இந்தியா, அகிம்சை போராட்டத்தை கையிலெடுத்த திலீபனுக்கு அளித்த பரிசு இது தான்.

உண்மையில் அகிம்சை மூலமாக இந்தியா விடுதலை பெற்றது என்பதுகூட இந்திய விடுதலையை ஒட்டி எழுப்பப்பட்ட மிகைப் படுத்தப்பட்ட பிம்பம் தானே தவிர அகிம்சை மட்டுமே இந்தியாவின் விடுதலைக்கு காரணமாக அமைந்து விடவில்லை. இந்திய விடுதலை அகிம்சையினால் நிகழ்ந்தது என்றால் அதனைவிட ஆயுதமேந்தி போராடிய இந்திய வீரர்களை மறந்துவிட முடியாது.

தமிழ் நாடு ஆளுநரின் கருத்துக்கு கண்டனங்கள் எழுந்தாலும், காந்தியின் அகிம்சையும் திலீபனின் உயிர்க் கொடையையும் ஒரே தட்டில் ஒப்பிட முடியாது. திலீபனுக்கும், காந்திக்கும் நிறைய வேறுபாடு உள்ளது. திலீபன் காந்தீய வழியில் தன் போராட்டத்தை முயன்றார். ஆனால் காந்தி போல உயிர் வாழ முயலவில்லை. திலீபன் தன் உயிரை ஒரு பொருட்டாக கருதவில்லை. தியாகத்தின் உச்சத்திற்கே திலீபன் சென்றார்.




ராஜ்

# மீண்டும் பற்ற வைக்கப்பட்டிருக்கும் மாகாண சபை தேர்தல் விவகாரம்

**நீண்ட வரலாற்றைக்** கொண்ட ஈழத் தமிழினம் தங்களது அரசியல் உரிமைக்காகவும் தங்களது மண்ணுக்காகவும் போராடிப் போராடி ஒய்ந்த போதெல்லாம், அவர்களது போராட்ட வடிவங்கள் ஏதோவொரு விதத்தில் அவர்களை தட்டி எழுப்பிக்கொண்டே வந்திருக்கின்றன.

ஈழத் தமிழர்களுடைய போராட்டத்துக்கு இத்தனை வயது என எவராலும் வரையறுத்துவிட முடியாது. காரணம், அவர்களது போராட்டம் வெவ்வேறு வடிவங்களில் ஆண்டாண்டு காலமாக நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

அகிம்சை வழி போராட்டம், ஆயுத போராட்டம் என போராடிய தமிழினம் இன்று எந்த வடிவில் போராட்டத்தை முன்னெடுப்பது என்று தெரியாமல் நட்டாற்றில் விடப்பட்ட ஒரு இனமாக, நெஞ்சில் வலிகளையும் சுமைகளையும் சுமந்துகொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

2009 முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்திற்கு பின்னர் தமிழர்கள் தங்களது எதிர்காலம் என்னவாகப் போகிறது என்ற கேள்வியுடனேயே அடுத்த கட்டத்துக்கு நகர ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு அன்று எழுந்த




கேள்வி இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

மக்களோடு நின்று பணியாற்றாத தலைவர்கள், ஈழத் தமிழருடைய போராட்டத்தில் பங்கெடுக்காதவர்கள் தமிழர்களுக்கு தலைவர்களாக திடீரென உருவெடுத்தமை, சர்வதேசத்தின் அதீத தலையீடுகள், தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழர் தாயகத்தில் உட்புகுத்திய நிகழ்ச்சி நிரல்கள் என நாலா பக்கத்திலிருந்தும் இறுக்கப்பட்ட ஒரு இனமாக தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் வாழ்ந்து வருகிறார்கள்.

இன்று தமிழ் மக்கள் சுயமாக எந்த விடயத்தையும் செய்ய முடியாத ஒரு இனமாக இறுக்கப்பட்டிருக்கிறது. தமிழர் தாயகத்தில் எது நடக்க



வேண்டுமாக இருந்தாலும் சீனாவின் தலையீடு, இந்தியாவின் தலையீடு, ஆட்சியாளர்களின் தலையீட்டின் ஊடாகவே எந்த விவகாரமாக இருந்தாலும் நகர வேண்டியிருக்கிறது.

அந்த அடிப்படையில் தான் அண்மைக் காலமாக மாகாண சபைத் தேர்தல் தொடர்பான பேச்சுக்களை பார்க்க வேண்டியிருக்கிறது. அதிலும் கடந்த 17 ஆம் திகதி இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் நடைபெற்ற தமிழ் ஊடக நிறுவன பிரதானிகளுடனான சந்திப்பின் போது இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்த கருத்துக்கள் தற்சமயம் பேசுபொருளாக மாறியிருக்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையே ஒருமித்த நிலைப்பாடு இருந்தால் மாத்திரமே மாகாணசபை தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை இந்தியாவினால் முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும் என்றும் மாகாண சபையை வலியுறுத்தும் தமிழ் பேசும் அரசியல் கட்சிகள், சில சந்தர்ப்பங்களில் அந்த மாகாண சபை தேவையில்லை என்றும் தெரிவிக்கும் நிலைப்பாடு இருந்து வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அதேவேளை, இவ்வாறான நிலையில் இவ் விடயத்தில் இந்தியா ஒருமித்த நிலைப்பாட்டை முன்னெடுத்து இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதில் சிக்கல் நிலை இருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

1987 ஆம் ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி 13 ஆவது அரசியல் திருத்தத்தின் கீழ் மாகாணசபை முறைமை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இது தமிழ் மக்களுக்காகவும் தமிழ் மக்கள் வாழும் வடக்கு -கிழக்கு மாகாணங்களை முதன்மைப்படுத்தியுமே கொண்டுவரப்பட்டது.

குறித்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியதன் பின்னர் தேர்தல் முதன் முறையாக 1988 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 04 ஆம் திகதி நடைபெற்றது. இறுதியாக 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்றது.

அதேபோல், வட மத்திய மாகாணத்திற்கு ( 08.09.2012 ) சப்ரகமுவ மாகாணத்திற்கு (08.09.2012) மத்திய மாகாணத்திற்கு (21.09.2013) வட மாகாணத்திற்கு (21.09.2013) வடமேற்கு மாகாணத்திற்கு (21.09.2013) மேற்கு மாகாணத்திற்கு (29.03.2014) தென் மாகாணத்திற்கு (29.03.2014) ஊவா மாகாணத்திற்கு (20.09.2014) இறுதியாக தேர்தல் நடைபெற்றது.

இந்நிலையில் 10 வருடங்களுக்கு மேலாக மாகாண சபைகள் முடங்கிப் போயிருக்கும் நிலையிலேயே இந்திய உயர்ஸ்தானிகர் இந்த கருத்தை வெளியிட்டிருக்கிறார். இங்கு உயர்ஸ்தானிகர் தெரிவித்திருக்கும் ஒற்றுமை என்ற விடயம் நீண்டகாலமாக பேசப்பட்டு வரும் விவகார மாகும்.

ஆனால் தமிழர் தாயகத்தில் அந்த ஒற்றுமை என்பது சிதறிப்போன ஒரு விடயமாக மாறி யிருக்கிறது. அதனை இனிவரும் காலங்களில் சாத்தியமாக்க முடியும் என்பது எட்டாக் கனியான விடயமாகும்.

அதனைவிட சந்தோஷ் ஜா ஒரு விடயத்தை உணரவேண்டும். தமிழ் மக்களோ அல்லது தமிழ்த் தலைவர்களோ ஒற்றுமையாக நின்று கோரிக்கை வைத்ததனால் தானா இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது? அல்லது இந்தியா இதுவரை ஈழத் தமிழர்களும் தமிழ் தலைவர்களும் ஒற்றுமையாக நின்று கேட்டவற்றையா கொடுத்திருக்கிறது? இல்லை, தமிழ் மக்களின் கோரிக்கைகளையா நிறைவேற்றியிருக்கிறது?

**மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இலங்கை அரசியலில் பேசப்பட்டு வரும் கருத்துக்கள். ஈழத் தமிழர்களுக்கு முன்னால் இருக்கக்கூடிய பிரச்சனைகளை மழுங்கடிக்கும் ஒரு நரித்தன அரசியலாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. ஏமாற்றங்களால் வடிவமைக்கப் பட்டிருக்கும் ஈழத்தமிழரது அரசியலில் இந்தியாவின் வகிபாகமும் அதிகமாக இருக்கிறது. ஆகவே ஈழத் தமிழர்களை இனியும் ஏமாற்றாது அந்த மக்கள் கேட்பவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து அதன் பின்னால் இந்தியா நிற்கும் ஒரு சூழலை ஏற்படுத்துவதே ஈழத் தமிழினத்துக்கு செய்யும் பெரிய உபகாரமாக இருக்கும்.**

இன்றுவரை இந்தியா அப்படியொன்றை ஈழத் தமிழர்களுக்கு செய்ததில்லை. எல்லாமே தன்னிச்சையாகவும் இலங்கையின் ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்பவுமே ஈழத் தமிழர்களை இந்தியா கையாண்டிருக்கிறது.

அப்படியிருக்கையில், மாகாண சபை தேர்தலை நடத்துவதில் மாத்திரம் ஈழத்தமிழ் மக்களின் தலைவர்களின் ஒற்றுமையை பரிசோதனைக்கு உள்ளாக்குவதன் இந்தியாவின் வகிபாகம் என்ன?

முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு இந்தியாவின் பங்களிப்பு அபரிமிதமாக இருந்ததாக இலங்கையின் சிங்கள தலைவர்கள் அடிக்கடி பெருமிதத்துடன் கூறிவருவதை அவதானித்திருக்கிறோம். அப்படியென்றால் இலங்கை அரசுடன் இணைந்து அந்த பேரவலத்தை செய்வதற்கு இந்தியாவுக்கு எந்த தமிழ் தலைவர்கள் ஒற்றுமையுடன் கோரிக்கையை முன்வைத்தார்கள்?

உண்மையை சொல்ல வேண்டுமாக இருந்தால், தமிழ்த் தேசிய தலைவர்களிடத்தில் இருக்கும் பிளவை பயன்படுத்தி இந்தியா தமிழர்களின் விவகாரத்திலிருந்து நழுவும் போக்கை கடைப்பிடிப்பதையே உயர்ஸ்தானிகரின் கருத்து வெளிப்படுத்துகிறது.

இந்தியா எந்தக் காலத்திலும் தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்ததாக வரலாறு இல்லை. இன்றும் சர்வதேச அரங்கில் இலங்கை ஆட்சியாளர்களை காப்பாற்றுவதில் இந்தியாவே முன்னணியில் இருந்து வருகிறது.

பூகோள அரசியல் பரப்பில் எந்தக் காலத்திலும் இலங்கை இந்தியாவுக்கு தேவையான ஒரு நாடாக இருந்திருக்கிறது. அதற்காகவே இலங்கை விவகாரத்தில் மூத்த அண்ணனை போல் இந்தியா எந்நேரத்திலும் மூக்கை நுழைத்துக் கொண்டு வந்திருக்கிறது.

13 ஆவது திருத்த சட்டமாக இருக்கட்டும் அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவத்தை தமிழர் தாயகத்தில் இறக்கி தமிழர்களை வேட்டையாடியதாக இருக்கட்டும் 2009 இல் தமிழர்களை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு உதவியதாக இருக்கட்டும் இப்படி எல்லா சந்தர்ப்பத்திலும் தனது பூகோள நலனை முன்னிறுத்தி அந்தந்த காலகட்டத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு இலங்கைக்கு



ஒரு அணிலாக இந்தியா இருந்திருக்கிறது. இன்றும் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகவே இந்திய உயர் ஸ்தானிகர் பேசியிருக்கிறார். அதாவது இலங்கையின் ஆட்சியாளர்கள் மாகாண சபை என்ற முறையை இல்லாமல் ஆக்குவதற்கு முயற்சிகளை எடுத்துவரும் நிலையில், மாகாண சபைத் தேர்தலில் தாங்கள் (இந்தியா) தலையிடாமல் இருப்பதற்கு தமிழ் தலைவர்களின் ஒற்றுமையின்மையே காரணம் போன்ற தொனியில் பேசி இலங்கை ஆட்சியாளர்களின் மறைமுக திட்டத்துக்கு ஆதரவாக அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மாகாண சபை முறைமையினால் ஈழத் தமிழர்கள் கண்டவை எதுவுமல்ல. அதிகாரங்கள் முழுவதையும் மத்தியில் வைத்துக் கொண்டு வெறும் சக்கையை (மாகாண சபை) வைத்துக்கொண்டு ஈழத்தமிழர்கள் எதனையும் சாதிக்கப் போவதில்லை.

ஆகவே மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இலங்கை அரசியலில் பேசப்பட்டு வரும் கருத்துக்கள், ஈழத் தமிழர்களுக்கு முன்னால் இருக்கக்கூடிய பிரச்சனைகளை மழுங்கடிக்கும் ஒரு நரித்தன அரசியலாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. ஏமாற்றங்களால் வடிவமைக்கப் பட்டிருக்கும் ஈழத்தமிழரது அரசியலில் இந்தியாவின் வகிபாகமும் அதிகமாக இருக்கிறது.

ஆகவே ஈழத் தமிழர்களை இனியும் ஏமாற்றாது அந்த மக்கள் கேட்பவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து அதன் பின்னால் இந்தியா நிற்கும் ஒரு சூழலை ஏற்படுத்துவதே ஈழத் தமிழினத்துக்கு செய்யும் பெரிய உபகாரமாக இருக்கும்.



# பார்த்திபன் கனவு



நல்லூரின் வீதியில்
நல்லதோர் தீபம்
விடியலை வேண்டி
வீதியில் தவமிருந்தது!

ஊனை உருக்கி
உயிரினை கருக்கி
விடிந்திடும் என்றெண்ணி
விரதமிருந்தது!

சுதந்திரம் மலரும்
சுபீட்சங்கள் பிறக்கும்
தமிழீழம் நாளை நமதாகும் என
பார்த்தீபன் நினைத்தான்!

பலருக்கு இன்று பார்த்தீபன்
நினைவில்லை.
சிலரோ
இன்று அவன்
தூபிக்கு தீபமேற்றி
தங்களை
வெளிச்சப்படுத்தி கொள்கின்றனர்!

அந்த
இளம் நெருப்பு
ஏன் அணைந்தது என்று
எத்தனை பேருக்கு தெரியும்?

தியாக தீபத்தின் கனவை
மெய்படுத்த
எம்மில் எத்தனை பேர்
எத்தனிக்கிறோம்?

எண்ணிப் பார்ப்போம்
அவன் கனவை!
ஏந்தி நடப்போம் இன்னாளில்...!

-ஈழவன் அனுராஜ்

ஐங்கரன்



# ஐ.நா. மனித உரிமை பேரவை: தீர்மானங்களை ஏற்க மறுக்கும் சிறிலங்கா

**கடந்த** வருடமும் ஜெனீவா தீர்மானத்திற்கு அனுர அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தது. சர்வதேச போர் குற்ற பொறிமுறை இல்லை என்றும் சிங்கள தேசத்தின் ஜேவிபி அரசும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை தொடர்பான எந்தவொரு ஜெனீவா தீர்மானத்திற்கும் அனுர அரசாங்கம் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்துள்ளது. சர்வதேச போர்க்குற்ற

ஆதாரங்களை சேகரிக்கும் பொறி முறையையும் ஏற்றுக் கொள்ளாது எனவும் தெரிவித்துள்ளது.

தற்போதும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையை ஏற்க முடியாது என்றும், ஐநா ஆணையாளரின் இறுதி அறிக்கை துல்லியமாகவும், சமநிலையுடனும் அமைய வேண்டும் எனவும் ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பணிமனை அண்மையில் தெரிவித்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேர வையின் 60 ஆவது அமர்வு செப்டம்பர் எட்டாம்

**கடந்த காலங்களில் ஐ.நா. மனித உரிமை பேரவை ஆணையாளரின் அறிக்கையை ஏற்க மறுக்கும் சிறிலங்கா அரசின் நிலைப்பாடு என்பது இனவாத நிலைப்பாட்டையே வெளிப்படுத்துகிறது.**





நாள் ஆரம்பமாகியுள்ளது. இதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தொடர்பிலேயே ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பணிமனை மேற்கண்டவாறு கூறியுள்ளது.

## 57/1 தீர்மானத்தை இலங்கை ஏற்காது:

கடந்த காலங்களில் ஐ.நா. மனித உரிமை பேரவை ஆணையாளரின் அறிக்கையை ஏற்க மறுக்கும் சிறிலங்கா அரசின் நிலைப்பாடு என்பது இனவாத நிலைப்பாட்டையே வெளிப்படுத்துகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஃ1 தீர்மானத்தை இலங்கை ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தத் தீர்மானத்தின் கீழ் செயற்படுத்தப்படும் பொறுப்புக் கூறல் திட்டத்தை சிறிலங்கா அரசு தொடர்ந்து எதிர்க்கின்றது. இது போன்ற வெளிப்புறத் திட்டங்கள் உள்நாட்டு நல்லிணக்க முயற்சிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடனும் அதன் நிரந்தர மனித உரிமைகள் பொறிமுறைகளுடனும் இலங்கை நெருக்கமான ஒத்துழைப்பை பேணி வருகின்றது. இதனால், இலங்கை தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் இறுதி அறிக்கை துல்லியமாகவும், சமநிலையுடனும் அமைய வேண்டும் என்றும் ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பணிமனை குறிப்பிட்டுள்ளது.

**தமிழ் இனம் சிங்கள தேசத்தால் மாபெரும் இனப் படுகொலையை சந்தித்து அதற்காக சர்வதேச ரீதியாக போராடி வருகிறது. அதுபற்றி எந்தவித கரிசனையுமற்று சிங்கள தேசத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி சிங்களவர்கள் மட்டும் சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ்ந்தால் பொதுமென்று தமிழரை வைத்தே தம்மை பலப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது தற்போதைய அநுர அரசு. உண்மையில் புலம்பெயர் தமிழ் மக்களை நோக்கியும் தற்போதய அநுர அரசின் செயற்பாடுகள் திசை திரும்பியுள்ளது.**

அத்துடன், சிறிலங்காவில் மனித உரிமைகள் நிலைமையை மேம்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள், தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்தும் அந்த அறிக்கை விவரித்துள்ளது.

முன்னதாக, இராணுவம் மற்றும் படையினரின் மோசமான மனித உரிமைகள் மீறலை இலங்கை அரசு ஒப்புக்கொள்ளத் தவறிவிட்டது. இலங்கை ரோம் சட்டத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வலியுறுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## நிலையான அமைதிக்கான அடித்தளம்:

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழு சுவிட்சர்லாந்து நோக்கி பயணமாகியுள்ளது.

பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உரையாற்றவுள்ளார். அத்துடன், ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் ஐ அமைச்சர் விஜித ஹேரத் சந்திக்கவுள்ளார். இதேவேளை, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை தொடர்பான அறிக்கையை முன்வைக்க உள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான குறித்த முற்கூட்டிய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நிலையான அமைதிக்கான அடித்தளத்தை அமைத்து மாற்றத் தக்க சீர்திருத்தங்களைச் செயற்படுத்தவும் உண்மை மற்றும் நீதியை வழங்கவும் இலங்கை முழுவதுமுள்ள சமூகங்களிடமிருந்து புதிய அரசாங்கத்திற்கு வரலாற்று வாய்ப்பும் தெளிவான மக்கள் ஆணையும் கிடைத்துள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கத்தின் தேசிய ஒற்றுமை என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதற்கும் இனம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு



காட்டப்படாத ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கும் பொறுப்புக் கூறலை உறுதி செய்வதும் மோதலின் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதும் இன்றியமையாதவையாகும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

சிறிலங்கா நாட்டின் சர்வதேச மனித உரிமை கடமைகளுக்கு இணங்க அடிப்படை அரசியலமைப்பை மேற்கொள்வதும் சட்ட மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை மேற் கொள்வதும் மாற்றத் தக்க சீர்திருத்தங்களை ஏற்படுத்துவது அவசியமெனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கான பாதையில் இலங்கைக்கு உதவ ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான குழுவுடன் இணைந்து செயற்பட மனித உரிமைகள் பேரவை தொடர்ந்தும் தயாராக உள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு தடை விதிக்கவும் அதனை இரத்து செய்வதை விரைவுபடுத்தவும் அதற்கான எந்தவொரு மாற்றுச் சட்டமும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிபுணர்களால் இதற்கு முன்னர் வகுக்கப்பட்ட அளவுகோல்களுடன் இணங்குவதை உறுதி செய்வதும் அவசியம் என அந்த அறிக்கையின் முக்கியமான பரிந்துரைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

## சிறிலங்கா உறுதிமொழியை நிறைவேற்றுமா?

ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கை தொடர்பான இணைத்தலைமை நாடுகளின் அறிக்கை முன்வைக் கப்பட உள்ளது.

கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கம் தாம் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என விசேடமாக வலியுறுத்தப்பட்டது. மேலும், வலிந்து காணாமல் ஆக்கப்படுதலால் ஏற்படும் துன்பங்கள் மற்றும் அனைத்து சமூகங்கள் மீதான அதன் தாக்கத்தையும் நிவர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் பேரவை யின் பரிந்துரைகளைச் செயற்படுத்த வேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளது.

தீவிரவாத எதிர்ப்பு மற்றும் இணையப் பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் உட்பட இலங்கையினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் எந்தவொரு புதிய சட்டமும், அனைவரதும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது உட்பட அதன் மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றுவது மிகவும் முக்கியம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீதித்துறை சுதந்திரம், நாட்டின் சட்ட நிறுவனங்களின் சுதந்திரம் மற்றும்



வெளிப்படைத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து காணிகள் விடுவிக்கப்படுவது தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் காணி அபகரிப்பு தொடர்பான பதற்றங்கள், தன்னிச்சையான கைதுகள், ஒழுங்கற்ற தேடுதல்கள் மற்றும் தடுப்புக்காவலின் போது மோசமான முறையில் நடத்தப்படல் போன்ற நிலைமைகள் குறித்து அதீத கரிசனை கொள்ள வேண்டியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## அனுரவின் அரசியல் நிலைப்பாடு:

சிங்கள பௌத்த மேலாதிக்க மனோநிலையோடு அதிகாரத்திற்கு வந்துள்ள இலங்கையின் புதிய ஜனாதிபதி அனுர அவர்களின் அரசியல் நிலைப்பாடுகள், குறிப்பாக அவரின் கடந்த கால அணுகுமுறைகள் தமிழ் மக்களுக்கு தெரிந்த வரலாறாகும்.

தமிழ் இனம் சிங்கள தேசத்தால் மாபெரும் இனப் படுகொலையை சந்தித்து அதற்காக சர்வதேச ரீதியாக போராடி வருகிறது. அதுபற்றி எந்தவித கரிசனையுமற்று சிங்கள தேசத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி சிங்களவர்கள் மட்டும் சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ்ந்தால் பொதுமென்று தமிழரை வைத்தே தம்மை பலப்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது தற்பொதைய அனுர அரசு.

உண்மையில் புலம்பெயர் தமிழ் மக்களை நோக்கியும் தற்போதய அனுர அரசின் செயற்பாடுகள் திசை திரும்பியுள்ளது.



# அழகே அழகு!



வயல் நடுவில் ஒரு மரம்.
அதில்....
சேலையில் கட்டப்பட்ட தூளி
அதில் உறங்கும் குட்டிக் குழந்தை.
பிஞ்சு விரல்களால்
சேலையின் விளிம்பில் பிடித்து
எட்டிப் பார்க்கும்
அழகே அழகு!

பள்ளி செல்லும் வயதில்
அம்மா தன் முந்தானையால்
என் முகம் துடைக்கும்
அழகே அழகு!

பத்துவயதில்
சேலை கட்ட ஆசைப்பட்டு
கட்டத் தெரியாமல்
சுற்றிக் கொண்டு
தடுக்கி விழும்
அழகே அழகு!

பெரியவளானதும்
தாய்மாமன்
கொடுத்த சேலையை
உடுத்தும் அழகே அழகு
பேரழகு!!

மணப்பந்தலில்
கூறைப் புடவை கட்டி
தலை குனிந்து வெட்கப்பட்டு
நடந்து வரும்
அழகே அழகு!

இறுதிப் பயணத்திலும்
பிறந்த வீட்டுக் கோடிக்காக
காத்துக் கிடக்கும்
உயிர் தொலைத்த உடல்..
சேலை என்பது ஆறுமுழ ஆடை
மட்டுமல்ல!
அது தமிழரின் ஒரு உணர்வு!!

-அன்புடன் முல்லை பாஸ்கர்




நவீனன்

# செம்மணியை தாண்டுமா அனுரவின் சிக்ஸர்?

**இன்று அனுரா அடிக்கப் போகும் கிரிக்கட் சிக்ஸர் எவ்வாறு என்பது யாவருக்கும் தெரியும். அதாவது தாயகத்தில் தமிழ் மக்களை திசை திருப்பி, சிங்கள மக்களையும் தன்பக்கம் திருப்பி, தானே இந்த நாட்டின் மிகவும் சமாதான விரும்பியாக, தேசிய வீரனாக தன்னை காட்டிக் கொள்ள முயல்கின்றார்.**

**இத்தனை** ஆயிரம் தமிழ் பேசும் மக்களின் உயிர்களின் மேலாக, செம்மணி தாண்டி, யாழ்ப்பாணத்தின் மண்டைதீவில் அனுரவால் அமைக்கப்பட உள்ள கிரிக்கெட் மைதானமானது தமிழர்களுக்கு ஒரு அவமானகரமான அடையாளமாகவே பார்க்கப்படுகிறது.

## மண்டைதீவு புதைகுழிகள் மேல் மைதானம் :

1990 களில் யாழ்ப்பாணத்தில் மண்டைதீவில் சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கு எந்த ஒரு நீதியும் கிடைக்காத நிலையில், அவர்கள் உயிருடன் புதைக்கப்பட்ட நிலத்தில் கிரிக்கெட் மைதானம் என்பது அனுராவின் சிங்கள இனவாத அகங்காரத்தின் முகத்தை அப்பட்டமாக காட்டிக் கொள்கிறது.

தமிழர் தாயகத்தை உலுக்கிய செம்மணிப் படுகொலைகள், மண்டைதீவு புதைகுழிகள், இன்னும் பல ஆயிரம் புதைகுழிகளுக்கு இன்றுவரை நீதி கிடைக்கவில்லை. முப்பது ஆண்டுகள் கடந்து விட்டன. தமிழர் தாயகத்தை உலுக்கிய செம்மணிப் படுகொலைகளின்

பொய்யாகிப்போன நீதி விசாரணைகளால் கொல்லப்பட்ட அப்பாவி மக்களுக்கு நீதி இற்றைவரை கிடைக்கவேயில்லை.

ஈழத்தில் பல இடங்களில் தமிழர்கள் படு கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆயினும் இந்த சம்பவங்கள் நடைபெற்று பல ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும் இந்த சம்பவத்திற்கு காரணமானவர்கள் யாரும் இலங்கை அரசாங்கத்தினால் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும்.

இப்போது, யாழ்ப்பாணத்தில் சுமுக நிலை இருப்பது போல காட்டிக் கொண்டு, தமிழ் மக்களை திசை திருப்பும் வண்ணமே இத்தகைய விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட உள்ளன.

சர்வதேச நீதி பொறிமுறை வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி புலம்பெயர் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்நிலையில்

அவர்களை திசை திருப்பும் வண்ணமாகவே இத்தகைய வேலைகளை சிறிலங்கா அரசு திட்டமிட்டு செய்கிறது என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

செம்மணி படுகொலைகளிற்கான நீதிப் பொறிமுறை சர்வதேச அரங்கில் வேண்டும் என்றே பல சர்வதேச நாடுகள் விரும்புகின்றன. அவர்களையும் திசை திருப்ப வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட சதியாகவும் கூட இருக்கலாம்.

இன்று உலகளாவிய ரீதியில் தமிழர்களின் மனிதப் புதைகுழிகளுக்கு ஒரு நீதி வேண்டும் என்பது வேண்டப்படுகிறது. முக்கியமாக அனுர அரசின் அரசியல் நடவடிக்கைகள் எல்லாம், தமிழர்களின் உரிமைகளை தட்டிக் கழித்துவிட்டு யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தியும் அங்கு வாழும் மக்களுக்கு பெரும் நன்மையை ஏற்படுத்தி வருகிறது போல காட்ட முயல்வது தெரிகிறது.

## விளையாட்டும் - வீதி அபிவிருத்தியும்:

விளையாட்டும், வீதி அபிவிருத்தியும் என்பதை காட்டிக்கொண்டு ஸ்ரீலங்காவின் தற்போதைய அரசு, தனது முன்னைய அரசுகளின் இன அழிப்பு வேலைகளை மிக காத்திரமாக மறைத்து செயல்படுகின்றது. அதற்கு ஒத்து ஊதுபவர்களாக, சில தமிழர்களும் செயற்பட்டு வருவதும் கவலைக்குரிய விடயமாகும்.




இன்று அனுரா அடிக்க போகும் கிரிக்கட் சிக்ஸர் எவ்வாறு இருக்கும் என்பதும் எல்லோருக்கும் தெரியும். அதாவது தாயகத்தில் தமிழ் மக்களை திசை திருப்பி, சிங்கள மக்களையும் திசை திருப்பி தானே இந்த நாட்டின் மிகவும் சமாதான விரும்பி என்பது போல தன்னை காட்டிக் கொள்ள முயல்கின்றார்.

அனுரவும் ஒரு சிங்கள தேசத்தின் ஒரு இனவாத அரசியல் இருந்தே உருவாகியவர் என்பதை நாங்கள் மறக்க முடியாது. அவரது அரசியல் பின்புலங்களை நாங்கள் திரும்பிப் பார்த்தால், அனுர வந்த பாதை என்பது பல்வேறு வகையிலும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானவர் என்பதை உணர்த்தி நிற்கின்றது. நீண்ட காலம் தமிழர்களுக்கு எதிராக இருந்ததுடன் முன்னைய இனவாத அரசுகளுக்கு பக்கத் துணையாக அனுரவின் அரசியல் பயணம் இருந்தது என்பது நிரூபிக்கப்பட்டது.

இப்போது தன்னை சமாதான விரும்பியாக காட்டிக் கொள்வது, இன்றைய காலத்தில் அரசியலுக்காக தன்னை போலியாக மாற்றிக் கொண்ட விடயமாகவே கருதலாம். இவரின் வேறுபட்ட இனவாத அரசியல் செயல்பாடுகளும், தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் நிலைப்பாடுகளும் நீண்டகாலமாக அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

முன்னாள் ஸ்ரீலங்கா அரசின் அரசியல் தலைவர்கள் தங்களை நேரடியாகவே இனவாதிகளாகவும் அதே சமயம் சிங்கள மக்களுக்கு





தங்களை சிங்கள தேசிய வீரர்களாகவும் காட்டிக் கொண்டதை வரலாறு காட்டுகிறது.

## பட்டலந்த வதைமுகாமும் ரணிலும் :


1987- 1989 ஜேவிபி கிளர்ச்சியினருக்கு எதிரான பட்டலந்த வதை முகாம் கொடுமைகளை ஜே.வி.பி யினர் ஆட்சியதிகாரத்துக்கு வந்ததன் பின்னர், சுமார் 37 ஆண்டுகளுக்கு முந்திய உண்மைகளை இப்போது வெளிக்குக் கொண்டு வந்துள்ளனர்.

ஜே.வி.பி. யினர் ஆட்சிக்கு வந்த பின்னரே ஜே.வி.பி யினருக்கு எதிரான சட்டவிரோதக் கொடிய செயல்களை அம்பலத்துக்குக் கொண்டு வருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆனால் வடக்குக் கிழக்கில் பட்டலந்தை போன்ற வதை முகாம்கள் பல இருந்தன. அரச படைகளாலும், இராணுவ துணைக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு இதுவரை விசாரணைகள் எதுவும் நடைபெறவில்லை.

இவற்றை ஆராய்ந்து நீதி வழங்கும் நேர்மை கடந்தகால சிங்கள அரசாங்கங்களுக்கு இருக்கவில்லை. தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தமது ஜேவிபி சகாக்கள் கொல்லப்பட்டதனால் பட்டலந்த வதைகள் கொலைகளை விசாரிக்க முன்வந்தது என்பதும் உண்மையே.

இந்த விவகாரத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட ரணில் மீது இந்த அரசு நீதி விசாரணை நடத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. ஆனாலும்




அண்மையில் நடந்த ரணில் கைது நாடகம் இதற்கு மாறாகவே நடந்துள்ளது.

ரணில் மீதான அப்பட்டமான பல குற்ற விசாரணைகள் இருந்தாலும், ஜேவிபி அரசு, மிகப் பலவீனமான, அனுதாபத்துடன் கூடிய குற்றச்சாட்டுகளை தெரிவித்திருந்தது. இதன் காரணமாகவே பின்னர் ரணில் விக்ரமசிங்க விடுதலை செய்யப்பட்டார்.

ஆகையினால், இது போன்றே ராஜபக்ச அரசின் மீதும் பலவீனமான குற்றச்சாட்டுகளை முன் வைக்க அனுர அரசு முயலும். ராஜபக்ச தலைமையிலான அரசின் முன்னைய போர்க் குற்றங்களை சர்வதேச விசாரணைகளில் இருந்து விடுவிக்க இந்த அரசு உதவும் என்பதை இது புலப்படுத்துகிறது.

இவை அனைத்தையும் சிங்கள இன வாதத்தை வளர்க்கும் இன்னொரு வகையிலான நடவடிக்கையாகவே நாம் கருத வேண்டும். ஏனெனில் அவருடைய செயல்பாடுகள் யாவும் சிங்கள மக்கள் மத்தியில் தன்னை ஒரு தேசிய வீரனாய் அடையாளப்படுத்திக் கொள்வதுபோல் இருப்பதாக வெளித் தெரிய வருகிறது.


போர் முடிந்து பல ஆண்டுகள் ஆகியும் தமிழ் மக்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட புதைகுழிகள் பற்றிய மர்மங்களையோ, விசாரணைகளையோ எந்த ஒரு சிங்கள அரசும் முன்னெடுக்கவில்லை. ஈழத்தமிழ் மக்கள் பலரது உடலங்களை தாங்கிய மனி தப் புதைகுழிகள் தமிழர் தாயகமெங்கும் அதிகரித்து செல்கின்ற நிலையில் தீர்வுகள் எதுவும் இதுவரை கிடையாத நிலையே உள்ளது.


இந்த விடயத்தை சர்வதேச பார்வைக்கு கொண்டு செல்வதுடன் அதனூடாக தமிழ் உறவுகளுக்கு நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும்.

## சிறிலங்கா அரச பயங்கரவாதம்:

நீண்டகாலமாக சிறிலங்கா அரசு தமி ழர்கள்மேல் புரிந்த வதைகள், கொலை கள், காணாமல் ஆக்கப்பட்டமை போன்ற பயங்கரவாத நடவடிக்கைகளை தானே விசாரித்து நீதி வழங்கும் என்பதை யாரும் எதிர்பார்க்க முடியாது.

தேர்தல் வெற்றிக்காகவே பேச்சளவில் இன நல்லிணக்கம், சம தருமம், தேசிய




ஒற்றுமை என பறைசாற்றும் தற்போதைய அனுர அரசுகூட தமிழர் மீதான படுகொலைகளுக்கு நீதி வேண்டும் என்று கேட்பது நகைப்புக்கிடமானதாகும்.

தற்போதைய, மாற்றங்களை மையப்படுத்தி ஆட்சிக்கு வந்திருக்கும் அனுர அரசாங்கமும் தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைகளுக்கு நீதி வழங்கும் என்று நம்பிக்கை கொள்ள முடியாது. ஜெனிவாவில் மனித உரிமை மீறல்களை உள்ளக விசாரணை மூலமே தீர்க்க முடியும் என்று உறுதியாக அனுர அரசு தெரிவித்துள்ளமையையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டும்.

## சர்வதேச விசாரணை கோரிக்கை:

இனியும் செம்மணி புதைகுழிகள் விவகாரத்தில் தலையிட்டு அனுர அரசு நீதி வழங்கும் என்ற நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்து விட்டனர். காலங்காலமாக தமிழ் மக்களின் மீது போர் தொடுத்த சிங்கள அரசுகள் ஒரு போதும் நீதியை வழங்கப் போவதில்லை என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

இன நல்லிணக்கம், உண்மையை கண்டறிதல் என்ற அடிப்படையில் தேர்தல் பரப்புரையில் தெரிவித்து ஆட்சியை பிடித்துள்ள இந்த அரசும் எவ்வகையிலும் தமிழ் மக்களின் இறையாண்மையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பது தெரிகிறது.

ஆனால் சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்ட கதை வேறு. சிங்களவர்கள் கொல்லப்பட்ட பட்டலந்த வதைமுகாம் பற்றிய விவகாரம் அனுரவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களில் வெளிச்சத்துக்கு வந்துள்ளதுடன் நீதி விசாரணையும் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இது இனவாதத்தை அப்பட்டமாக வெளிக்காட்டுகிறது.






ஒருவன்

# கிருஷாந்திக்கும் செம்மணிக்கும் சர்வதேச விசாரணையே நீதியை பெற்றுத் தரும்



**இதுவரையில்** 240 மனித எலும்புக்கூடுகள் செம்மணியில் அடையாளம் காணப்பட்டுள்ள, இலங்கையின் இரண்டாவது பெரிய மனித புதைகுழியான செம்மணி புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை நடத்தாமல், பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசாமி உட்பட கொலைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கப்போவது இல்லையென, வடக்கின் தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் வலியுறுத்தியுள்ளார்.

"கிருஷாந்தி குமாரசாமி, இந்த இடத்தில் நிலை கொண்டிருந்த சந்திரிக்கா அரசாங்கத்தினுடைய சிறிலங்கா ஆயுதப்படைகளால் வழி மறிக்கப்பட்டு மிகக் கொடூரமான முறையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அவரை தேடிச் சென்ற உறவினர்கள், இங்கு புதைக்கப்பட்டவர்கள் என ஒட்டு மொத்தமாக தமிழ் தேசத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு எந்த நீதியும் இல்லாத நிலையில் இந்த நினைவேந்தலை நடத்துகின்றோம். இந்த சித்துப்பாத்தியில் 240 வரையான எலும்புக்கூடுகள் வெளிவந்துள்ளன.

இது எதனை காட்டுகின்றது என்றால், மாபெரும் இனப்படுகொலைக்கான சான்றுதான் இது. இந்த சான்றுகளை வைத்துக்கொண்டு ஒரு சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே இந்த படுகொலைகளுக்கான நீதியை பெற்றுக்கொள்ள முடியும்."

29 வருடங்களுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தால் பாலியல் துஷ்பிரயோகம்

செய்து கொலை செய்யப்பட்ட மாணவியை நினைவுகூரும் வகையில் யாழ்ப்பாணத்தின் செம்மணியில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளருமான செல்வராஜா கஜேந்திரன் இவ்வாறு கூறினார்.

செப்டெம்பர் 7ஆம் திகதி வடக்கு, கிழக்கு நினைவேந்தல் குழு ஏற்பாடு செய்திருந்த இந்த நினைவேந்தல் நிகழ்வில் கிருஷாந்தி குமாரசாமியின் உறவினர் ஒருவர், சிவில் சமூக ஆர்வலர்கள், அரசியல்வாதிகள் மற்றும் உள்ளூர்வாசிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் 'வாசலிலே கிருஷாந்தி' என்ற செம்மணி பற்றிய கவிதைத் தொகுப்பும் வெளியிடப்பட்டது.

முன்னாள் நீதவானால் குற்றப்பிரதேசமாக அறிவிக்கப்பட்ட புதைகுழியில் புதைக் கப்பட்டவர்கள் அனைவரும் நீதிக்கு புறம்பான கொலைகளுக்கு ஆளானவர்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நம்புகிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 13 பக்க அறிக்கையில், செம்மணி புதைகுழி விசாரணையில் இலங்கை பொலிஸார் மற்றும் இலங்கை இராணுவம் 'இணைந்த தரப்பினராக' அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிருஷாந்தி குமாரசாமி

சுண்டிக்குளி மகாவித்தியாலய மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி, 1996ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிவிட்டு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது, செம்மணி சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாகத் தடுத்து வைக்கப்பட்டு, கூட்டுப் பாலியல் துஷ்பிரயோகம் செய்து, கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டார்.

அவரது தாமதத்தால் பதற்றமடைந்த அவரது தாயார் ராசம்மா குமாரசாமி மற்றும் சகோதரர் பிரணவன் குமாரசாமி குடும்ப நண்பரான சிதம்பரம் கிருபாமூர்த்தியுடன் செம்மணி சோதனைச் சாவடிக்குச் சென்று விசாரித்தனர்.

கிருஷாந்தி பற்றிய எந்தத் தகவலும் தமக்குத் தெரியாது எனக் கூறிய சோதனைச் சாவடியின் படையினர், மூவரையும் ஒரு பதுங்குக் குழிக்குள் அழைத்துச் சென்று வலுக்கட்டாயமாகத் தடுத்து வைத்திருந்தனர்.

அன்று இரவு இராணுவத்தினர் பிரணவன், கிருபாமூர்த்தி ஆகியோரை கயிற்றால் கழுத்தை நெரித்து, இருவரின் உடல்களையும் பாதுகாப்புச் சாவடிக்குப் பின்னால் புதைத்தனர். அவர்களின் ஆடைகளை தனி யாக புதைத்தனர். ராசம்மாவையும் அதே வழியில் கொலை செய்த இராணுவத்தினர், உடலை சோதனைச் சாவடிக்குப் பின்னால் புதைத்தனர்.



கிருஷாந்தி குமாரசாமி கூட்டு பாலிஸ் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கொல்லப்பட்டதாக அரசாங்கப் படைகள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளை விசாரிக்குமாறு அப்போதைய சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் சர்வதேச அழுத்தங்களுக்கு உள்ளாகியிருந்தது.

அதன் பின்னர், நான்கு சிவிலியன்கள் காணாமல் போனமை தொடர்பில் இராணுவ அதிகாரிகளுக்கு கிடைத்த அநாமதேய மனு மீதான விசாரணையைத் தொடர்ந்து, செம்மணி இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவத்தினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதற்கமைய செம்மணி இராணுவ சோதனை சாவடி அருகே புதைக்கப்பட்ட நிலையில் நான்கு அழுகிய உடல்கள் மற்றும் ஆடைகள் கண்டெடுக்கப்பட்டன.

9 இராணுவ வீரர்கள் மீது 18 குற்றச்சாட்டுகளுடன் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த பின்னர், உயர் நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் கொண்ட குழு வழக்கை விசாரித்து, குற்றம் சாட்டப்பட்டவர்களின் வாக்குமூலம் மற்றும் பிற வாய்மொழி ஆதாரங்களின் அடிப்படையில் தீர்ப்பை வழங்கியது.

இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் அடையாளம் காணப்பட்ட 5 இராணுவ உறுப்பினர்களான ராஜபக்ச தேவகே சோமரத்ன ராஜபக்ச, ஜே.எம்.ஜயசிங்க, ஜி.பி.பிரியதர்ஷன மற்றும் ஏ.எஸ்.பிரியஷாந்த பெரேரா ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட மற்ற மூன்று இராணுவ உறுப்பினர்களுக்கு இருபத்தைந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 4 இராணுவத்தினர் விடுதலை செய்யப்பட்டனர்.





பீரிஸ், இலங்கைக்கு எதிராக மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட, யுத்த காலத்தில் அரசாங்கத்தின் பிரதான சட்ட ஆலோசகராக இருந்தார்.

2013 ஆம் ஆண்டு பிரதம நீதியரசர் பதவியில் இருந்து சர்ச்சைக்குரிய வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு பதிலாக மொஹான் பீரிஸை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நியமித்தார். இன்று அவர் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநி தியாக செயற்படுகின்றார்.

யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடி துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் 3ஆவது கட்டத்தை ஆரம்பித்து வைக்க யாழ்ப்பாணத்திற்குச் சென்ற ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க, செப்டெம்பர் 1, 2025 அன்று, செம்மணி மனித புதைகுழி குறித்து முறையான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூறியிருந்தார்.

"செம்மணி மனித புதைகுழி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அது குறித்து முறையான விசாரணையை ஆரம்பித்துள்ளோம். எங்களிடம் மறைக்க எதுவுமில்லை." மறுதினமே, ஜனாதிபதி, யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவுக்கு செல்லும் வழியில் செம்மணி மனித புதைகுழியை ஆய்வு செய்யாமலேயே கடந்து செல்வதை ஊடகவியலாளர்கள் காணொளியில் பதிவு செய்திருந்தனர்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரஞ்சித் அபேசூரிய மற்றும் சட்டத்தரணி ரஞ்சித் பெர்னாண்டோ மற்றும் பல சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்திருந்தனர்.

இருந்த போதிலும், அதனை ஆராய்ந்த அப்போதைய உச்ச நீதிமன்ற நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க தலைமையிலான ஐவர் அடங்கிய அமர்வு மேன்முறையீட்டு மனுவை நிராகரித்து, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும் என தீர்மானித்தார்.

## செம்மணி மனித புதைகுழி

கிரிஷாந்தி குமாரசுவாமி புதைக்கப்பட்ட பிரதேசத்தில் மேலும் நானூறு முதல் ஐந்நூறு சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

செம்மணி மனித புதைகுழி தோண்டப்பட்ட நேரத்தில், ஐந்து பேர் கொண்ட குழு 15 பாதுகாப்புப் படையினரை பொறுப்புக் கூறியதோடு நான்கு இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் குழுவின் அறிக்கை வெளியிடப் படவில்லை. மாறாக 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சட்டமா அதிபர் அலுவலகத்தில் இருந்த அரசாங்கத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி மொஹான் பீரிஸின் ஏற்பாட்டில் சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பின்னர் நான்கு பேரும் பதவி உயர்வு பெற்றனர். பின்னர் சட்டமா அதிபர் பதவிக்கு உயர்த்தப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி



ஆர்.சனத்



# கிழட்டு யானையும் கூட்டு சவாரியும்!

**பாவம்** இந்த கிழட்டு யானை. நான்கு தசாப்தங்களுக்கு மேலாக கடுமையாக உழைத்தே களைத்துவிட்டது. அந்த யானையால் முன்னேறியோர் ஏராளம். அரசியல் முகவரி பெற்றோரும் தாராளம். அதனால்தான் இன்றளவிலும் கூட அவருக்கென தனிப்படையொன்று உள்ளது. சமூகவலைத்தளங்களில் சொம்பு தூக்கி கம்பு சுத்தும் சைபர் படைபிரிவும் பக்கபலமாக உள்ளது.

பல நோய்களை சுமந்தபடி வலம் வரும் யானையை அதன் வழியில் விட்டுவிட்டால் கோவில் திருவிழாக்களில் பங்கேற்று, பலரை மகிழ்வித்து கடைசிக் காலத்தை ஓட்டிவிடும்.

அதற்கென இருந்த 'மிஸ்டர் கிளின்' பட்டமும் சு(ஊ)ழல் காற்றில் பறந்துவிட்டது.

கோவிலுக்கு சென்றால் கோவில் யானை என்ற மரியாதையாவது மிஞ்சும். நான்குபேர் கையெடுத்து கும்பிடும் நிலையும் உருவாகும். அந்த யானைக்கு கௌரவமான தொரு கடைசிகாலம் கிடைக்க வேண்டும் என்பதே உண்மையான ஆதரவாளர்களின் ஏகோபித்த கோரிக்கையாகும். ஆனால் அது நடப்பதாக தெரியவில்லை.




அரசியல் ரீதியில் வங்குரோத்து அடைந்தவர்கள் தமது இருப்புக்காக, பிழைப்புக்காக கொஞ்சம்கூட இரக்கமின்றி கிழட்டு யானைமீது கூட்டு சவாரிக்கு தயாராகின்றனர்.

அதுமட்டும் அல்ல. கோவில் யானையை கொம்பன் யானையெனக்கூறி அரசியல் சமர் களத்தில் நிறுத்தியுள்ளனர். 'இந்த யானையால் மட்டுமே முடியும், அதனால்தான் விமோசனம் கிட்டும், அனுபவமே ஆசான், அனுபவத்தால் அகிலம் வெல்லும் யானைப் படை.' என்றெல்லாம் அனல் பறக்கும் அறிவிப்புகள் வெளிவருகின்றன.

இப்படியான ஓவர் பில்டப்புகளால் யானையாலும் பின்வாங்க முடியவில்லை. சூழவுள்ளவர்களை கைவிடவும் மனமில்லை. 'அனுபவம்' என்ற அஸ்திரத்தை மட்டும் ஏந்தி, தள்ளாடும் வயதிலும் களத்தில் வந்து நிற்கின்றது.

தன்னைப் பற்றி புகழ்ந்து பேசும் இந்த தரப்பு, தன்னை விடவும் சிறப்பான சவாரி கிடைத்துவிட்டால் மறுகணமே காலை வாரி, கைவிட்டு அதில் பயணிப்பார்கள் என்பதை இத்தனை வருடகால அனுபவத்தில் இந்த யானை அறிந்து வைத்திருக்க வேண்டும். இப்படி இருந்தும் எதற்காக இந்த பயணம்? என்ற வினா எழுகின்றது.

சரி! கிழட்டு யானையை வைத்து ஒரு புறம் இவ்வாறு அரசியல் படம் ஓட, மறுபுறத்தில் கிழட்டு மைனாவுக்கு மையடிக்கும் செயல் இடம்பெறுகின்றது. எப்படியும் தீபாவளிக்கு முன்னர் அந்த அரசியல் படமும் திரைக்கு வந்துவிடும். ஆக இனி வரும் காலம் அரசியல் களத்தில் தரமான, சிறப்பான சம்பவங்கள் அரங்கேறும் காலப்பகுதியாகவே இருக்கக்கூடும்.

# காவியநாயகி



அவள்
ஒரு விடுதலைப் பறவை
தியாக வேள்வியில்
தன்னுயிரை தழலாக்கியவள்!

அவள்
ஒரு கடல்தேவதை
அலைகளோடு விளையாடி
கடலிலே
காவியமாகிடப் புறப்பட்டவள்!

இனமானம் காத்து
மானப்போர் புரிந்திட
நீலக்கடலின்
அலை தழுவியவள்!

ஆழக்கடலேறி
வெஞ்சமர் ஆடியவளை
ஈரவிழியோடு
அணைத்திடக்
காத்திருக்கிறேன்

காவியம் படைத்து
மனதோடு
ஓவியமானாள்!

மண் மீட்புக்குத்
திரியாகி
விடுதலைக்கு
உரமானாள்!!

அவள் உள்ளம்
தேசத்து
மக்களுக்காக அழுதது!

அவள் உயிர்
தேசத்து
மக்களுக்காகப் போனது!

வளைந்த பாதையில்
நிமிர்ந்து நின்றவளின்
நிழல்பட்ட இடம்
நீறுபூத்துக்
கிடக்கின்றது....!!

-பிரபா அன்பு



# படித்துச் சுவைத்தது

**இராமன்** தன் மனைவியை சந்தேகித்து தீயில் இறங்க பணிக்கிறான். இறங்கி தான் பத்தினி என்பதை சொல்கிறாள். அதற்குப் பிறகு கூட ஊராரின் சந்தேகத்தை காரணங் காட்டி கர்ப்பிணியான தன் மனைவியை வனத்தில் தள்ளுகிறார் கணவன்.

அங்கேயே குழந்தைகள் பெற்று வனத்திலேயே வாழ்கிறாள். இரண்டு குழந்தைகளும் வளர்ந்து ஊர் திரும்பியதும் மடிகிறாள் - இது ராமாயணம்.

ஓர் அழகிய இளம் மங்கை. அவளுக்கு முதிர்ந்த கணவன். மனமுவந்து வாழ்கிறாள். ஒரு கட்டத்தில் கணவன் குஷ்டரோகியாகிறான். அதன் பிறகும் அவளுக்கு வெறுப்பு ஏற்படவில்லை. பண்ணாத குசும்பெல்லாம் அக் கிழடு செய்தும் அவனை ஆராதிக்கிறாள்.

ஒரு கட்டத்தில் ஒரு தாசியை பார்த்து "நான் இவளோடு கூட வேண்டும்" என்கிறான். அதற்கும் அவள் இசைகிறாள். தாசிக்கு கூலியாக தாசியின் வீட்டை துப்புரவு செய்வது உள்ளிட்ட பணிகளை செய்கிறாள். தன் கண வனை தோளில் தூக்கிக்கொண்டு தாசியின் வீட்டுக்குச் செல்கிறாள் - இது நளாயினி கதை.

இது அனைத்தும் வட மொழி இலக்கியங்கள்.

தன் கணவனை செய்யாத குற்றத்திற்காக கொலை செய்து விட்டது அரசு. தன் கோப தீயால் ஒரு நகரத்தையே எரிக்கிறாள். தன் உள்ளத்து எரிச்சல் பற்றி எரிகிறது என கெக்கலிட்டு சிரிக்கிறாள். ஆவேசமாக எரித்தபடியே வேகமாக நடந்து சென்று சற்று நிதானித்து திரும்பி பார்க்கிறாள், "அனைத்தும் எரிந்து விட்டதா அல்லது இன்னும் மிச்சமிருக்கிறதா" என்று - இது சிலப்பதிகாரம்.

அவள் ஓர் பேரழகி. அவள் அழகில் கவரப்பட்டு ஓர் இளவரசன் தன் காதலை அவளிடம் கூறுகிறான். அவள் வலக் கையில் வாங்கி இடக் கையில் தூர வீசிவிட்டு சலனமற்று நடக்கிறாள். இளவரசனும் ஆசிட் வீசவில்லை. ஆபாச படமெடுத்து மிரட்டவில்லை. அவள் உணர்வுக்கு மதிப்பளித்து சென்று விடுகிறான் - இது மணிமேகலை.

அவள் கணவன் அவளை கொல்வதற்காக திட்டமிட்டு மலை உச்சிக்கு அழைத்துச் செல்கிறான். அவளும் விவரமறியாது கூடவே செல்கிறாள். மலை உச்சியை எட்டியதும்தான் தெரிகிறது, "இவன் தன்னை கொலை செய்ய அழைத்து வந்திருக்கிறான்" என்று. யோசிக்கிறாள். இறுதியாக கணவனிடம் பேசுகிறாள்

"நீ என்னை கொல்லத்தானே அழைத்து வந்திருக்கிறாய்? நான் மடிவது பற்றி எந்த கவலையுமில்லை. ஒரே ஒரு வேண்டுகோள்தான். என் கணவர் நீங்கள். உங்களை மூன்று முறை சுற்றி வந்து காலில் விழுந்து ஆசி வாங்கினால் மோட்சம் செல்லும் பாக்யம் கிட்டும் எனக்கு"

"அட அதனாலென்ன? தாராளமாக சுற்றி வா" என்று கணவனும் சொல்ல, சுற்றுகிறாள். முதல் சுற்று, இரண்டாம் சுற்று, மூன்றாம் சுற்றில் தன் கணவனை மலையிலிருந்து கீழே தள்ளி விட்டு கொல்கிறாள் - இது குண்டலகேசி.

இவை அனைத்தும் தமிழ் இலக்கியங்கள்.

ஓர் ஆண் என்ன செய்தாலும் அவனுக்கு சேவகம் செய்வதொன்றே பெண்ணின் பணி என்பதினை சொன்னது தான் வடமொழி இலக்கியங்கள். அவன் ஆணோ, கணவனோ, அரசனோ, ஆண்டவனோ அநீதி என்றால், 'அறம் தவறினால் அடங்காதே! அவனை எதிர்த்து போராடு!' என்பதை போதிப்பதுதான் தமிழ் இலக்கியங்கள்.

தமிழ் மொழி எப்போதுமே பெண்களை கொண்டாடுவது. வடமொழிகள் பெண்களை அடிமைத்தனமாக்குவது. உலகம் முழுவதுமே பெண்களைக் காலுக்கு கீழே வைத்திருந்த கால கட்டத்தில் பெண்களை மேன்மை மிகு பொக்கிஷ மாக போற்றிப் புகழ்ந்தது தமிழ் சமூகம்.

சங்ககாலத்திலேயே, 47 பெண் எழுத்தாளர்களைக் கொண்டது உலகிலேயே தமிழ்ச் சமூகம் மட்டும்தான். உலக மொழிகளின் தாய் என்று கூறிக் கொள்ளும் கிரேக்கத்தில் கூட 7 பெண்கள் தான் இருந்தனர்.

தேவபாஷை என்று கூறிக் கொள்ளும் சமஸ்கிருதத்தில் ஒரு பெண் எழுத்தாளர் கூட கிடையாது. ஏன்? சமஸ்கிருதத்தை வாசிக்கவோ, பேசவோ கூட பெண்களுக்கு உரிமை கிடையாது. ஆனால் கீழடி போன்ற இடங்களில் இருந்து கிடைத்ததில் தங்கத்திலும், பானை ஓடுகளிலும் பெண்களின் பெயரைப் பொறித்து புழங்குமளவிற்கு தமிழ்ச் சமூகம் நாகரீகம் கொண்டதாக இருந்தது தெரிய வந்திருக்கிறது. ஆண்டாண்டு காலமாக பெண்களை போற்றிப் புகழ்ந்து கொண்டாடியதுதான் நம் தமிழ்ச் சமூகம்.

தமிழ், தமிழ்ச் சமுதாயம் இன்றும் நிலைத்து இருப்பதற்கு காரணம் பெண்களைக் கொண் டாடிய தால் தான். பெண்கள் உலகத்தின் ஆணிவேர்கள். அவர்களைக் கொண்டாடுவோம்.

# கச்சதீவு அரசியல்




சு.நிஷாந்தன்

# அநுரவின் பயணத்தால் டெல்லியில் நெருக்கடி

**கச்சதீவுக்கு** ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க மேற்கொண்ட திடீர் பயணம் இந்திய அரசியலில் பேசுபொருளாகி உள்ளதுடன், இரு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர ரீதியிலான பிரச்சினைகளுக்கு இந்தப் பயணம் வழிவகுக்குமா என்ற கோணத்தில் விவாதங்களும் எழுந்துள்ளன.

1974ஆம் ஆண்டு இருநாட்டு ஒப்பந்தத்தின் ஊடாக கச்சதீவை அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தி இலங்கைக்கு வழங்கியிருந்தார். ஆனால், இந்த ஒப்பந்தத்தில் இருநாட்டு மீனவர்களும் இந்தப் பகுதியில் இளைப்பாறலாம் என்ற இணக்கப்பாடு இருந்தது. யுத்தம் காரணமாக ஆரம்பத்தில் மீனவர் பிரச்சினை பேசு பொருளாகவில்லை.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர், இலங்கையின் கடற்பரப்பை முழுமையாக இலங்கை கடற்படை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அது முதல் மீனவர்கள் பிரச்சினையும் தலைதூக்க ஆரம்பித்தது.



தமிழக மீனவர்கள் எல்லை தாண்டுவதாக கைதுகள் தொடர்ந்து இடம்பெறுவதுடன், அவர்களது படகுகளும் பறிக்கப்பட்டு வருகின்றன. பல சந்தர்ப்பங்களில் இலங்கையின் கடற்படையின் தாக்குதல்களுக்கும் தமிழக மீனவர்கள் இரையாகி உள்ளனர்.

கச்சதீவு இந்தியா வசமிருந்தால் பிரச்சினை எழாது.



இருநாட்டு அரசுகள் மற்றும் மீனவ சங்கங்களுக்கு இடையில் பல சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றுள்ள போதிலும் இன்னமும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப் படவில்லை.

என்றாலும், கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்குமாறு தமிழக கட்சிகள் கடந்த பல தசாப்தங்களாக வலியுறுத்தி வருகின்றன. கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டதால் இந்தியாவின் கடல் பரப்பு குறிப்பாக தமிழ்நாட்டின் கடல்பரப்பு குறைவடைந்ததால் தமிழக மீனவர்கள் அடிக்கடி கைதுசெய்யப்படுவதுடன், பல சந்தர்ப்பங்களில் இலங்கையின் கடற்படை தாக்குதல்களுக்கும் பலியாகியுள்ளனர்.

கச்சதீவு இந்தியாவின் வசமிருந்தால் இந்தப் பிரச்சினை எழாது என தமிழக அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். தமிழகத்தில் தினம் தினம் இந்த விடயம் பேசுபொருளாகவே உள்ளது.

இந்த நிலையில், கடந்த மாதம் 21 ஆம் திகதி தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும் நடிகருமான விஜய், கச்சதீவை மீட்டு தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குமாறு இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்தார்.

## இராஜதந்திர மட்டத்தில் பேசுபொருளாகியுள்ளது

இதன் பின்னர் கச்சதீவு விவகாரம் மீண்டும் பூதாகரமான பிரச்சினையாக மாறியுள்ளது. தமிழகத்தில் தேர்தல் நடைபெறுவதால் தமிழக கட்சிகள் இந்தப் பிரச்சினையை மீண்டும் கையில் எடுத்துள்ளதாக வெளிவிகார அமைச்சர் விஜித ஹேரத், விஜயின் கருத்துக்கு பதிலளித்திருந்தார்.

இராஜதந்திர மட்டத்தில் இது குறித்து எவ்வித கருத்துகளும் பகிரப்படவில்லை என்பதால் இதனை பொருட்படுத்தத் தேவையில்லை எனவும் கூறியிருந்தார்.

என்றாலும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தமது யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தின் ஒருபகுதியாக கச்சதீவுக்கு சென்றமை இராஜதந்திர மட்டத்தில் பேசுபொருளாகியுள்ளது. குறிப்பாக இந்திய ஊடகங்களில் இவரது பயணம் குறித்த விவாதங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.




இந்த ஊடக விவாதங்களில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் இராஜதந்திரிகளும், இந்திய அரசியல்வாதிகளும், கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதை தமிழக அரசியல் கட்சிகளுக்கும், இராஜதந்திர மட்டத்திலும் தெளிவாக எடுத்துரைக்கவே, அனுரகுமார திசாநாயக்க கச்சதீவுக்கு அவசரமாக பயணம் மேற்கொண்டதாக தெரிவித்தனர்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் நெருக்கமான உறவு உள்ள போதிலும், இலங்கை சீன சார்பான பல கொள்கைகளை கொண்டுள்ளது. இந்த விவகாரத்துக்கு இராஜதந்திர மட்டத்தில் இணக்கப்பாடுகள் காணப்படாவிடின் எதிர்காலத்தில் பல்வேறு முறுகல்களுக்கு இது வழிவகுக்கும் எனவும் அவர்கள் எச்சரித்தனர்.

## அனுரவின் பயணத்தால் டெல்லியில் பல்வேறு நெருக்கடிகள்.

அண்மையில் நேபாளம், பங்களாதேஸ் போன்ற நாடுகளுடன் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள முறுகல்கள் போன்றதொரு நிலையை இலங்கையுடனும் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் கச்சதீவு விவகாரத்துக்கு உறுதியான தீர்வுகள் காணப்படுவது அவசியம் என்றும் இந்த விவாதங்களில் பேசுபொருளாக இருந்தது. இதேவேளை, காங்கிரஸ் கட்சியும் திராவிட முன்னேற்றக் கழகமும்தான் கச்சதீவு இந்தியாவிடமிருந்து பறிபோக காரணம் என கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் தமிழகத்தில் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த இந்திய பிரதமர் மோடி கூறியிருந்தார்.

அடுத்த ஆண்டு மே மாதம் தமிழக சட்டமன்றத்துக்கான தேர்தல் நடைபெற உள்ளது. அதிமுக மற்றும் பாஜக கூட்டணியின் பிரச்சாரத்துக்காக மோடி தமிழக வரும் போது இந்த விடயத்தை கட்டாயம் பேச வேண்டி சூழல் எழுந்துள்ளதாக தமிழக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.


இதற்கான நிரந்தர தீர்வு குறித்தும் அவர் பேச வேண்டும். இல்லாவிட்டால் அது தேர்தலில் எதிர்மறை தாக்குதலை ஏற்படுத்தும் வாய்ப்புகளை உருவாக்கும் எனவும் கூறுகின்றனர்.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க கச்சதீவுக்கு பயணம் மேற்கொண்டு இருக்காவிட்டால் இந்த விவகாரம் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்காது, அநுரவின் பயணம் டெல்லியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு வழி வகுத்துள்ளது என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கலைஅமுதினி



# கானல் நீர்



**எங்கோ** தூரத்தில் ஒற்றைப் பறவையான்று சோகமாய் கத்தியது. அதற்கு என்ன வலியோ.. யார் அறிவார்? இயற்கையின் அழகில்தான், சோகங்களும், துயரங்களும் ஒளிந்து கிடக்கின்றன. சில பெண்களின் வாழ்க்கையைப் போல.

இதோ! கன்னத்தில் கைவைத்தபடி அமர்ந்திருக்கும் சீதா போல. பேரழகி என்று சொல்லாவிட்டாலும் காண்போரை கவர்ந்திழுக்கும் வசீகரம் அவளிடம் உண்டு. எந்நேரமும் தேனி போல் சுறுசுறுப்பாக இருப்பாள். மலர்ந்த முகத்துடன் ஓடியாடி எல்லோருக்கும் உதவும் நல்ல மனம் கொண்டவள். ஆனால் இன்று அசோக வனத்து சீதை போல துயரில் மூழ்கி இருந்தாள்.

இவள் ஒரு தொழிலதிபரின் மகள். நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள், இவர்களது தொழிற்சாலையில் வேலை பார்க்கிறார்கள். ஒரே செல்ல மக ளான சீதாவுக்கு வீட்டில் எந்தக் குறையும் இருந்ததில்லை. எள் என்னும் முன் எண்ணெயாக வந்து நிற்கும் வேலைக்காரர்கள். நினைத்ததை உடனே நிறைவேற்றி வைக்கும் தந்தை என வாழ்ந்த போதும் சீதா மன தில் எப்போதும் ஒரு மெல்லிய சோகம் இழையோடும்.

அரண்மனை மாதிரி வீடு இருந்தும் அவள் பிரபலமான பாடசாலை ஒன்றின் விடுதியில் தங்கிப் படித்தாள். விடுதியில் தங்கிப் படிக்கும் சக தோழி களை, அவர்களது பெற்றோர்கள் அடிக்கடி வந்து பார்த்துச் செல்வார்கள். சீதாவுக்கோ விடுமுறைக்கு செல்லும் போதும், முடிந்து கூட்டி வரும்போதும் மட்டுமே பெற்றவர்களைக் காணமுடியும்.

எனக்காக ஒருநாளை செலவழிக்கக் கூடாதா எனக் கேட்டால், தொழிலில் கவனமாக இல்லாவிட்டால் ஆயிரக் கணக்கான பணம் நஷ்டமாகிவிடும் இது எல்லாம் யாருக்காக? உனக்காகத்தானே? பிற்காலத்தில் நீ கஷ்டப்படக் கூடாது என்பார்கள். அத்தனை வசதியிருந்ததும் பெற்றவர்களின் அன்புக்காக, பாசத்திற்காக சிறுவயதிலேயே ஏங்கினாள். பள்ளி வாழ்க்கை முடித்த போதும், அது அவளுக்குக் கிட்டவில்லை.

எனவே, அவள் எப்போதும், மெல்லிய சோகத்துடன் வலம் வருவாள்.



தோழிகளுடன் நேரத்தை செலவிடத் தயங்குவாள். அவள் சோகம் யாராவது கண்டு தன் மீது இரக்கப்படக் கூடாது என எண்ணுவாள். பாட சாலைப் பருவம் மாறி பல்கலைகழகம் செல்லத் தொடங்கினாள். இதுவரை பெண்கள் கல்லூரியில் படித்ததாலும், வீட்டிலும் தனியாக இருந்ததாலும், ஆண்களைக் கண்டால் தயக்கமாக நிற்பாள். பல்கலைக்கழக புதுமுக வரவேற்பில் அவளால் பகிடி வதையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தேம்பித் தேம்பி சிறுபிள்ளை போல் அழுது வீட்டுக்கு போகப் போகிறேன், நான் படிக்கவில்லை என்று அழுதாள்.

அதைக் கண்ட ஒரு மாணவன் அவளை விட்டுவிடும்படி கூறினான். சீதா மெல்லிய புன்னகையோடு நன்றி கூறினாள். அப்போது அவனது கண்ணுக்கு அவள் பேரழகியாக திகழ்ந்தாள். ஆனாலும் அவளது முகத்தில் ஒரு மெல்லிய சோகம் இழையோடுவதைக் கண்டான். மெல்ல மெல்ல இருவரும் பேசத் தொடங்கினார்கள்.

அவர்களிடையே ஒரு நட்பு உருவானது. இப்படித்தான் சீதா மனதில் சங்கர் வந்தான். மிகவும் எளிமையான குடும்பத்தில் பிறந்த அவன் ஏழ்மை நிலை யிலும் படித்து பல்கலைக்கழகம் தெரிவாகி இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்தான். அவனது குடும்பம் மிகவும் அன்பானது. எல்லோரும் கூடிக் கதை பேசி, இன்ப துன்பங்களைப் பகிர்ந்து, தீர்வுகளை ஆராய்ந்து, முடிவுகளை எடுப்பது என வாழ்ந்தார்கள். பணமில்லாவிடினும் மகிழ்வான குடும்பமாக வாழ்ந்தார்கள்.

சீதா சங்கருடன் சில நாட்களிலேயே நட்புடன் பேசத் தொடங்கினாள். அப்போது அவள் தன் உள்ளக் கிடங்கில் கொட்டிக் கிடந்த ஏக்கங்கள், கவலை கள், ஆசைகள், இலட்சியம் என எல்லாவற்றையும் அவனுடன் பகிர்ந்து கொண்டாள். சங்கரும் நீ எந்த விடயமாக இருந்தாலும் என்னிடம் கூறு. நான் உனக்கு பக்கபலமாக இருப்பேன். நான் உன் நிழல் போல நட்புடன் கூட வருவேன் என நம்பிக்கையும் ஆதரவும் கொடுத்தான்.

சீதா அவனை முழுமையாக நம்பினாள். இதுவரை அனுபவிக்காத கனவு லகில் வாழத் தொடங்கினாள். சீதாவுக்கு இது புது அனுபவம். தனக்காக ஒருவன் அன்பு காட்டி, அக்கறையாக இருப்பதை எண்ணி கர்வப் பட்டுக் கொண்டாள். அவனைக் காணாத போது தன் மனது வெறுமையாகிப் போவதை உணர்ந்தாள். சங்கரும் அவள் மீது மிகுந்த அன்புடன் காணப் பட்டான்.

கடவுள் பக்தி மிகுந்த சீதா கோவிலுக்கு போவதை வழமையாகக் கொண்டிருந்தாள். சங்கரோ ஒருபடி மேலே போய் கோயில் தொண்டுகள் செய்வான். அவனது உயர்ந்த சிவந்த தோற்றம் இவளைக் கவர்ந்தது. இவனது செயல்கள் சீதாவை மெல்ல மெல்ல ஆக்கிரமிக்கத் தொடங்கின. இவனோடு வாழ்ந்தால் தான் மகிழ்வோடு வாழ முடியும் என்று எண்ணினாள்.

சங்கரும் இதற்காகவே காத்திருந்தவன் போல சீதாவிடம் தன் காதலைச் சொன்னான். சீதாவும் மறுப்பு எதுவும் தெரிவிக்காமல் உடனேயே தலையாட்டி வெட்கத்துடன் சம்மதம் தெரிவித்தாள்.

அதன் பின் சீதா மிகவும் மகிழ்வோடு காணப்பட்டாள். சங்கர் இவளை தன் ஆளுகைக்குள் வைத்துக் கொண்டான். அதாவது அவளது எல்லா விடயங்களிலும், உடை உடுத்துவதிலிருந்து யாரோடு பேச வேண்டும் என்பது வரை அவனது சொற்படியே அவள் நடந்தாள்.

அவன் மீது கொண்ட காதல் மயக்கத்தில் அவள் சுதந்திரம் பறிபோவதை சீதா உணரவில்லை. மாறாக அவை யாவும் தன்மீதுள்ள அக்கறையே என எண்ணினாள். இதனால் இது சரியல்ல என்று கூறிய நண்பர்களின் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டாள். இது நிச்சயமாக அவளின் பிழை இல்லை. ஏனெனில் குழந்தைப் பருவத்தில் அன்பு என்றால் என்ன என்று தெரியாமல் வளர்ந்தவள். தங்களின் ஒரே பிள்ளையைக் கவனிக்க நேரமின்றி தொழில் தொழில் என ஓடிய பெற்றோரின் அன்பு கிடைத்திருந்தால், இவள் இப்படி போயிருக்க மாட்டாள்.

குழந்தையின் எதிர்காலம் வேலையை விட மிக முக்கியமானது என சீதாவின் பெற்றோர் உணரவில்லை.

நாளும் பொழுதுமாக காலம் உருண்டோட அவனில்லாது வாழவே முடியாது என்ற நிலைக்கு சீதா வந்திருந்தாள். பல்கலைக்கழக பட்டப்படிப்பும் முடிந்தது. இவர்களும் கோயில், நூலகம், பூங்கா போன்ற இடங்களில் சந்தித்துக் கொண்டார்கள். எதையும் சிலகாலம் மட்டுமே மறைக்க முடியும். தொடர்ந்து மறைக்க முடியாது.

சீதாவின் காதல்பற்றி அரசல் புரசலாக கேள்விப்பட்ட தந்தை சீதாவிடம் நேரடியாக கேட்ட போது, சீதா “ஆம்! நான் விரும்புகிறேன். அவரை திருமணம் செய்ய அனுமதிக்க வேண்டும்“ என்று கூறினாள்.

சீதாவின் எதிர்காலம் பற்றிய நீண்ட கனவோடு இருந்த அவளது அப்பா சுக்கு நூறாக நொருங்கிப் போனார். சீதாவிடம் ஆத்திரப்படாமல் ஆறுதலாக நிலைமையை விளக்கினார். ஆனால் காதல் மயக்கத்திலிருந்த சீதா. “சங்கரில்லை என்றால் நான் இவ்வுலகில் வாழமாட்டேன்“ என்று மிரட்டினாள். எதுவும் செய்யமுடியாத நிலையில், சங்கருடன் பேசினார். சங்கர், “எனக்கு சீதா மட்டும் போதும். வேறு எதுவும் தேவையில்லை“ என்று கூறினான்.

சங்கர் ஒருவருக்கும் தெரியாமல் புலம்பெயர் நாடொன்றுக்கு செல்லப் போவதாக கூறி அவளை யாருக்கும் தெரியாமல் அவசர அவசரமாக பதிவுத்திருமணம் செய்துகொண்டான். இதை அறிந்த சீதாவின் அப்பா “எனக்கும் உனக்கும் இனி

எந்த உறவுமில்லை“ எனக் கூறிச் சென்றுவிட்டார்.

சீதா கண்ணீர்விட்டு கதறி அழுத போது சங்கர் ஆறுதலாக அவளைத் தோள் சாய்த்து, “போறவர்கள் போகட்டும். நான் இருக்கிறேன் உன்னோடு“ என்றான்.

சீதா மனதினுள் இவனைப் போல் கணவன் கிடைக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும் என எண்ணினாள்.

அவன் பெண்கள் விடுதியான்றில் சீதாவைச் சேர்த்தான். தான் வெளிநாடு செல்வதாக கூறி, “சென்றதும், உன்னை கூப்பிட முயற்சி செய்வேன். எத்தனை வருடங்கள் ஆனாலும் நீதான் என் மனைவி“ என்று கூறிச் சென்று விட்டான். சீதா மிகவும் மன உறுதியான பெண். அவள் தன் கல்விக்கு ஏற்ற வேலை ஒன்றைத் தேடி அதன் வருமானத்தில் வாழப்பழகிக் கொண்டாள்.

சங்கரும் வெளிநாடு சென்று பல போராட்டங்களின் பின் ஜேர்மனியில் குடியேறி, அகதி அந்தஸ்து பெற்றுக் கொண்டான். சங்கர் வேலைக்குச் செல்லத் தொடங்கியதும் சீதாவை வேலைக்கு செல்ல வேண்டாம் எனவும், தான் அனுப்பும் காசில் வாழப் பழகு என்றும் கூறி விட்டான். அதன் உள் நோக்கம் புரியாத சீதாவின் இதயம் அவனுக்காக மட்டுமே துடித்தது. கற்பனையில் வாழ்க்கையை வாழத் தொடங்கினாள்.


அவன் கூப்பிட்ட உடனே போது தொலைபேசி எடுக்காமல் விட்டாலோ, மேலதிகமாக காசு ஏதாவது கேட்டாலோ கோபப்படத் தொடங்கினான். சீதாவோ சங்கருக்கு தன்மேல் உள்ள அன்பினால் தான் இப்படி நடந்து கொள்வதாக நம்பத் தொடங்கினாள்.

அத்துடன் அவன் தாலி கட்டி திருமணம் முடிக்க இந்தியா வருவதாகவும் அவர்களை ஒழுங்கினை செய்யுமாறு கூறினான். தான் சொல்லும் போது விமான பயணச்சீட்டை பெற்று வருமாறு கூறி னான். சீதா விசாவினை உரிய முறைப்படி பெற்று வைத்திருந்தாள். சங்கர் இந்தியா வரும்படி ஒரு நாளை அறிவித்தான்.

அதன்படி அவளும் அந்நாளில் மிகப் பெரிய கற்பனையுடன் விமானமேறி சென்னை மீன பாக்கம் விமான நிலையத்தை வந்தடைந்து, அங்குள்ள நடைமுறைகளை முடித்து வெளியே வந்தபோது, சங்கர் வரவேற்புப் பகுதியில் நிற்பதைக்கண்டு அருகில் சென்று கட்டிப் பிடித்தாள்.

அவனோ முகத்தை இறுக்கமாக வைத்தபடி “சரி! வா!“ என கூட்டிச் சென்றான். இவள் முகத்தில் ஏமாற்றம் அப்பட்டமாகத் தெரிந்தது. வழியெங்கும் இருவரும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. இவள் மனதுக்குள் ‘வண்டிச்சாரதி தமிழ் போல.அதுதான் பேசவில்லை‘ என நினைத்தாள்.

சங்கர் ஏற்கனவே விருந்தினர் விடுதியொன்றில் தங்குமிட வசதி செய்திருந்தான். அங்கு போனதும் சீதா அவனோட பேச முற்பட தனக்கு ரொம்ப



களைப்பாக இருப்பதாக கூறி படுக்க போனான். அந்நேரம் சீதா சூட்கேசை திறந்தபடி

“உங்களுக்குப் பிடிக்கும் என இவற்றை வாங்கினேன்“ என காட்டினாள். அவற்றைப் பார்த்ததும், அவன் முகத்திலேற்பட்ட கோபத்தை கண்டு சீதா திகைத்துப் போனாள்.

அவன் அவளைக் கோபித்து, “ஏன் இந்த வீண்செலவு? எனக்கு வாங்கத் தெரியாதா? ஒவ்வொரு காசும் உழைக்க நான் படும் கஷ்டம் உனக்கு எங்கே தெரியப் போகிறது. ஓ....! நீ கேட்டதும் எல்லாம் கிடைக்கும். மகா ராணி. இப்போது நீ ஏழை சங்கரின் மனைவி. மறவாதே“ என கோப மாகக் கத்தினான்.

சீதா மென்மையான குணம் கொண்டவள். அவளால் இதை தாங்கிக் கொள்ள இயலவில்லை. எனினும் சமாளித்தாள். மனதில் முதன் முறை யாக ‘தவறானவனை காதலித்து விட்டோமா?‘ என எண்ணம் வந்தது. ஆனாலும் அவன் மேலுள்ள அன்பும், நம்பிக்கையும் அவளை ஆழமாக சிந்திக்க விடவில்லை. திருமணம் முடிந்ததும் சீதாவை தன்னுடன் கூட்டிச் செல்வதற்கான படிவங்களை நிரப்பிக் கொடுத்தவன் மீண்டும் ஜேர்மனிக்கு சென்று விட்டான். ஆனாலும் சங்கரின் நடவடிக்கைகளில் நிறைய மாற்றங்கள் இருப்பதை அவள் புரிந்து கொண்டாள்.

எதுவாயினும் தானாக தேடிய வாழ்க்கை. எவரிடம் செல்லாமல் சமாளித்து வாழ வேண்டும் என மனதில் உறுதி செய்தாள் சீதா.

**தொடரும்....**



அருண் செல்வராஜ்

# செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சியும் பொது நுண்ணறிவின் எதிர்கால ஆதிக்கமும்

**மனித** வரலாற்றின் ஒவ்வொரு காலத்திலும் ஒரு புதிய கண்டுபிடிப்பு உலகை முழுமையாக மாற்றி அமைத்துள்ளது. தீப்பெட்டி கண்டுபிடிப்பு, சக்கரம் உருவாக்கம், அச்சுக் கருவியின் வருகை, மின்சாரத்தின் பயன்பாடு, கணினியின் கண்டுபிடிப்பு என பல நிகழ்வுகள் மனித வாழ்வை மாறாத விதத்தில் மாற்றியமைத்துள்ளன. இன்று அந்த வரிசையில் மிகப்பெரிய புரட்சியாகக் கருதப்படுவது 'செயற்கை நுண்ணறிவு' ஆகும்.

செயற்கை நுண்ணறிவு என்பது மனிதன் சிந்திக்கும் கற்றுக்கொள்வது, தீர்மானிப்பது போன்ற செயல்களை இயந்திரத்தில் பிரதிபலிப்பதே ஆகும். கடந்த சில தசாப்தங்களில் இது மிக வேகமாக முன்னேறி, அனைத்து துறைகளிலும் தனது அடிப்படையை வலுப்படுத்தி வருகிறது.

இன்றைய செயற்கை நுண்ணறிவு குறிப்பிட்ட பணி செய்யும் அளவுக்குள் தான் உள்ளது. ஆனால் எதிர்காலத்தில் 'பொது நுண்ணறிவு' எனப்படும் நிலையை அடைந்தால், அது மனிதனைப் போல் அனைத்துத் திறன்களையும் ஒருங்கிணைத்து செயல்படக் கூடியதாக மாறும்.

இந்த மாற்றம் மனிதகுலத்திற்கு பேரா சீர்வாதமாகவும், ஒருவேளை பேராபத்தாகவும் இருக்கலாம். எனவே, செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி, அதன் சாதனைகள், எதிர்கால பொது நுண்ணறிவு, அதனால் கிடைக்கும் நன்மை - தீமைகள், உலகளவில் உருவாகும் ஆதிக்க நிலை, அதனைச் சமநிலைப்படுத்த தேவையான நடவடிக்கைகள் ஆகிய அனைத்தையும் ஆராய்வது காலத்தின் அவசியமாகிறது.



செயற்கை நுண்ணறிவு என்ற கருத்து புதியது அல்ல. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் மனித மூளையின் செயல்பாட்டை பின்பற்றக் கூடிய இயந்திரங்களை உருவாக்க முடியுமா என ஆராயத் தொடங்கினர்.

1950-கள்: கணினி வளர்ச்சியின் ஆரம்பக்காலம். ஆலன் டூரிங் என்ற கணிதவியலாளர் 'இயந்திரங்கள் சிந்திக்கமுடியுமா?' என்ற கேள்வியை முன்வைத்து, 'டூரிங் சோதனை' என்ற கருத்தை உருவாக்கினார்.

1960- 70கள்: எளிய நிரல்களின் மூலம் தர்க்கக் கணக்கீடுகள்,



சதுரங்க விளையாட்டு, எண் கணக்கீடு போன்ற துறைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1980- 90கள்: 'நிபுணர் அமைப்புகள்' எனப்படும் செயற்கை நுண்ணறிவின் வடிவங்கள் மருத்துவம், தொழிற்சாலை, கல்வி ஆகியவற்றில் பயன்படுத்தப்படத் தொடங்கின.

2000 - இன்றுவரை: இணையம், பெருந்தரவு, அதிவேக செயலிகள் ஆகியவை உருவானதால் செயற்கை நுண்ணறிவு ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. இதனால் செயற்கை நுண்ணறிவு ஒரு கோட்பாட்டிலிருந்து நடைமுறை உலகிற்குள் நுழைந்து, மனித வாழ்வின் அவசியமான அங்கமாக மாறிவிட்டது.

இன்றைய உலகில் செயற்கை நுண்ணறிவு எங்கு பார்த்தாலும் பயன்படுகிறது. சில முக்கிய துறைகளான மருத்துவம், கல்வி, பொருளா தாரம், வணிகம், போக்குவரத்து, பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் என்பன இவற்றுள் உள்ளடங்கும். இதன் மூலம் செயற்கை நுண்ணறிவு மனித வாழ்க்கையை எளிதாக்கி, வேகமாகவும் துல்லியமாகவும் மாற்றுகிறது.

இன்றைய செயற்கை நுண்ணறிவு 'குறுகிய நுண்ணறிவு' எனப்படும். அதாவது ஒரு குறிப்பிட்ட பணி மட்டுமே செய்யும். உதாரணமாக, சதுரங்கத்தில் உலக சாம்பியனை வெல்லும் கணினி வேறு எந்த பணியும் செய்ய இயலாது. ஆனால் 'பொது நுண்ணறிவு' என்பது மனிதனைப் போல் பல துறைகளில் சிந்தித்து, தீர்மானித்து, கற்றுக்கொண்டு, புதிய அறிவை உருவாக்கும் நிலையாகும்.

மனிதன் போல பல துறைகளில் அறிவைப் பயன்படுத்தும் திறன், புதிய சிக்கல்களைத் தானாகப் புரிந்து தீர்வு காணும் திறன், தன்னைத் தானே மேம்படுத்திக் கொள்ளும் சக்தி - இவை ஒருநாள் நனவாகும் என்ற நம்பிக்கை அறிவியல் வல்லுநர்களிடையே அதிகரித்து வருகிறது.

பொது நுண்ணறிவு உருவாகும்போது உலகம் பெறும் பல நன்மைகள்: உலக பிரச்சினைகளுக்கு தீர்வு, பசி, வறுமை, நோய், சுற்றுச்சூழல் அழிவு போன்ற பிரச்சினைகளை ஆழ்ந்த தரவாய்வு செய்து தீர்வு காணும் அறி வியல் முன்னேற்றம், விண்வெளி ஆய்வு, கடலடித் தேடல், புதிய ஆற்றல் வளங்கள் கண்டுபிடிப்பு, மனித உழைப்பின் குறைவு, தொழில்துறை உற்பத்தி, விவசாயம், அலுவலகப் பணிகள் அனைத்தும் எளிதாகுதல், சமூக சமநிலைக் கல்வி, சுகாதாரம், தகவல் ஆகியவை அனைவருக்கும் சமமாக கிடைக்கும். ஆனால், இந்த வளர்ச்சி பல அபாயங்களையும் உருவாக்கக் கூடும். வேலை இழப்பு அதில் முக்கியமானது. பல கோடி மக்கள் தங்கள் தொழில்களை இழக்க நேரிடும். அதிகாரக் கட்டுப்பாடு ஏற்படக்கூடும். சில நாடுகள் அல்லது நிறுவனங்கள் மட்டுமே இதைச் சொந்தமாக்கினால், உலக சமநிலைக்கு ஆபத்து ஏற்படும்.

மனிதத்தனம் அடையாளம் இழக்கும். சிந்தனை, முடிவு எடுக்கும் திறன் போன்றவை இயந்திரத்துக்கு ஒப்படைக்கப்படும் அபாயம் ஏற்படக்கூடும். ஒருநாள் இயந்திரம் தானாகவே கட்டுப்பாட்டை மீறி, மனிதனை மீறிய ஆட்சியைப் பெற்று சுயாதீன இயந்திரமாகும் சாத்தியம் ஏற்படலாம்.

இன்றைய சர்வதேச அரசியல் செயற்கை நுண்ணறிவைச் சுற்றியே சுழல்கிறது. பெரும் நாடுகள் இராணுவம், உளவு, பொருளாதாரம் ஆகிய துறைகளில் இதை உபயோகிக்கின்றன. தொழில்நுட்ப போட்டி புதிய 'செயற்கை நுண்ணறிவு குளிர்போர்' நிலையை உருவாக்கியுள்ளது.

வளரும் நாடுகள் பின்னடைவு அடையக்கூடிய அபாயம் அதிகம். பொது நுண்ணறிவின் ஆதிக்கத்தை சமநிலைப்படுத்த மனிதகுலம் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்: சர்வதேச சட்டங்கள் மூலம் கட்டுப்பாடு, மனித நலனுக்கு எதிரான பயன்பாடுகளைத் தடுக்க ஒப்பந்தங்கள், கல்வி முறையில் மாற்றம் செய்து புதிய திறன்களை கற்பித்தல், நெறிமுறைகள், மனித மதிப்புகள் ஆகியவற்றை இயந்திரங்களில் உள்ளடக்குதல் என்பன செய்யப்பட வேண்டும். ஒருநாள், செயற்கை நுண்ணறிவு மற்றும் பொது நுண்ணறிவு இணைந்து, மனித வாழ்வின் அனைத்து துறைகளையும் இயக்கும். அந்த நிலை பயமூட்டக்கூடியதாக இருந்தாலும், சரியான வழிநடத்தல் இருந்தால் உலகம் முழுமையான வளமும் சமநிலையும் அடையும்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் பொது நுண்ணறிவு மனித வரலாற்றின் மிகப்பெரிய திருப்பமாகும். பொது நுண்ணறிவை சரியாகப் பயன்படுத்தினால் மனித குலத்திற்கு பேராசீர்வாதம். தவறாகப் பயன்படுத்தினால் பேராபத்து.

எனவே, அறிவியலாளர்கள், அரசுகள், சமூகங்கள், ஏன்? ஒவ்வொரு தனி மனிதனும் இணைந்து எதிர்காலத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும். மனிதனின் கையில் உள்ளது - இந்த தொழில்நுட்பத்தை நன்மைக்குப் பயன்படுத்துகிறோமா அல்லது அழிவிற்குப் பயன்படுத்துகிறோமா என்பதில் தான் மனித வரலாறு தீர்மானிக்கப்படும்.

செயற்கை நுண்ணறிவு என்பது இருவேலைக் கூரிய வாள். அது மனிதகுலத்தை ஒரு புதிய உச்சிக்கு எடுத்துச் செல்லும் சக்தியும், ஒரே நேரத்தில் அதையே அழிக்கும் சக்தியும் கொண்டது.

'பொது நுண்ணறிவு' உருவாகும் நாளில், மனித வரலாறு முந்தைய அனைத்தையும் மீறி புதிய பாதையை எட்டும். அந்த பாதை நம் கையில் உள்ளது. அறிவியலாளர்கள், அரசுகள், சமூகங்கள், ஒவ்வொரு மனிதரும் இணைந்து, நெறிமுறை களைப் பின்பற்றி, பொது நுண்ணறிவின் சக்தியை மனித நலனுக்காகவே பயன்படுத்த வேண்டும். அப்போதுதான், செயற்கை நுண்ணறிவு மனிதனை அடிமைப்படுத்தாமல், மனிதனின் உண்மையான துணையாக மாறும்.

# பெண்ணே..!



பெண்ணே!
மகளாய் இருந்த போது
தந்தையுள் அடக்கமானாய்...
நீ அன்போடு அழைத்த
அப்பா என்ற வார்த்தையிலே
அவர் ஆறடியும் சுருக்கிப் போகும்.

உன் அன்பெனும்
இதயத்திற்கு
அவர்
ஆயுளும் அடிமையாகும்...!

வளர்ந்த பின்னே
உன் சோதரன்.
அவன் ஆளுகைக்குள்
அடக்கமானாய்...
உன் பரிவான பாசத்திலே..
உடன் பிறப்பின்
அருமை புரிந்திடுவான்...

திருமணம் ஆன பின்னே
கணவனுள் அடக்கமானாய்...
அவர் வாழ்வையே உன் வாழ்வென
வாழ்ந்திடுவாய்...!

அடங்கியே போனதால்
அடிமை வம்சம் இல்லையடி...!

ஆண் ஆதிக்கம் கொண்டவரும்
அம்மா... என்ற வார்த்தைக்கு
அடங்கியே போயிடுவர்.

ஆண் இனத்தையே
தன் அன்பினால் ஆளும் தன்மை
பெற்றிருந்தும்
தன் தன்மை சுருக்கி
ஆளவைத்து அழகு பார்க்கும்
பேரினமடி... பெண்ணே நீ!

**கவிதா பிரபாகர்**

-நாகி




# பார்த்தீ!

**நான்** அப்போது பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தேன். பிரபலமான பெண்கள் கல்லூரி அது. புத்திசாலித்தனமும் துடுக்கும் விளையாட்டுத்தனமும் கொண்ட இளம் மகளிர் நிறைந்திருந்த கல்லூரி அது. மிகமிகக் கண்டிப்பான எங்கள் அதிபரின் முன்னால் நாங்கள் எங்கள் கொடுக்குகளை மடித்து வைத்துக் கொள்வோம். அட்டகாசம் எல்லாம் அவரின் முதுகின் பின்னேதான். இது எங்கள் அதிபருக்கும் தெரியும்.

ஒருநாள். மதிய இடைவேளைக்கு முன்னர், என் வகுப்பைச் சேர்ந்த அனைவரும் - சுமார் ஒரு இருநூறு பேர் வரையில் இருக்கும் - கூட்டம் நடைபெறும் பெரிய மண்டபத்திற்கு அழைக்கப்பட்டோம். ஏன், எதற்காக திடீரென்று கூட்டம் என்று புரியவில்லை. யார் பேசப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. எல்லோரும் குசுகுசுப்பாகப் பேசிக்கொண்டதே பேரிரைச்சலாக மாறியிருந்தது.

மேடையிலிருந்து வந்த கைதட்டல் சத்தம் எங்களை நிசப்தமாக்கியது. அதிபர்தான். எங்கள் நினைவாற்றலை எப்படி மேலும் மேம்படுத்துவது என்பது பற்றிய சில அறிவுரைகள் தந்தா அவ.

"உங்களுக்கு சதுரங்க பயிற்சியும் அதனோடு இணைந்த போட்டிகளும் நடத்த நான் முடிவு செய்திருக்கிறேன். இரண்டு பேர் வருவார்கள். இரண்டு பிரிவுகளாக நீங்கள் பயிற்சி எடுப்பீர்கள். கீழே அறிவிப்புப் பலகையில் முன்பே ஆர்வம் காட்டியவர்களின் பெயர் விபரங்கள் இருக்கின்றன. பார்த்து, யார் எந்தப் பிரிவு என்று தெரிந்து கொள்ளுங்கள். முன்பே பெயர் கொடுக்காத.. இப்போ பழக ஆசைப்படுபவர்களும், பெயர் கொடுத்து இப்போது செய்ய விருப்பப்படாதவர்களும் என்னை வந்து சந்தியுங்கள்."

இந்தப் பயிற்சி வாரத்தில் ஒருநாள் பாடசாலை விட்ட பின்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. நான் பரதனின் குழுவில் இருந்தேன். மற்றைய குழு வேறொரு கட்டடத்தில் இருந்தது. அவர்களின் பயிற்சியாளர் யாராக இருக்கும் என்று அறிந்து கொள்ளும் அவாவில் எனது நண்பிகளைச் சந்திக்கும் சாக்கில் அங்கு சென்றேன்.

அப்போதுதான் நான் அவனை(ரை) முதன் முதலில் பார்த்தேன். வாடலான தோற்றம். மெலிந்த தோற்றத்தாலோ என்னவோ முன்பற்கள் சற்று எடுப்பாகத் தெரிந்தன. கலகலவென்றிருக்கும் எங்கள் பெண்கள் மத்தியில் அவன் சற்றுக் கூச்சப்படுவது தெரிந்தது. யாழ் இந்துக் கல்லூரியைச் சேர்ந்தவன் என்று அறிந்திருந்தேன். எனது



நண்பிகள் என்னை அறிமுகப்படுத்தி வைத்தனர்.

"கவனம்...! இவ மாற்றுக் குழு. உளவறிய வந்திருக்கிறா.. இவ இங்க நிக்குமட்டும் எந்தக் கதையையும் விட்டிட வேண்டாம்.." ஒரு பகிடி யான அறிமுகம். அவன் புன்னகைத்தான். சட்டென்று முகம் மலர்ந்து பிரகாசமானது.

"ஓ..! அப்பிடியா? அப்ப போட்டியில பார்த்துக் கொள்ளுவம். நான் பார்த்திபன்" புன்னகைத்தபடி மிகவும் இயல்பாக பேசினான்.

அப்போதுதான் நான் முதன்முதலில் பார்த்தியைப் பார்த்தேன். ஏற்கனவே பார்த்தியை அறிந்திருந்த உரும்பராயைச் சேர்ந்த நண்பிகளும் இருந்ததால் நானும் அவனுடன் தொடர்ந்தும் நட்பாகப் பழக முடிந்தது.

பார்த்திக்கு புத்தகங்கள் வாசிப்பதில் அப்படியொரு ஆர்வம். எனது நண்பிகள் சிலரும் நானும்கூட புத்தகப் புழுக்களாக இருந்தோம். வாசிப்பு பற்றி நாங்கள் நிறைய விவாதித்துக் கொண்டோம். அப்போதுதான் பாலஸ்தீனம் பற்றி, பிடல் காஸ்ட்ரோ பற்றி நான் அறிந்து கொண்டேன். இவை என் ஆர்வத்தையும் தூண்டின. அதன் பின்னர் நாட்டில் என்னென்னவோ நடந்தன. மிகப் பெரிதாக நடந்த ஜூலை இனப்படுகொலை தமிழ்மக்கள் வாழ்க்கையையே புரட்டிப் போட்டது.

எங்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட கொடுமைகள் இளம் தலைமுறையினரிடையே ஒரு பிரளயத்தைக் கொண்டு வந்தது.

நானும் அதன்பால் ஈர்க்கப்பட்டேன். சுதந்திர உணர்வுடன், மற்றவர்கள் மேல் கரிசனம் காட்டும் யாருக்கும் வரக்கூடிய ஒரு உணர்வுதான் அது. இன உணர்வில்லாதவன் மனிதனாகவே இருக்கத் தகுதியற்றவன்.

பாடசாலை காலம் கடந்ததும் பாடசாலை நண்பிகளுடன் இருந்த தொடர்பு குறைந்தது. நான் தீர்க்கமாக முடிவெடுத்து என்னுடைய பாதையை வடிவமைத்துக் கொண்டேன். 85ம் ஆண்டின் ஆரம்ப காலம். ஒருவரைச் சந்திப்பதற்காக யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் சென்றிருந்தேன் நான்.

என்னைச் சந்திக்க வந்தவருடன் வேறு நான்கைந்து பேர் நின்றிருந்தனர். வேறு சிலரும் அங்கிருந்தனர். நாங்கள் மும்முரமாக பேசிக்கொண்டு இருந்தபோது பரிச்சயப்பட்ட குரல் ஒன்று கேட்டது. பார்த்திபன். அவரும் என்னைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனார்.

"பார்த்தி! நீங்களா? இந்த நேரம் யூனியில இல்லாம இங்க என்ன செய்யிறீங்கள்?"

"நானும் அதைத்தான் கேட்கிறன்? இங்க நீங்கள் என்ன செய்யிறீங்கள்? அப்ப நீங்கள்....?" இழுத்தார்.

"ஓமோம்...! அவவும் துடிப்பாத்தான் இருக்கிறா. அதைப்பற்றித்தான் நாங்கள் கதைச்சுக் கொண்டு இருந்தனாங்கள்..." என்னோடை பேசிக்கொண்டிருந்தவர் சொன்னார்.

"இவர் இப்ப பார்த்தி இல்லை.... திலீபன். இனி அப்பிடியே கூப்பிடுங்கோ." பார்த்திக்கு பக்கத்தில் நின்றவர் சொன்னார். அவர் தன்னை தீசன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். சந்தேகமாகப் பார்த்த என்னிடம்

"அது அப்பிடித்தான்...!" என்றார் ஒரு மெல்லிய புன்னகையுடன். பார்த்தி எதுவும் பேசவில்லை.

திலீபனை அன்றுதான் அந்த இடத்தில் வைத்துத்தான் நான் கண்டேன்.





அதன்பின் நடந்தவை வரலாறு. என்னைப்போல சிந்தனையுடன் இருந்தவர்களை ஒன்றாகச் சந்திக்க வைத்ததில் திலீபனின் பங்கு அளப்பரியது. ஆண்களால் ஆளப்பட்ட ஒரு சமூகத்தில் இருந்து வந்தவர்கள் நாங்கள். ஆண்கள் பலரில் மனமாற்றம் ஏற்பட்டிருந்தாலும் சமுதாயம் என்ன சொல்லும் என்று நாங்களாகவே கற்பிதம் பண்ணி தயங்கித் தயங்கி நின்ற பெண்களாக எம்மில் சிலர் இருந்தனர்.

அவற்றை தகர்த்தெறியும் ஒரு ஆதரவாக திலீபன் இருந்தார். அவரிடம் ஒரு பரந்த, தெளிந்த சிந்தனையிருந்தது. பெண்களை மதித்தார். பிழைகளை அந்தந்த இடத்திலேயே மனம் நோகாது சுட்டிக்காட்டி திருத்தும் தலைமைத்துவம் இருந்தது. சொல்ல நினைப்பதை தெளிவாகவும் மனதைத் தொடும் வண்ணமும் எடுத்துக்கூறும் வாக்கு வன்மையிருந்தது.

'சுதந்திரப்பறவைகள்' என்ற பத்திரிகையை ஆரம்பித்து அதை நாங்கள் திறம்பட நடத்துவதற்கு முக்கிய காரணியாக இருந்தவரே திலீபன்தான். பின்னாளில் நாங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஆரம்பக் கல்வி நிலையங்கள் போன்றவற்றை ஊருக்கு ஒன்றாகத் திறந்து அதை நிர்வகிக்கவும், அப்படியே சிறுசிறு வேலைத்திட்டங்கள் செய்து மக்களிடத்தில் எங்கள் கருத்துக்களை, வேலைத்திட்டங்களைக் கொண்டு செல்லவும் எங்களோடு இணைந்து நின்றார் திலீபன்.

எங்களுக்குத் தேவையான பயிற்சி முகாம்களை ஒழுங்கு செய்வது, யாரைச் சந்தித்தால் எங்களுக்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற ஆலோசனைகள் வழங்குவது, சந்தேகங்களை நிவர்த்தி செய்வது என்று எங்களுக்கு உறுதுணையாக நின்றாலும் ஒருபோதும் பெண்கள் அணி தொடர்பாக தான் முன்னணியில் நின்று செயற்பட்டதில்லை. அரசி யலில் பெண்களின் பங்கு காத்திரமானதாக இருப்பதில் திலீபனுக்கு பெரும் பங்குண்டு என்றால் மிகையில்லை. திலீப னின் அரசியல் அறிவும் பேச்சாற்றலும் என்னை வியக்க வைத்திருக்கின்றன. மக்களோடு அவர் பழகும் பாங்கு என்னை ஆச்சரியப்படுத்தும். நேர்மையும், கண்ணியமும், மனிதநேயமும் மிகுந்த ஒரு இளைஞனாகவும் போர்க்களத்தில் அஞ்சாது நின்று போராடும் ஒரு வீரனாகவும் ஒரு முன்னுதாரணமான போராளியாக திலீபன் திகழ்ந்தார்.

எல்லா ஒட்டுக் குழுக்களும் சுதந்திரமாக உலவிய காலம் அது. அதைப் பயன்படுத்தி எங்கள் பெண்கள் அமைப்பை பரிகசிக்கவும், சமயங்களில் ஆபத்தை உண்டுபண்ணி அச்சமூட்டவும் துணிந்திருக்கிறார்கள் அவர்கள். அப்போதெல்லாம் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் இருக்குமாறு அறிவுறுத்துவார் திலீபன். வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷனை அடுத்து சுதந்திரப் பறவைகள் பலர் ஆயுதப் பயிற்சி எடுத்தனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து தேசியத் தலைவரை இந்தியாவில் வைத்து கைது செய்து வைத்திருந்தது மக்களை மிகவும் எழுச்சிக்கு உள்ளாக்கியது. ஆகஸ்ட் 4, 1987 அன்று சரித்திரத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சுதுமலைப் பிரகடனத்தை நிகழ்த்தினார் தலைவர். அது நடக்கவிருக்கும் பேரவலத்தை மக்களுக்கு உணர்த்தும் ஒரு எழுச்சிமிக்க உரை யாக இருந்தது.

இந்திய அமைதிப்படை ஈழமண்ணில் காலடி எடுத்து வைத்தால் என்னவெல்லாம் நிகழும் என்பதை வங்கத்தின் வரலாறு எங்களுக்கு உணர்த்தியிருந்தது. தலைவர் எவ்வளவோ அறிவுறுத்தியும் பிடிவாதமாக ஐந்து அம்சக் கோரிக்கைகளை இந்திய அரசின் முன் வைத்து நீர்கூட அருந்தாத உண்ணாநோன்பை தொடங்கினார் திலீபன். அகிம்சைப் போரை இந்தியா மதிக்கப் போவதில்லை என்று தெரிந்தும் தான் எடுத்த முடிவிலிருந்து பின்வாங்கவில்லை அவர். ஆயுதங்கள் களையப்பட்டிருந்த நேரம் அது. பாதுகாப்பற்ற நிலைமை. எங்கும் பதற்றம் நிலவியிருந்தது. ஆனால் நல்லூரின் வீதியில் உருகிக்கொண்டிருந்த திலீபனைச் சுற்றி ஊரே திரண்டு கவசமாயிருந்தது.


அகிம்சையின் இருப்பிடமாக தன்னை பறைசாற்றும் இந்தியா எமது அறவழிப் போராட்டத்தை எள்ளி நகையாடியது. தனக்கு கீழ் கூழைக்கும்பிடு போட்டு அடிபணியாத தேசியத் தலைவரையும் விடுதலைப்புலிகள் அமைப்பையும் தண்டிக்கும் தருணமாகப் பார்த்தது. தமிழீழ மண்மீதான ஆக்கிரமிரமிப்பின் முதற்படியாக எங்கள் திலீபன் ஊனை உருக்கி கரைந்து போவதை வேடிக்கை பார்த்தது.

இருண்டிருந்த தேசத்தின் அகல் விளக்காக தன்னையே எரித்து ஒளியூட்டிய திலீபன் என்னும் தியாகதீபம் பன்னிரு நாட்களில் 26.09.1987 அன்று உடல் சுருண்டு அணைந்து போனது. பாலகர், இளைஞர், யுவதிகள், முதியவர் என்ற வேறுபாடின்றி கதறிய எம் மக்களின் குரல் இன்றுவரை இந்தியாவினதும் உலகநாடுகளி னதும் மனதை இளக்கவில்லை.

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும், சுதந்திர தமிழீழம் மலரட்டும்' என்ற திலீபனின் விடுதலை முழக்கம் இன்றும் தாயகக் காற்றிலே விரவிக் கிடக்கிறது.

பார்த்தீ தன் வயிற்றிலே மூட்டிய தீயை நெஞ்சிலே சுமப்பவர்களாக தவிக்கிறோம் நாம்.

# கவிதைப் பூக்கள்



கம்பீரமாய் எழுந்து நடந்த
ராஜாவின் அழுக்கு
அங்கவஸ்திரம்
கீழே விழுந்தது.
பைத்தியக்காரன்.

- - - - - - - - - - -

நல்லபடியாய் வாழ்ந்து
வீழ்ந்த குடும்பம்.
மிஞ்சியது..
வரட்டுப் பேச்சும் வெற்றுத்
திண்ணையும்.

- - - - - - - - - - -

என்னிடம் இரவில் பேச
கொட்டக் கொட்ட
விழித்திருக்கின்றன.
விண்மீன்கள்.

- - - - - - - - - - -

கிழிந்த ஆடையுடன்
வாய் பிளந்து பார்க்கும்
ஏழைச் சிறுவனின்
ஒற்றை லட்சியமாய் இருக்கிறது
ஒரு குச்சி ஐஸ்.

- - - - - - - - - - -

பக்தனின் பிரார்த்தனை கேட்டு
குழம்பி, சிலையாய் நின்றான்
கடவுள்.

- - - - - - - - - - -

நாம் மட்டும்
முகம் பார்த்து அமைதியாய்
அமர்ந்து இருக்க
நம்மிடம் நிறைய பேசுகிறது
தனிமை.

-புகழ்



பவித்திரா ராகவன்

# நானுமே சாட்சியாய்

**கடந்த** ஒரு மாத காலமாக எனது நாட்கள் பரபரப்பும் பதட்டங்களும் நிறைந்தனவாய், நிற்கக் கூட நேரமின்றி சுழன்று கொண்டிருந்தன. காலைநேர பரபரப்பு என்பது எனக்கொன்றும் புதிதல்ல. நீதிமன்ற வளாகத்தில் காலை 9 மணிக்கு எப்படியேனும் கால் வைத்துவிட வேண்டும். நான் வசிப்பதோ மல்லாகத்தில். எனது சட்ட அலுவலகமோ வேம்படி பாடசாலைக்கருகில். நான் வழக்காட வேண்டியதோ பெருவாரியாக யாழ்ப்பாண நீதிமன்றத்தில்.

அப்படியென்றால் காலை நேர பரபரப்பு தேவையானதே. ஆரம்பத்தில் நான்தான் வண்டியை ஓட்டிச் செல்வேன். இப்போதெல்லாம் வேலைப்பளு அதிகம் என்பதால் ராதாக்கிருஷ்ணனை வண்டி ஓட்டுனராக வைத்துக் கொண்டேன்.

ராதாக்கிருஷ்ணனும் மல்லாகத்தை சேர்ந்தவன்தான். எங்கள் வீட்டிற்கருகே வசிக்கிறான். ஏழ்மையான குடும்பம். பெற்றோரை இளம் வயதிலயே இழந்தவன். பாட்டியால் வளர்க்கப்பட்டவன். எவ்வளவோ முயன்றும் படிப்பு அவனுக்கு ஏறவே இல்லை. ஆனாலும் பண்பானவன். நேர்மையானவன். அவனது பாட்டி வீடு எங்கள் அம்மம்மாவின் வீட்டுக்கு அருகில்தான்.

அவனது பாட்டி, "தம்பி, இவனை உனக்கு உதவியாளனாக வைத்துக் கொள்வாயா?" எனக் கேட்ட போது எவ்வித தயக்கமும் இன்றி ஏற்றுக் கொண்டேன்.

1996ம் ஆண்டு காலப்பகுதியில் எப்போதெல்லாம் பாட்டியின் வீட்டிற்கு செல்வேனோ, அப்போதெல்லாம் இவனது எட்டு வயது அக்காவுடன் விளையாடுவதுண்டு. அவள் பெயர் சுமதி. பார்ப்பதற்கு அழகாய் இருப்பாள். எப்போதும் இரண்டு சடை பின்னி, கனகாம்பரப் பூ அணிந்திருப்பாள். நான் "சுள்ளக்கா! சுள்ளக்கா!" என்றழைப்பேன். அப்போது எனக்கு வயது நான்கிருக்கும்.

ராதாக்கிருஷ்ணனோ பிறந்து ஐந்து மாதக் குழந்தை. ஏணையில் உறங்கும் அவனை நானும் சுள்ளக்காவும் கிள்ளி விட்டு ஓடு வதுண்டு. குரும்பை பொறுக்கி தேர் செய்து விளையாடுவதுண்டு. பக்கத்துக் காணிகளில் மேயும் மாடுகளுக்கு குறுணிக் கற்களை எறிந்து விட்டு ஓடுவதுண்டு. நான் மட்டுமல்ல. என் தங்கையும் எங்கள் கூட்டணியில் இணைந்து கொள்வாள். இன்று போல் பகைமைக் கண்ணோடோ, அச்சத்தோட அயலவர் ஒருவரையொருவர் பார்த்ததில்லை.

கோவிட் காலங்களில் கதவுகளை அடைத்து, உதவிக்கரம் நீட்ட அஞ்சி, பகைவர் போல் வாழ்ந்ததுமில்லை. எவ்வாறேனும் திடீரென சுள்ளக்கா எம்முடன் விளையாட வருவதில்லை. அவள் எங்கேயெனக் கேட்ட போது பாட்டி, "சுமதி இனி வர மாட்டாள்" என்றாள்.

பல நாட்கள் சுமதியின் வீட்டருகே ஊரார் கூடுவர். சிலவேளை அவள் அம்மாவின் அழுங் குரலோசை பெரும் சத்தமாய்க் கேட்கும். ராதாக்கிருஷ்ணன் பகல்பொழுதுகளில் எங்கள் வீட்டில் வரவேற்பறையில் இருப்பான். நானும் தங்கையும் அவனருகே காவலுக்கு இருப்போம். அப்போதும் ஏணையில் உறங்கும் அவனைக் கிள்ள சுள்ளக்கா வரவில்லை.

எங்கள் வீட்டிலிருந்து. பெரிய தட்டில் மதிய சாப்பாடு போகும்.

ஒரு நாள், திடீரென, ஊரே சுள்ளக்கா வீட்டில் கூடியது. அழுகுரலோசைகள் ஓயவில்லை. தோரணம் கட்டியிருந்தார்கள். அன்றும் ராதாக்கிருஷ்ணன் எங்கள் வீட்டில்தான் விளையாடிக் கொண்டிருந்தான். அம்மா என்னையோ, தங்கையையோ சுள்ளக்கா வீட்டிற்கு அழைத்துச் செல்லவில்லை.

கொஞ்ச நாட்கள் கழித்து சுள்ளக்கா வீட்டிற்குச் சென்ற போதும், அன்றும் அவள் எம்முடன் விளையாட வரவில்லை. அவள் அம்மாவின் படம் சுவரில் மாட்டப்பட்டு மாலை போடப்பட்டிருந்தது. அவள் பாட்டி மட்டும் அம்மாவிற்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள். அவள் அப்பாவும் அங்கிருக்கவில்லை. அந்த வயதில் எவ்விதப் புரிதலும் எனக்கு இருக்கவில்லை.

வளர்ந்த பிறகு, சுள்ளக்கா ஒரு நாள் திடீரென காணாமற் போனாள் என்றும், ஊரார் திரண்டு பாடசாலை முதற்கொண்டு எங்கெல்லாம் தேடியும் அவள் கிடைக்கவில்லையென்றும், அவளைக் காணவில்லை என பொலிஸில் முறையிடச் சென்ற அப்பாவும் திரும்பி வரவேயில்லை என்றும் எனது பதின்நான்கு வயதில் அம்மா சொல்லிக் கேட்டேன்.

இன்று வரை என்னால் சுள்ளக்காவை மறக்க முடிவில்லை. இறுதியாக ஒருநாள் பாடசாலை விட்ட நேரம் பூப்போட்ட மஞ்சள் சட்டையில் மதிய நேரம் பார்த்த ஞாபகம்.

“சேர், இன்றைக்கு யாழ்ப்பாண நீதிமன்றிற்கா?“ ராதாக்கிருஷ்ணன் குரல் கேட்டு சுதாகரித்துக் கொண்டேன்.

“ராதா, எத்தனை தடவை சொல்வது? என்னை சேர் என்று கூப்பிடக்கூடாதென்று. அண்ணா என்று கூப்பிடு. இல்லா விட்டால் பெயர் சொல்லிக் கூப்பிடு“ “இல்லை சேர்! கோட்டில், clients முன்னால் அப்படிக் கூப்பிட்டால் நல்லாயிருக்காது...,“

“சரி விடு. நேற்றைக்கு ஏதோ கதைக்க வேணுமென்றாய், என்ன சொல்லு“

“அம்மம்மா உங்களோட கதைக்க வேணுமாம். அக்காவின்டையும் அப்பாவின்டையும் விசயம் பற்றி.... செம்மணிக் குழி தோண்டத் தொடங்கி, பல காணாமற் போனவர்கள் கிடைத்திருக்கிறார்கள். ஒரு வேளை அக்காவும்...?“

“ராதா! இரவுக்கு வீட்டிற்கு வாறன்...!“

மற்றவர்களைப் பொறுத்தவரைதான் நான் சட்டத்தரணி. ராதாக்கிருஷ்ணனுக்கும் சுள்ளக்காவிற்கும் அவர்கள் சகோதரன். ஆனால் சொல்லப்போனால் சுள்ளக்காவிற்கும் அப்பாவிற்கும் நடந்த விடயங்கள் பற்றி அம்மா பகிர்ந்த விடயங்களைத் தாண்டி யாரிடமும் எதுவும் கேட்டதில்லை.

ராதாக்கிருஷ்ணன் பத்து வருடங்களாக என்னுடன் வேலை செய்கிறான். அவனிடம் கூட கேட்டதில்லை. சென்ற வாரம் கூட ராதாவின் அம்மம்மா இந்த தள்ளாடும் வயதிலும் மல்லாதத்திலிருந்து செம்மணியில் நடந்த கவனியீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டாள் என ராதா சொல்லிக் கேள்விப் பட்டிருக்கிறேன். அன்று மட்டுமல்ல, எங்கெல்லாம் காணமற் போனோரின் உறவுகள் கூடி, தங்கள் ஆதங்கத்தை போராட்டமாகவோ, கவனயீர்ப்பாகவோ, முறைப்பாடாகவோ சொல்கிறார்களோ அங்கெல்லாம் சுள்ளாக் காவின் அம்மம்மா இருப்பாள். “ஐயோ..! ராசா! என்ட பேர்த்திக்கும் மருமகனுக்கும் என்னாச்சு..?“ என்ற அவள் ஓலத்தை தொலைக்காட்சிகளும், தனியார் ஊடகங்களும் வெளியிடத் தவறவில்லை.

யதார்த்தத்தில் அவர்களுக்கு என்ன நடந்தது என்று எனக்கும் புரிந்திருந்தது. சுள்ளக்காவின் அம்மம்மாவின் கேள்விக்கோ, தேடலுக்கோ விடை கிடைக்கப் போவதில்லை என்பதை நான் மட்டுமல்ல, அந்த மூதாட்டியும். நன்கே அறிந்திருந்தாள்.

இன்று இரவு நான் ராதாவின் வீட்டிற்கு வருவதாய் சொன்னதும் அவளை ஆறுதல் படுத்தவே. இன்னும் சொல்லப் போனால் என் சுள்ளக்காவிற்கு என்னதான் நடந்தது எனத்



தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஏக்கம் என் மனதில் பல நாட்களாகவே இருக்கிறது. இரவு 7 மணியிருக்கும். இன்றும் ராதாவின் வீட்டில் அவன் அம்மாவின் படத்திற்கு மட்டுமே மாலை போடப்பட்டிருந்தது. மூதாட்டியின் நம்பிக்கை இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டேன்.

“பாட்டி சொல்லுங்க... நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?“

“தம்பி! உனக்கு சுமதியை ஞாபகம் இருக்கிறதா...?“

எப்படி மறப்பேன்? அவளைக் கடைசியாக மஞ்சள் பூ போட்ட சட்டையுடன் பார்த்த நாள் இன்னும் என் கண் முன்தான் இருக்கிறது, என்று சொல்ல வார்த்தை வந்தாலும்.., “...ம்.. பாட்டி!“ என்று மௌனம் காத்தேன்.

“ராதா!, அக்காவோட அந்த பொருட்களை எடுத்து வா!“ என்றாள்.

ராதாவும் ஒரு பெட்டியை எடுத்து வந்து கொடுத்தான்.

“தம்பி இந்த சட்டைதான் கடைசியாக சுமதி அணிந்திருந்தாள். அன்று அவளுக்கு பிறந்த நாள். ஸ்கூலுக்கு சீருடை போடல்லை... புதுச் சட்டை போட்டிருந்தாள். Chit Chat சொக்கலேட் Box இரண்டு வாங்கிக் கொடுத்தனாங்கள். இந்த ஒரு சப்பாத்து மட்டும்தான் கிடைத்தது. மற்ற சப்பாத்துக் கூட கிடைக்கவில்லை“ என்று கூறியவள் அந்தப் பெட்டியை என்னிடம் கொடுத்தாள்.

அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்த எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஸ்தம்பித்து நின்றேன். ஆம்! அதே மஞ்சள் பூப்போட்ட சட்டை. அவர் எனக்குக் கொடுத்த Chitchat Chocolate.......

அப்படியென்றால்? அன்று..........?

“டேய் சுகு....! இந்தா Chitchat. நான் இன்றைக்கு உன்னோட விளையாட வர மாட்டேன். மூன்று அண்ணாக்களும் எனக்கு பெரிய Gift தரப்போறாங்களாம். நான் Gift ஐ வாங்கிட்டு வாறன். அம்மா கேட்டா சொல்லாத... இந்தா அஞ்சு Extra Chocolate.... byee.....!tata......!“

இப்போதுதான் எனக்கு சகலமும் புரிந்தது. அன்று எனக்கு அறியாத வயது தான். புரியாத விடயம்தான். ஆனாலும் அஞ்சு Extra Chocolates நான் விலை போகாது இருந்திருந்தால்? அவள் அம்மாவிடம் போய் சொல்லியிருந்தால்? ஒருவேளை என் சுள்ளக்கா உயிரோடு இருந்திருப்பாள். இன்று அவளுமில்லை. அவள் அப்பாவுமில்லை. பார்த்த இறுதி சாட்சியாய் நான்... “இந்தாங்க சேர், உங்களுக்குப் பிடித்த Chitchat. அக்காவிற்கு நியாயம் கிடைக்குமா?“ ராதாவின் கேள்விக்கு என்ன சொல்வதென்று தெரி யாமல் அவனைப் பார்க்கிறேன்

அஞ்சு Extra Chocolates க்கு விலைபோன என்னைப்போல் சாட்சிகளும் சாட்சியங்களும்‘ மௌனம் காக்கும் வரை காணமற் போனவர்கள் காணாமற் போனவர்களே.

# இலங்கை, வங்கதேசம் பாணியில் நேபாளம்



-ஆனந்த்





**இந்தியாவின்** அண்டை நாடுகளான இலங்கை, வங்கதேசம், நேபாளம் போன்ற நாடுகளில் அடுத்தடுத்த ஏற்படும் மக்கள் போராட்டம் இந்தியாவுக்கு புவி அரசியலில் ஒரு புதிய சிக்கலாக உருவெடுத்துள்ளது. இதன் பின்னணியில் சர்வதேச சதி இருப்பதாகக் கூறப்படும் நிலையில், அது குறித்து சற்று விரிவாகப் பார்ப்போம்.

## 3 ஆண்டுகள், 3 நாடுகள்

கடந்த 2022 ஆம் ஆண்டு, இலங்கையில் மிகப் பெரிய மக்கள் போராட்டம் வெடித்தது. 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற இலங்கை வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியை சந்திக்க மக்கள் போராட்டம் வன்முறையாக மாறியது. அதிபர் கோத்தபய ராஜபக்ச பதவி விலகியதோடு, நாட்டை விட்டே தப்பியோட நேர்ந்தது.

அதிபர் மாளிகையைக் கைப்பற்றிய போராட்டக்காரர்கள் 'பெட்ரோல், கேஸ் வாங்க முடியாமல் நாங்கள் இருக்க, அதிபர் மாளிகையின் செல்வச் செழிப்பைப் பாருங்கள்' என்று வீடியோ எடுத்துப் பரப்பி விரக்தியை வெளிப்படுத்தினர். அதிபராக இருந்த கோத்தபய ராஜபக்ச மாலதீவில் தஞ்சமடைந்தார்.

2024 ஆம் ஆண்டு வங்கதேசத்தில் மிகப் பெரிய மாணவர் போராட்டம் வெடித்தது. வங்கதேசத்தில் ஷேக் ஹசீனா தொடர்ந்து 16 ஆண்டுகளாக பிரதமராக பதவி வகித்தார். இந்நிலையில், அவரது அரசுக்கு எதிராக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் தீவிரமடைந்ததை அடுத்து, ஷேக் ஹசீனா அந்நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்தார். இதனால் ஹசீனா அரசு கவிழ்ந்ததையடுத்து, அங்கு முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைந்தது.

இப்போது 2025 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியை எட்டியுள்ள நிலையில், நேபாளத்தில் பெரும் போராட்டம் வெடித்துள்ளது. 'ஜென் ஸீ' (GEN Z) இளைஞர்கள் நடத்திய தீவிர போராட்டங்களால் பிரதமர் கே.பி.சர்மா ஒலி (73) தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசு கவிழ்ந்தது. அவருடன் சேர்ந்து, நாட்டின் அதிபராக இருந்த ராம்சந்திர பவுடேலும் ராஜினாமா செய்தார். இதனால் அந்நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இவ்வாறாக, தனது அண்டை நாடுகளில் அடுத்தடுத்த ஏற்படும் கொந்தளிப்புகள், உலக அரங்கில் வல்லரசாகும் இலக்குடன் முன்னேறிவரும் இந்தியாவுக்கு நிச்சயமாக ஒரு சவால் என்றே சர்வதேச அரசியல் நிபுணர்கள் கணிக்கின்றனர்.

## பின்னணியில் சர்வதேச சதி!?

இலங்கை, வங்கதேசத்தில் நடந்த போராட்ட பாணியில்தான் நேபாளத்திலும் கிளர்ச்சி

வெடித்துள்ளது. மாணவர்கள் போராட்டமாக தொடங்கி, பின்னர் அவர்களின் பிரதான கோரிக்கைகள் கடந்து நாட்டின் அதிபர் / தலைவர்கள் வெளியேறும் வரை போராட்டம் நீடித்தது.

வங்கதேசத்திலும் அதுவே நடந்தது. அந்நாட்டு அதிபராக இருந்த ஹசீனா இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளதால், அங்குள்ள இப்போதைய இடைக்கால அரசுக்கும் இந்தியாவுக்கும் இடையே அத்தனை சுமுகமான உறவு இல்லை.

நேபாளத்தில் முதலில் சமூக வலைதள தடைக்கு எதிராகவே போராட்டம் நடத்தப்பட்டது. அந்தத் தடை விலக்கப்பட்ட பின்னரும் கூட, “பிரத மர் ஒலி ஒரு திருடர் அவர் நாட்டைவிட்டு வெளி யேற வேண்டும்“ என்ற கலகக்குரல் வலுத்தது. பிரதமர் பதவியைத் துறந்த கே.பி.சர்மா ஒலி, துபாயில் தஞ்சமடையவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இலங்கை, வங்கதேசத்தைப் போலவே நேபாளத்தில் ஏற்பட்ட கலவரமும் இந்தியாவால் உற்று நோக்கப்பட்டு வருகிறது. கலவர பாதிப்புகள் குறித்து கவலை தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, அமைச்சரவைக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டி ஆலோசனையும் நடத்தினார்.

ஏனெனில், நேபாளம் பூகோள வரைபடத்தில் அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது. சிக்கிம், மேற்கு வங்கம், உத்தராகண்ட், உத்தரப் பிரதேசம், பிஹார் என ஐந்து மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் நேபாள நிலப் பகுதிகள் அமைந்திருக்கின்றன. எண்ணெய் மற்றும் உணவுக்காக இந்தி யாவையே பெரும்பாலும் நம்பியிருக்கிறது நேபாளம்.

கலாசார தொடர்புகள், இந்தியாவில் நேபாளிகள் அதிகம் பணிபுரிதல் என்ற எத்தனை தொடர்பு இருந்தாலும் கூட நேபாளத்தில் இருந்துவரும் அரசுகள் எப்போதுமே சீனாவுடன் அதிக நெருக்கம் காட்டுபவையாக இருந்துள்ளன.

அது கே.பி.சர்மா ஒலியின் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி யுஎம்எல்-ஆக இருக்கட்டும், இல்லை ஷேர் பகதூர் தூபாவின் நேபாளி காங்கிரஸாக, புஷ்ப கமல் தாஹல் என்ற பிரச்சண்டாவின் கம்யூனிஸ்ட் பார்டி ஆஃப் நேபாளாக இருக்கட்டும். எல்லாமே சீனா சார்புடையதாகவே இருந்துள்ளன.

மூன்று தலைவர்கள் மீதுமே ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன. நேபாள அரசி யலமைப்பு, பொருளாதார தேக்க நிலை, வேலையில்லா திண்டாட்டங்கள் இளைஞர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்த



சூழலில் சமூக வலைதளத் தடை நெருப்பில் எண்ணெய் வார்த்ததுபோல் அமைந்தது.

இளம் போராட்டக்காரர்கள், ஊழல்வாதிகள் மீது நடவடிக்கையோடு ஒட்டுமொத்த அரசமைப்பையும் மாற்றி எழுத வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

மூன்று நாடுகளில் நடந்த போராட்ட வடிவத்தில் ஓர் ஒத்திசைவு இருப்பதை சுட்டிக் காட்டும் நிபுணர்கள், இதன் பின்னணியில் அமெரிக்காவின் கை இருக்கும் என்று சந்தேகத்தை கிளப்புகின்றனர்.

## அமெரிக்கா, சீனாவின் கரிசனை

இதில் அமெரிக்கா, சீனாவின் கரிசனம் கவனிக்கப்பட வேண்டியது. மன்னராட்சியில் இருந்த நேபாளத்தில் அரசமைப்புச் சட்டம் அமுலான பின்னர் அங்கு அமெரிக்காவும், சீனாவும் தங்கள் தூதரகச் செயல்பாடுகளை அதிகப்படுத்திக் கொண்டன.

அப்போதிருந்தே அமெரிக்காவும், சீனாவும் போட்டிபோட்டு நேபாளத்துக்கு பல்வேறு வகையிலும் உதவிகளை அள்ளித் தெளித்து வருகின்றன. ஆனா லும், 17 ஆண்டுகளில் அங்கு 14 முறை ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2020, ஜூன் 18 ஆம் திகதி நேபாளம் அதன் அரசியல் அமைப்பை திருத்துவதன் மூலம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த லிபுலேக், லிம்பியாதுரா மற்றும் காலாபானி ஆகிய மூன்று பகுதிகளை உள்ளடக்கிய





நாட்டின் அரசியல் வரைபடத்தைப் புதுப்பிக்கும் பணியை நிறைவு செய்தது.

இதற்கு இந்தியா கடுமையாக எதிர்வினை ஆற்றியது. எல்லை விவகாரம் இந்தியா - நேபாளம் இடையே புகைந்து கொண்டே இருக்கும் சூழலில், இன்னும் ஒரு வாரத்தில் கே.பி.சர்மா ஒலி இந்தியாவுக்கு வரவிருந்தார். இந்தச் சூழலில் தான் கலவரம் மூண்டு நிலவரம் தலை கீழாக மாறியுள்ளது.

இலங்கை, பாகிஸ்தானை போல சீனாவின் பெல்ட் அண்ட் ரோடு திட்டத்தில் நேபாளமும் கையெழுத்திட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தெற்காசிய அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் சீனாவுக்கு செக் வைக்க நேபாளம் மீதான அக்கறையை அமெரிக்காவும் விஸ்தரித்தது. 500 மில்லியன் யுஎஸ் டொலர் மதிப்பில் நேபாளத்தில் எரிசக்தி, சாலை கட்டுமான திட்டங்களை வாரி வழங்கியது ட்ரம்ப் அரசு. இது சீனாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

அமெரிக்க உதவியைப் பெற்றுக் கொண்டாலும் கூட அதீத விசுவாசத்தை சீனாவுக்கே காட்டினார் ஒலி. அண்மையில் சீனாவில் நடந்த இராணுவத்தின் இரண்டாம் உலகப் போர் வெற்றிப் பேரணிக்கு சென்றுவந்தார் ஒலி.



இது அமெரிக்காவை கடுப்பேற்றியதாகத் தெரிகிறது. இந்தச் சூழலில் நேபாளத்தில் வெடித்த கலவரம் 100% அமெரிக்காவால் திட்டமிட்டு புகுத்தப்பட்டதே என்று சில புவி அரசியல் நோக்கர்கள் அடித்துச் சொல்கின்றனர்.

மேலும், நேபாளத்தில் சீன ஆதரவு அரசு அப்புறப்படுத்தப்பட்டு விட்டதால், அமெரிக்க ஆதரவு மன்னராட்சி கூட அமுலுக்கு வந்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று கூறப்படுகிறது.

முன்னதாக, வங்கதேசத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது ஹசீனா அமெரிக்கா மீது பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். வங்கக் கடலில் செயின்ட் மார்ட்டின் தீவுகளில் அமெரிக்கா கடற்படை தளம் அமைக்க விரும்பியபோது, தான் அதற்கு முட்டுக்கட்டையாக இருந்ததால், தனக்கெதிராக போராட்டத்தை அமெரிக்கா தூண்டிவிட்டது என்று குற்றச்சாட்டியிருந்தது நினைவுகூரத் தக்கது.

ஏற்கெனவே வங்கதேசத்துடனான உறவு சிக்கலில் உள்ளது, பாகிஸ்தானுடனான உறவைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை, மியான்மார் உள்நாட்டுக் கலவரத்தில் திக்குமுக்காடுகிறது. இதில், நேபாளம் பற்றி எரிவது இந்தியாவுக்கு சவால்தான்!



# சுவிட்சர்லாந்து கருத்தரங்கு நடந்தது என்ன?

**2015 'ஏக்கிய இராஜ்ஜிய' என்ற அரசியல் யாப்பை மீள புதுப்பிக்க ஏற்பாடு - இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை பற்றிய பேச்சுக்கள் தவிர்ப்பு - அநுராவுக்கு தமிழர்களின் ஆணையா? - மறுத்து நிராகரித்த கஜேந்திரகுமார்.**

**வடக்கு** கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குரிய தீர்வை வழங்கும் ஆணையை பெற்றுள்ளதாக ஜேவிபி எனப்படும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், சுவிஸில் இடம்பெற்ற மூன்று நாள் கருத்தரங்கில் பெருமையுடன் வலியுறுத்திக் கூறியுள்ளது.

ஆனால் இக் கருத்தை மறுத்துரைத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈழத் தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் பெற்றிருப்பதாகவும், முழுமையான சமஸ்டி ஆட்சி முறைமை ஒன்றையே தமிழர்கள் விரும்புவதாகவும் காரசாரமாக சுட்டிக் காட்டியுள்ளார்.



தமிழர்களின் அரசியல் விடுதலை விவகாரத்தை தமிழர் தரப்பு கையாள வேண்டுமே தவிர, சிங்களக் கட்சிகள் அல்ல என்ற கடும் தொனியையும் கஜேந்திரகுமார் வெளிப்படுத்தினார்.

சுவிட்சர்லாந்து அரசின் கீழ் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்திருந்த

மூன்று நாள் அரசியல் கருத்தரங்கில், தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் உறுப்பினர்களும் மற்றும் சுவிசில் உள்ள தமிழ் இளையோர் அமைப்பினரும் பங்கு பற்றியிருந்தனர்.

சுவிசில் நடைமுறையில் உள்ள சமஸ்டிமுறை கொண்ட அரசியல் யாப்பு மற்றும் அரசியல் நிர்வாக அமைப்பியல் முறைமைகள் தொடர்பாக அங்கு ஆராயப்பட்டது. சுவிஸ் வெளியுறவு அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் சுவிசின் முக்கிய இராஜதந்திரிகள் இக் கருத்தரங்கில் பங்குகொண்டு விளக்கமளித்தனர்.

சிங்கள தமிழ் பிரதிநிதிகளின் நியாயமான நீண்ட விளக்கங்களை செவிமடுத்ததாக ஏற்பாட்டாளர் ஒருவர் இக் கட்டுரையாளருக்கு தெரிவித்தார்.

தமிழர்கள் சமஸ்டி முறையிலான ஆட்சியை விரும்புவதாகவும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத் துவதை எவரும் எதிர்க்கவில்லை எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியிருந்தார்.

சுவிஸ் அரசியல் நிர்வாக முறைமை பற்றிய விளக்கங்களின் பின்னணியில், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே உடனடித் தீர்வு என்று வலியுறுத்திய சுரேஸ் பிரேமச்சந்திரன், அதற்கு மேலான அதிகார முறைகள் பற்றி ஆலோசிக்க வேண்டும் எனவும் பரிந்துரைத்தார்.

எவ்வாறாயினும் கருத்தரங்கில் பங்குபற்றிய தமிழர் தரப்பினரில் அதிகமானோர், இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பு முறையை விரும்பவில்லை என்பதை பகிரங்கமாக வெளிப்படுத்தினர். குறிப்பாக சுவிஸ் தமிழ் இளையோர் அமைப்பினார், இலங்கை ஒற்றையாட்சி அரச கட்டமைப்பு முறைக்கு எதிரான விளக்கங்களை முன்வைத்தனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஈழத் தமிழர்களின் அரசியல் போராட்ட வரலாற்றை விப ரமாக எடுத்துக் கூறியதை முழுமையாக ஏற்றுக் கொண்ட சுவிஸ் இளையோர் அமைப்பினர், ஈழத்தமிழர் பிரச்சினைக்கு 'இரு அரசு' முறை யிலான தீர்வு பொருத்தமானது எனவும் கடந்தகால ஆட்சியாளர்களினாலும் இலங்கை இராணுவத்தினராலும் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறியிருந்தனர்.

ஈழத் தமிழர்களின் அரசியல் போராட்ட வரலாற்றுப் பட்டறிவுகள் மூலமாக இரு அரசு தீர்வு தான் பொருத்தமானது என்ற கருத்தினை, இளையோர் அமைப்பினர் வலியுறுத்தினர்.

இக் கருத்துக்கு மாறுக் கருத்தை வெளிப்படுத்திய தேசிய மக்கள் சக்தி



உறுப்பினர்கள், வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளை தாம் பெற்றுள்ளதாகவும், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தில் ஐந்து உறுப்பினர்களையும் வடக்கு கிழக்கில் மொத்தமாக எட்டு உறுப்பினர்களையும் பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டினர்.

அத்துடன் புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் பற்றியும் எடுத்துக் கூறினர். புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்தில் தமிழர்கள் உள்ளிட்ட அனைத்து மக்களின் பிரச்சினைகளுக்கும் பொருத்தமான தீர்வு பரிந்துரைக்கப்படும் எனவும் அவர்கள் தமது தரப்பு வாதங்களை முன்வைத்தனர்.

ஆனால், அநுர அரசாங்கம் முன்வைக்கவுள்ள புதிய அரசியல் தொடர்பாக கருத்தரங்கில் பங்குபற்றிய தமிழ்த் தரப்பு உறுப்பினர்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தவில்லை. அந்த புதிய யாப்பு தொடர்பாக சரியான புரிதல் அற்ற தன்மை காணப்படுவதாக கஜேந்திரகுமார் சுட்டிக் காட்டினார்.

மைத்திரி - ரணில் அரசாங்கத்தின்போது புதிய அரசியல் யாப்புக்காக அனைத்துக் கட்சிகளானாலும் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் புதிய அரசியல் யாப்புக்கான வேலைத் திட்டங்களை தொடரவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் நிஹால் அபயசிங்க அங்கு விளக்கமளித்தார்.

மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் நாடாளுமன்றம், அரசியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டு ஆறு உப குழுக்களாக ஒவ்வொரு கட்சி உறுப்பினர்களும் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு தலைப்பில் பரிந்துரைகள் முன்வைக்கப் பட்டிருந்தன.

இலங்கையின் இறைமை, தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் அடங்கலாக பரிந்துரைகள் முன்மொழியப்பட்டு அவை அறிக்கைகளாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.





ஆகவே, அந்த விடயங்களை தொடர்ச்சியாக தமது அரசாங்கமும் ஆராய்ந்து, அதனை நாடாளுமன்ற அங்கீகாரத்துடன் மேலும் சில அதிகார முறைகளை உள்ளடக்கி புதிய யாப்பை சமர்ப்பிக்கும் ஏற்பாடுகளை செய்யவுள்ளதாகவும் நிஹால் அபயசிங்க அங்கு விளக்கமளித்திருந்தார்.

ஆனால், இந்த விளக்கம் தொடர்பாக பரிசீலித்த தமிழ்த் தரப்பினர் குறிப்பாக கஜேந்திரகுமார், தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பங்கள் புதிய யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்தனர்.

அதேநேரம், வடக்கு கிழக்கில் பௌத்த மயமாக்கல் மற்றும் இராணுவ செயற்பாடுகள் பற்றி கஜேந்திரகுமார் நீண்ட விளக்கமளித்தார். அத்துடன் தற்போது நடைமுறையில் உள்ள 13 ஐ முழுமையாக செயற்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குரியது. ஆனால் அதற்கு தமிழ்த்தரப்பின் ஒத்துழைப்பு அவசியம் என கோருவது மிகவும் தவறான அரசியல் கற்பிதம் என்ற தொனியை கஜேந்திரகுமார், அழுத்தம் திருத்தமாக முன்வைத்தார்.

அனுர அரசாங்கம் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை கூட அகற்ற விரும்பவில்லை எனவும் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டிய போது, அது முன்னைய அரசாங்கம் செய்த வேலைத் திட்டம் என்ற தொனியில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தமக்குள் முணுமுணுத்துக் கொண்டதாக கருத்தரங்கில் பங்குபற்றிய தமிழ்ப் பிரதிநிதி ஒருவர் இக் கட்டுரையாளரிடம் தெரிவித்தார்.

அதேநேரம் போர்க் குற்றங்களுக்கான சர்வதேச விசாரணை என்ற தமிழர்களின் ஆழமான கருத்துக்குப் பதிலளித்த நிஹால் அபயசிங்க, ஜேவிபி இலங்கைத்தீவில் நடத்திய 1972 - 1987 - 88 ஆம் ஆண்டு கிளர்ச்சிகளின் போது சிங்கள இளைஞர்கள் - யுவதிகள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டதாகவும் பல அவலங்களைத் தாங்கள் சந்தித்தாகவும் விளக்கினார்.

சிங்கள - தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்தால் படுகொலைகளை எதிர்கொண்ட காரண - காரியங்கள் ஆழமானவை. ஆனால், அவ்வாறு இழைக்கப்பட்ட அநீதிகளை தற்போதைய சூழலில் கைவிட்டு, புதிய அரசியற் பாதையை நோக்கி பயணிக்க கைகோர்க்க வேண்டும் என்ற தொனியில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கருத்தரங்கில் கேட்டுக் கொண்டனர். ஜேவிபியின் போராட்ட கால அநீதிகளை கூடுதலாக சுட்டிக்காட்டினர்.

அதேவேளை, இக் கட்டுரையாளரிடம் பேசிய ஏற்பாட்டார் ஒருவர் இக் கருத்தரங்கு தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும் என்ற நோக்கில், கருத்தரங்கு தொடர்பான விடயங்ளை அதிகாரபூர்வமாக அறிக்கையிட வேண்டும் என கேட்டபோது, சுவிஸ்லாந்து இராஜதந்திரிகள் அதனை விரும்பவில்லை என தெரிவித்தார்.

இருந்தாலும், இக் கருத்தரங்கில் பேசப்பட்ட விடயங்களை அதிகாரபூர்வமாக அறிக்கையிடுவது பற்றி சுவிஸ் அரசாங்கத்திடம் கோரவுள்ளதாகவும் அந்த ஏற்பாட்டாளர் தெரிவித்தார்.

அதேவேளை மூன்று நாட்கள் இடம்பெற்ற கருத்தரங்கில் பங்குபற்றிய தமிழரசுக் கட்சியின் செயலாளர் சத்தியலிங்கம் எந்தக் கருத்துக்களையும் முன்வைக்கவில்லை. ஆனால், கருத்தரங்கு முடிவடைந்த பின்னர் செய்தியாளர் சந்திப்பில் அவர் விளக்கமளித்தார்.

சுவிஸ் சமஸ்டி முறை பற்றி தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு நன்கு விளக் கமளிக்கப்பட்டுள்ளது என்றும் ஆனால், சுவிஸை விட்டு வெளியேறிச் செல்லும்போது விமான நிலையத்தில் அந்த சமஸ்டி ஆட்சி முறைச் சிந்தனையை கைவிட்டுச் செல்லக் கூடாது எனவும் சத்தியலிங்கம் கிண்டலாகச் சுட்டிக் காட்டினார்.

2009 இற்குப் பின்னர் இலங்கைத்தீவில் ஊழல் மோசடி - அதிகார துஸ்பிரயோகம் மற்றும் பொருளாதார குற்றங்கள் மாத்திரமே உள்ளன என்ற தொனியில் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், குறிப்பாக அதன் செயலாளர் நிஹால் அபயசிங்க கருத்தரங்கில் தமது தரப்பு நியாயங்களை அவ்வப்போது வெளிப்படுத்தியிருந்தார் எனவும், ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வழங்கிய பல விளக்கவுரைகளில் சிங்கள - தமிழ் முரண்பாட்டுத் தன்மையின் ஆழத்தை அவர்களினால் நிராகரிக்க முடியாத நிலமை இருந்தது எனவும் தமிழ் இளையோர் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் கட்டுரையாளரிடம் விபரித்தார்.

இக் கருத்தரங்கின் முடிவுரை தெளிவில்லை எனவும் அந்த இளையோர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் முன்மொழியப்பட்ட ஒற்றையாட்சிக்குள் சமஸ்டி ஆட்சி என்ற அதாவது 'ஏக்கிய இராஜ்ஜிய' என்ற முறையிலான அரசியல் யாப்பு ஒன்றையே அநுர அரசாங்கமும் முன்வைக்கவுள்ளது என்பதை இக் கருத்தரங்கு வெளிப்படுத்தியதை அறிய முடிகிறது. அதே நேரம் இக் கருத்தரங்கில் போர்க்குற்றம் பற்றிய சர்வதேச விசாரணை தொடர்பாக தமிழர் தரப்பு வலியுறுத்தியிருந்தாலும், இன அழிப்புக்கான சர்வதேச நீதி அவசியம் என்பது குறித்து பேசப்படவில்லை எனவும் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

# அண்ணா...

-பிரபா அன்பு

அண்ணா!!
போர்க்கூவல் வரும் முன்பே
புரட்சிப் பாதையை
தேர்ந்தெடுத்தாய்!

இன்று
வானத்தின் கீழ் நின்று
உனக்காக அழுகின்றேன்.

அன்று - நீ
சொல்லாமல் சென்றதால்
நம் வீட்டு வாசல்
வாடிக் கிடந்தது.

இன்று
நீ இல்லாத வீடு
பூக்களற்ற பூந்தோட்டம்போல்
களையிழந்து கிடக்கின்றது!

வேட்டொலி கேட்டு
ஓய்ந்துபோன தேசத்தில்
உன் கனவுகள்தானே
என் காதில் ஒலிக்கின்றது!


உந்தன்
காலடிச் சத்தத்தை
கனவுகளில் கேட்கின்றேன்.

பௌர்ணமியாய்
மனதினுள்
விழித்துக்கிடக்கின்றாய்!

நீ என்பது
ஒரு இனத்தின் உயிர்ப்பு
உன் வீரம்
ஒரு இனத்தின் காவியம்!

காலம் கடந்து, பருவம் மாறி
வானம் மாறினாலும்
நம்வீட்டுக் கதவு பூட்டாது
உனக்காக
திறந்துதானே கிடக்கின்றது!!

வேண்டும்.
ஒரு நாள் - நீ சுவாசத்தோடு
இருக்கிறாயென்ற
அந்த
இனிப்பான செய்தி.....!!





-தீக்கதிர்

# ட்ரம்ப்பின் இரட்டை நாக்கு

**இந்தியாவோடு** இணைந்து பணியாற்றுவோம் என்று ஒருபுறத்தில் கூறிக்கொண்டே மறுபுறத்தில் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கும் இந்தியா மற்றும் சீனாவுக்கு நூறு சதவீத வரி விதியுங்கள் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளதாக வெளியாகியுள்ள தகவல் அவரின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துவதாக உள்ளது.

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான மோதல் நீடித்துக் கொண்டே போவதற்கு அமெரிக்கா மற்றும் அதன் தலைமையிலான நேட்டோ அமைப்பே காரணமாகும். உக்ரைனுக்கு தொடர்ந்து ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளவாடங்கள் வழங்குகிறது அமெரிக்கா. மறுபுறத்தில் இந்த மோதல் முடிவுக்கு வர வேண்டும் என்று ஒப்புக்கு பேசுகிறது.

நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ரஷ்யா உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவேன் என்று சவடால் அடித்தார் ட்ரம்ப். ஆட்சிக்கு வந்தவுடன் நூறு நாட்களுக்குள் இந்த மோதலை முடிவுக்கு கொண்டு வந்துவிடுவேன் என்றார். ஆனால் அவர் கூறியது போல எதுவும் நடக்கவில்லை.



இதற்கு காரணம் ரஷ்யாவிடமிருந்து இந்தியா, சீனா போன்ற நாடுகள் கச்சா எண்ணெய்யை வாங்குவதுதான் காரணம் என்று புனைந்துரைத்து இந்தியாவின் மீது அடுத்தடுத்து வரி விதிப்பு தாக்குதலை தொடுத்தது ட்ரம்ப் நிர்வாகம்.

பகல்ஹாம் மீதான பயங்கரவாதிகள் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை நான் தான் நிறுத்தினேன்

என்று ட்ரம்ப் 40க்கும் மேற்பட்ட முறை கூறினார். ஆனால் நாடாளுமன்றத்தில் இதுகுறித்த விவாதத்தின் போது கூட ட்ரம்ப்பிற்கு மறுப்பு தெரிவிக்க பிரதமர் மோடி தயாராக இல்லை.

மறுபுறத்தில் மோடியின் சமீபத்திய அமெரிக்க விஜயத்தின் போது கூட அந்த நாட்டிடமிருந்து பெருந்தொகையில் இராணுவத் தளவாடங்களை வாங்குவதற்கு உடன்பாடு கையெழுத்தானது.

இந்தியாவை வரிவிதிப்பு மூலம் மிரட்டி பணிய வைக்க முயல்கிறது ட்ரம்ப் நிர்வாகம். இதனிடையே இந்தியா, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளிடையே ஏற்பட்ட கூடுதல் நெருக்கம் அமெரிக்காவிற்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மோடியோடு தனிப்பட்ட முறையில் நட்பு பாராட்டும் வகையில் பேசுகிறார் ட்ரம்ப்.


மறுபுறத்தில் ஐரோப்பிய யூனியன் நாடுகளும் இந்தியா மற்றும் சீனா மீது நூறு சதவீத அளவுக்கு வரி விதிக்க வேண்டும் என்று தூண்டிவிடுகிறார். அமெரிக்காவின் கடுமையான வரி விதிப்பு காரணமாக இந்தியாவின் ஏற்றுமதியில் கடும் பாதிப்பு ஏற்படும். இது உள்நாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அமெரிக்காவுடன் நெருக்கம் காட்டுவதன் மூலம் இந்தப் பிரச்சனையை தீர்க்க முடியாது. மாறாக அந்த நாட்டை கூடுதலாக சார்ந்திருப்பதை கைவிட்டு உள்நாட்டுச் சந்தையை விரிவுபடுத்தவும், பன்முக அயல்துறை உறவை வலுப்படுத்தவும் மோடி அரசு முயலவேண்டும்.

**ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான மோதல் நீடித்துக் கொண்டே போவதற்கு அமெரிக்கா மற்றும் அதன் தலைமையிலான நேட்டோ அமைப்பே காரணமாகும். உக்ரைனுக்கு தொடர்ந்து ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளவாடங்கள் வழங்குகிறது அமெரிக்கா. மறுபுறத்தில் இந்த மோதல் முடிவுக்கு வர வேண்டும் என்று ஒப்புக்கு பேசுகிறது.**




# இதய அஞ்சலி



தமிழின விடுதலையை தன் வாழ்வின்அதியுயர் இலட்சியமாகக் வரித்து வாழ்ந்த மூத்த போராளி திரு சின்னையா ஆனந்தம் (ஆனந்தன்) அவர்கள் 07.09.2025 அன்று இயற்கை எய்தி விட்டார்.

இவர் மிகவும் அற்புதமான, கண்ணியமான, பொறுமையும் நேர்மையும் நம்பிக்கைக்கும் உரியவராக இருந்தவர்.

இவர் தமிழினத்துக்காக ஆற்றிய அரும்பணிகளைக் கௌரவிக்கும் முகமாக, 12.09.2025 நடைபெற்ற இறுதி வணக்க நிகழ்வில் 'தேசக் காற்று' எனும் விருது வழங்கப்பட்டிருக்கிறது.

அமரர் தேசக்காற்று ஆனந்தன் அவர்களுக்கு எங்கள் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.



# பறவைகளின் அறிவியல்

**பறவைகள்** செய்யும் விஞ்ஞான மாயம் - பறவைகள் ஏ வடிவில் பறப்பதன் உண்மையான காரணம்:

வானத்தில் பறவைகள் அணிவகுத்துச் செல்லும்போது, அவை பெரும்பாலும் 'V' வடிவில் வரிசையாகப் பறப்பதைப் பார்த்திருப்போம். குறிப்பாக, நீண்ட தூரம் இடம்பெயரும் பறவை இனங்கள் இந்த அமைப்பைப் பின்பற்றும்.

இந்தக் காட்சி அழகாக இருந்தாலும், இந்தப் பறவைகள் ஏன் இப்படி ஒரு குறிப்பிட்ட வடிவில் பறக்கின்றன என்ற கேள்வி நம்மில் பலருக்கு எழலாம்.

பறவைகள் 'V' வடிவில் பறப்பதற்கான முக்கியக் காரணம் ஆற்றலைச் சேமிப்பதே ஆகும். ஒரு பறவை தன் சிறகுகளை அடித்து பறக்கும்போது, அதன் சிறகுகளின் முனைகளிலிருந்து ஒரு சுழல் காற்று (Vortex) உருவாகிறது. இந்தக் காற்று, பறவையின் பின்னால் ஒரு “மேல்காற்று ஓட்டத்தை“ (Updraft) உருவாக்குகிறது.

இந்த மேல்காற்று ஓட்டத்தைப் பயன்படுத்தி, பின்னால் வரும் பறவைகள் தங்கள் சிறகுகளை அடிப்பதற்கான சக்தியை மிகக் குறைவாகவே செலவிடலாம். அதாவது, ஒரு பறவையின் சிறகு அடிக்கும்போது உருவாகும் காற்று அழுத்தம், பின்னால் வரும் பறவைகளை லேசாக மேல்நோக்கித் தள்ளுகிறது. இதனால், அவை குறைவான முயற்சியில் அதிக தூரம் பறக்க முடியும்.

'V' வடிவ அணியில் முன்னால் பறக்கும் பறவைதான் மிக அதிகமான ஆற்றலைச் செலவிட வேண்டியிருக்கும். ஏனெனில், அது தனக்கு முன்னால் வரும் காற்றின் அழுத்தத்தை நேரடியாக எதிர்கொள்ள வேண்டும்.

இதனால், அணியில் உள்ள பறவைகள் சுழற்சி முறையில் தலைமையைப் பகிர்ந்து கொள்ளும். குறிப்பிட்ட நேரம் பறந்தவுடன், முன்னால் செல்லும் பறவை பின் வரிசைக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளும். மற்றொரு பறவை முன்னால் வந்து தலைமையேற்கும். இந்தச் சுழற்சி முறை, அணியில் உள்ள அனைத்துப் பறவைகளும் சமமான முயற்சியைப் பகிர்ந்து கொள்ள உதவுகிறது.

'V' வடிவம், பறவைகளுக்கு இடையே சிறந்த தொடர்பையும் ஒருங்கிணைப்பையும் உறுதி செய்கிறது. இந்த அமைப்பில், ஒவ்வொரு பறவையும் தனக்கு முன்னால் உள்ள பறவையைப் பார்க்க முடியும். இது வேகத்தையும் திசையையும் பராமரிக்க உதவுகிறது.

சமிக்ஞைகள் கொடுப்பதன் மூலம், உணவுக்கான இடத்தை அடையாளம் காணுதல், ஆபத்தைக் குறித்த எச்சரிக்கை போன்ற தகவல்களை எளிதாகப் பரிமாறிக் கொள்ள முடியும். இந்த ஒருங்கிணைப்பு, பெரிய கூட்டமாகப் பயணிக்கும்போது மிகவும் அவசியம்.


'V' வடிவம், கூட்டத்தில் உள்ள ஒவ்வொரு பறவைக்கும் பரந்த பார்வையை வழங்குகிறது. இது வேட்டையாடிகள் வருவதைக் கண்டறியவும், கூட்டத்திற்குள் மோதல்களைத் தவிர்க்கவும் உதவுகிறது. மேலும், பெரிய கூட்டமாகப் பறக்கும்போது, இந்த வடிவம் காற்று எதிர்ப்பைக் குறைத்து, பறவைகள் எளிதாகப் பயணிக்க உதவுகிறது.

எனவே, பறவைகள் 'V' வடிவில் பறப்பது என்பது வெறும் அழகியல் அம்சம் மட்டுமல்ல. இது அவற்றின் நீண்ட தூரப் பயணத்திற்குத் தேவையான ஆற்றலைச் சேமிக்கும் ஒரு அறிவியல் ரீதியான உத்தி. இயற்கையில் உள்ள ஒவ்வொரு உயிரினமும் தங்கள் வாழ்வைச் சிறப்பாக்கக் கையாளும் நுட்பங்களுக்கு இந்தப் பறவைகளின் பறக்கும் முறையும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

# வனைவு

## கொற்றவை

## அங்கம்: 35



**அன்று** பகற் பொழுதில் இருந்தே நெஞ்சில் ஏதோ பாறாங்கல்லை வைத்தது போல மூச்சு முட்டித் தவித்தான் ஆனந்தன். முன்பு, இறுதிச் சண்டை ஆரம்பிப்பதற்கு முன்னர், கள நிலவரம் எப்படிக் கடினமானதாக இருக்கும் என்பது அவனுக்கு தெரிந்து இருந்தது. அப்போதெல்லாம் யாருடனும் பகிர்ந்து கொள்ளாத இனம்புரியாத பதட்டங்கள் ஆயிரம் அவன் மனதினுள் இருந்தன. அதே போன்றதொரு படபடப்பு இப்போதும் எழுந்தது. ஏனென்று புரியவில்லை.... தன்னோடு தோளோடு தோள் நின்றவர்களை மனது தானாகவே தேடிச் சென்றது.

குண்டுச் சத்தங்களும் காயப்பட்டவர்களின் ஓலங்களும் இப்போதும் கேட்பது போன்ற ஒரு பிரமை. அவயவங்களை இழந்தவர்கள், உறவுகளைத் தொலைத்தவர்களின் பரிதவிப்புகள் எல்லாம் இப்போதும் நடைபெறுவது போன்று ஆனந்தனின் கண்முன்னே நிழலாடின. தன்னுடைய உணர்வுகளை வீட்டில் யாருடனும் அவன் பகிர்ந்து கொள்ளவில்லை.

வெண்ணிலாவும் சாந்தியும் அவன் கொஞ்சம் யோசனை யுடன் இருப்பதைப் பார்த்தார்கள்தான். கடந்த காலத்திலிருந்து மீண்டுவர முடியாமல் அவன் இடைக்கிடை இப்படித் தவித்துப் போவதை அவர்கள் பலமுறை பார்த்திருக்கிறார்கள். ஒரு போர்வீரன், எத்தனை அனுபவங்களைக் கடந்து வந்திருக்கிறான்? அவனோடு ஒன்றாக இருந்த எத்தனை பேர் இன்று விடுதலைக்கு வித்தாகியிருக்கிறர்கள்? எல்லாவற்றையும் விட தலைமையின் மடியில், அவரின் நேரடி வழிகாட்டலில் வளர்ந்தவன் அவன். மீட்டுவதற்கு எத்தனை நினைவுகள் இருக்கும்?

தொடர்ந்த சண்டையின் கசப்பான அனுபவங்கள்... பல ஆண்டுகால சித்திரவதை நிறைந்த சிறை வாழ்க்கை, குடும்பத்தை தொலைத்த தவிப்பு என்று எத்தனையாயிரம் நினைவுகள் அவன் மண்டையில் ஓடும்?

"கவலைப்படாதேங்கோ அப்பா...!" என்ற ஒற்றை வரி யில் எப்படி அவனை ஆற்ற முடியும்? இதனால், இப்படி அவன் துவண்டு தனிமையாக உட்காரும் நேரங்களில் அவனை அப்படியே விட்டுவிடுவது அவர்கள் வழமை. சிறிது நேரத்திலோ அல்லது மறுநாளோ அவன் வழமைக்குத் திரும்பி விடுவான்.

அப்படி ஒருநாள் என்று எண்ணித்தான் வெண்ணிலாவும் அவனைத் தொந்தரவு செய்யவில்லை. சாந்திக்குத்தான் மனது கேட்கவில்லை.

'ரசம் வைச்சுத் தரட்டா?.... கொஞ்சம் படுத்து ஓய் வெடுங்கோவன்.... ஒரு இஞ்சிப் பிளேன் ரீ குடிக்க சரியாப் போகும்..' என்று இடையிடை வந்து பார்த்து தனது ஆதங்கத்தைத் தெரிவித்துக் கொண்டாள்.

ஆனந்தனும்கூட அன்றிரவு நெஞ்சு வலிக்கும் வரை தனது



உடலில்தான் ஏதோவொரு பிரச்சனை என்று நினைத்தும் பார்க்கவில்லை.

"சாந்தி...! சாந்தீ..." என்று அவன் ஈனஸ்வரத்தில் கூப்பிட்டது கேட்டு அவள் பதறிப்போனாள். வெண்ணிலாவும் துடித்துப் பதைத்து ஓடிவந்தபோது அவன் நெஞ்சை கையால் பிடித்துக் கொண்டிருந்தான். வேர்வையில் தெப்பலாக நனைந்து போயிருந்தான்.

வலியுடன் கலந்த ஒருவித மயக்க நிலைக்குள் அவன் போய்க் கொண்டிருந்த போது அவனைச் சுற்றிக் கேட்ட பதட்டமான குரல்களும் யாரோ ஓடுப்படுவதும் எங்கோ தூரத்தில் நடப்பது போல இருந்தன.

அவன் வெண்ணிலாவோடு பேச விரும்பினான். இதுவரை அவளுக்கு சொல்லாத விடயங்களை அவளுக்குச் சொல்ல விரும்பினான். வாழ்க்கையில் அவள் என்னவெல்லாம் சாதிக்க வேண்டும், எப்படி பத்திரமாக இருக்க வேண்டும் என்று தனது மனதுக்குள் இருக்கும் ஆசைகளை அவளிடம் கொட்ட விரும்பினான்.

தான் எப்படி அவளை உயிராக நேசிக்கிறேன் என்றும், எப்படி அவளை கண்ணுக்குள் வைத்துப் பார்க்க ஆசைப்படுகிறேன் என்றும் சொல்ல விரும்பினான். எல்லாவற்றையும் விட முக்கியமாக தனது தாயை அவள் எப்படி மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்ல ஏங்கினான்.

அத்துடன் சாந்தியின் கைகளை பற்றிக்கொள்ள விரும்பினான். அவளின் கைகளைப் பற்றிக் கொண்டால் பாதி வலி காணாமற் போய்விடும் என்ற எண்ணம் அந்த நேரத்திலும் வந்தது. கண்களைத் திறக்கவோ கையை அசைக்கவோ முடியவில்லை. தானாகவே கண்களில் இருந்து நீர் வழிந்தது.

"அப்பா...! அப்பா...! கண்ணை மூடாதேயுங்கோ..! முழிச்சிருங்கோ..! அப்பா..! நான் சொல்லுறது கேட்குதோ? ஆஸ்பத்திரிக்கு வந்திட்டம்... உங்களுக்கு ஒண்டுமில்லை... இங்க... எங்களைப் பாருங்கோ... அப்பா..?"

வெண்ணிலாவின் குரல் எங்கோ பாதாளத்திலிருந்து கேட்டது. அதற்குப்பின் எல்லாமே இருட்டாகி விட்டது. அந்தரத்தில் மிதப்பது போல் உணர்ந்தான் ஆனந்தன். நான் யார்? ஆனந்தனா...? வசந்தனா....?

அவனுக்கு நினைவு வந்தபோது,

"அவருக்கு முழுசா நினைவு திரும்ப கொஞ்சம் நேரம் ஆகும். அறைக்குள்ளை ஆரும் இருக்க வேண்டாம். நீங்கள் கொஞ்சம் வெளியில இருங்கோ. இப்ப அபாயக் கட்டத்தை தாண்டீற்றார். இப்ப, ஆக்கள் கரைச்சல் குடுக்கக் கூடாது. அழாதேங்கோ..! என்ன..? நீங்க தான் நேரத்துக்கு ஆளைக் கொணர்ந்திட்டீங்களே... நர்ஸ்..! அடிக்கடி வந்து பார்த்துக் கொள்ளுங்கோ...." யாரோ பேசும் குரல் தேய்ந்து மறைந்தது.

ஆனந்தன் கண்களைத் திறக்க முயன்றான். முடியவில்லை... இமைகளில் கல்லைக் கட்டித் தொங்க விட்டிருக்கிறார்களா என்ன? உடம்பெல்லாம் புண்ணாக வலித்தது. நெஞ்சுப் பகுதியில் வலி மோசமாக இருந்தது. அசதியில் மறுபடியும் மயக்கத்துள் ஆழ்ந்தான் ஆனந்தன்.

அவன் கண்களைத் திறந்தபோது கவலை ததும்பிய முகத்துடன் அருகில் இருந்த சாந்தியும் வெண்ணிலாவும்தான் அவன் பார்வையில் முதலில் பட்டார்கள். அவனின் நெஞ்சுப்பகுதியோடு பல வயர்கள் இணைக்கப்பட்டு அவை அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு இயந்திரத்தோடு இணைக்கப்பட்டிருந்தன. அது 'பீப்... பீப்...' என்று ஒரே சீரான சத்தம் எழுப்பிக் கொண்டிருந்தது. அதன் திரையில் பல நெளி நெளியான கோடுகள் ஓடிக் கொண்டிருந்தன. இலக்கங்களும் மாறிமாறி விழுந்து கொண்டிருந்தன.

அவன் மெதுவாக எழ முயற்சித்தான். முடியவில்லை. அப்போதுதான் கையில் சொட்டுச் சொட்டாக 'ட்ரிப்ஸ்' ஏறுவதையும் கவனித்தான்.

சாந்தியும் வெண்ணிலாவும் பதறிப் போனார்கள்.

"ஐயோ அப்பா..! என்ன செய்யிறீங்கள்..? படுங்கோ... எவ்வளவு பெரிய கண்டத்தில இருந்து தப்பிப் பிழைச்சு வந்திருக்கிறியள்..."

அந்த நேரம் மருத்துவத் தாதி உள்ளே வந்தா.

"நல்லா முழிப்பு வந்திட்டுதோ? இப்ப டொக்ரர் வருவார்.. அவர் எல்லாம் சொல்லுவார்.... பசிக்குதோ...? மயக்க மருந்து போட்டதால உடனை சாப்பிட சத்தி வாற மாதிரி இருக்கும். உங்களுக்கு அப்பிடி ஒண்டுமில்லை எண்டால் டொக்ரர் போன பிறகு சாப்பிடலாம்" என்றா.

"டொக்ரர் சொல்லும் மட்டுக்கும் எழும்பி நடக்கக் கூடாது. படுக்கையிலதான் எல்லாம். ஒண்டுக்கும் பயப்பிட வேண்டாம். எங்களில ஆராவது ஒருவர் எப்பவும் பக்கத்திலதான் இருப்பம்." எல்லா வயர்களையும் சரிபார்த்த பின் அவ அறையை விட்டு வெளியே போனா.

சாந்தி அருகில் வந்து அமர்ந்தாள். அவன் தலையை மெதுவாக வாஞ்சையுடன் தடவிக் கொடுத்தாள். அவள் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன. வெண்ணிலா அவனின் கால்மாட்டில் வந்து நின்றாள். அவன் கால்களை இதமாகப் பிடித்து விட்டாள்.

"அப்பா....! உங்களுக்கு நெஞ்சு வலி வரேக்கை எனக்கும் வந்த மாதிரி இருந்துது... உங்களுக்கு இருதயத்தில ஒரு பெரிய ஒப்பிறேஷன் நடந்திருக்கு அப்பா.. டொக்ரர் வந்து சொன்னால்தான் விளக்கமாத் தெரியும்... உடம்பை அலட்டாமல் கவனமா இருக்கோணும் அப்பா..!" அவள் குரல் தழதழத்தது.

ஆனந்தன் முன்பு பல தடவைகள் காயப்பட்டிருக்கிறான். இரண்டு தடவைகள் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருக்கும் மோசமான நிலைமையில் இருந்தும் உயிர் தப்பிப் பிழைத்திருக்கிறான். அதை விடவும் உள்ளே அவன் மருத்துவப் பிரிவிலும் சிறிதுகாலம் இருந்திருக்கிறான். அது சார்ந்த அறிவும் அவனிடம் இருந்தது.



கோணல்மாணலாக திரையில் ஓடும் கோடுகள் ECG எனப்படும் அவனின் இதயத் துடிப்பைக் காட்டுவது என்றும், அதன் கீழ் உள்ள இலக்கங்கள் அவனின் இரத்த அழுத்தத்தைக் குறிக்கின்றன என்றும் பார்த்த உடனேயே புரிந்து கொண்டான். இரத்த அழுத்தம் மிகவும் குறைவாக இருந்தது என்பது அவ-னின் இதயத்தில் ஏதோ கடுமையான பாதிப்பு வந்திருக்கிறது என்பதைச் சொன்னது. என்ன சிகிச்சை அளித்தார்கள் என்பது வைத்தியர் சொன்னால்தான் தெரியும்.

"அவ்வளவு கெதியில எனக்கு ஒண்டும் ஆகாது... நீங்கள் சொல்லுறது மாதிரி கொஞ்சம் கவனமா இருப்பம்.. என்ன? எல்லாம் சரியாப் போகும். பயப்பிடாதேங்கோ...! ஏதும் சாப்பிட்டனீங்களோ? இப்பிடி வாடிப்போய் இருக்கிறியள்.." அவ னின் குரல் பலவீனமாக ஒலித்தது.

சிறிது நேரத்தில் டொக்டர் வந்தார். அவன் உடல்நிலை தொடர்பாக பல கேள்விகளைக் கேட்டார். இறுதியில்,

"உங்களுக்கு இதயத்துக்குப் போற குழாயில மூன்று இடங்களில அடைப்பு இருந்தது. ரெண்டு கொஞ்சம் பெரிசு. மற்றது சின்னது. இதயத்துக்கான இரத்த ஓட்டம் தடைப்பட்டதால இவருக்கு 'ஹார்ட் அற்றாக்' வந்திருக்கு. சரியான நேரத்துக்கு கொண்டுவந்து காப்பாத்திப் போட்டீங்கள். இருந்தாலும் இருதயத்தில கொஞ்சம் டமேஜ் வந்திட்டுது.

அஞ்சியோ ஒப்பரேஷன் செய்திருக்கிறம். கொஞ்சக் காலத்துக்கு பாரம் ஒண்டும் தூக்காமை கவனமா இருங்கோ. நர்ஸ் எல்லாம் சொல்லுவா. என்ன சாப்பிடவேணும் எண்டதை கவனிக்க வேணும்."

சாந்தி உன்னிப்பாகக் கவனித்து, தனது சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டாள். ஆனந்தன் ஆயாசமாகக் கண்களை மூடிக் கொண்டான். ஆஸ்பத்திரிக்கு வந்து இரண்டு நாட்களாகி விட்டன என்பதே அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

அவனைத் தெரிந்திருந்த பலரும் அவனைப் பார்க்க மாறி மாறி வந்த வண்ணம் இருந்தனர். அவனுக்கு முடியவில்லை என்பதை வெண்ணிலா டானியல் அண்ணைக்குத்தான் முதலில் அடிச்சுச் சொன்னவளாம். அவர் உடனேயே வந்துவிட்டாராம். தர்மாவும் விசயம் அறிந்து உடனேயே வந்து கூடவே இருந்தவராம். செலவைப் பற்றி கவலைப்பட வேண்டாம் என்று சொன்னதாக சாந்தியும் சொன்னாள். அவர்கள் இருவருக்கும் மனப்பூர்வமாக நன்றி சொன்னான் ஆனந்தன்.

ஆனந்தன் நன்றாக இருக்கிறான் என்பதை திரும்பத் திரும்ப உறுதி செய்தபின் பாடசாலைக்குப் போனாள் வெண்ணிலா. அன்று பிற்பகலில் அவள் 'ஐஸ் போதைப் பாவனையும் இளந் தலைமுறையும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கில் கலந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்றும், அவளை தான் பொறுப்பாக பார்த்துக் கொள்வதாகவும் டானியல் அண்ணர் சொன்னார்.

'வெண்ணிலாவுடன் துணையாக நானும் போவேன்' என்று அடம் பிடித்து றெஜினாக்காவும் கூடப் போனா. 'Zoom' இல் கருத்தரங்கைப் பார்க்கும் வசதி செய்து தந்திருந்தார் டானியல் அண்ணர். வெண்ணிலா என்ன அருமையாக பேசுகிறாள்? தன்னுடைய கருத்துக்களை கொஞ்சமும் தயங்காமல் தெளிவாக எடுத்துச் சொல்வதைப் பார்க்க பிரமிப்பாக இருந்தது. அவன் பயந்தது போல, அவன் இல்லாவிட்டால் வெண்ணிலா என்ன செய்வாள் என்று இனி அவன் பயப்படத் தேவையில்லை.

படிப்பு, அறக்கட்டளை தொடர்பான வேலைகள், அவள் கொடுக்கும் பிரத்தியேக வகுப்புகள், கருத்தரங்குகள், வீட்டு வேலைகள் என்று சளைக்காமல் கெட்டித்தனமாக ஈடுகொடுத்துச் செய்யும் அளவுக்கு வெண்ணிலா வளர்ந்திருப்பதை பெருமை யாக சொல்லிச் சொல்லி மாய்ந்து போனாள் சாந்தி.

அவன் ஆஸ்பத்திரியில் இருந்த அத்தனை நாட்களும் காவேரிதான் சாப்பாடு சமைத்து எடுத்து வந்தாள். இன்று அவளு டன் பாட்டியும் வந்திருந்தாள்.

"குத்துக்கல்லு மாதிரி இன்னும் நான் இருக்கிறன். உனக்கென்ன அவசரம்? எனக்கு நீதான் கொள்ளி வைக்க வேணும் எண்டதை மறந்திட்டியோ?" உரிமையுடன் கோபித்துக்கொண்ட போது அவள் கண்கள் கலங்கியிருந்தன.

தர்மாதான் தனக்கு கை ஒழிந்துவிட்டது போல இருக்கிறது என்று அலுத்துக் கொண்டார். ஆனந்தனைப்போல சுறுசுறுப்பாகவும் உண்மையாகவும் வேலை செய்ய வேறு யாரும் இல்லை என்றபோது அவனுக்கே கொஞ்சம் பெருமிதமாக இருந்தது.

எழுந்து கொஞ்சம் நடக்க ஆரம்பித்ததும் அவனை கொஞ்சம் வேகமாக நடக்க வைத்து இருதயம் ஒழுங்காக துடிக்கிறதா என்று பார்த்து எல்லாம் சரி என்றதும்தான் வீட்டிற்கு போக அனுமதித்தார்கள். கூடவே மருந்து மாத்திரைகள் வேறு. இப்போதுதான் உண்மையாகவே நோயாளி போல உணர்ந்தான் ஆனந்தன்.

வீட்டில் சாந்தியின் நடவடிக்கைகள் முற்றாக மாறியிருந்தன. கொஞ்சம் சத்தமாகப் பேசவும் பயந்தாள் அவள். மண்டையைக் குடையும் எந்த விசயமாக இருந்தாலும் அதை எடுத்துக்கொண்டு ஓடி வந்து அவனிடம்தான் ஆலோசனை கேட்பாள் அல்லது தெரிந்த தகவலைச் சொல்லுவாள். இப்போது எதுவும் இல்லை. எல்லாவற்றையும் தனக்குள்ளேயே வைத்துக் கொண்டாள். எதையாவது சொல்லப்போய் அவனது இதயம் துடிக்க மறந்துவிடுமோ என்ற அச்சம் அவளுக்கு.

அப்போதுதான் அந்த விடயம் நடந்தது....

தொடரும்.....



சு.நிஷாந்தன்

# விஜயின் கூட்டத்தில் 41 பேர் மரணிக்க யார் காரணம்?



**தமிழ்நாட்டில்** அண்மையில் நடந்த சம்பவத்தை எளிதில் கடந்து செல்ல முடியவில்லை.

ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் சிந்திக்க வேண்டிய ஒரு விடயம். தமிழ் மக்கள் மாத்திரமல்ல. சினிமா மோகம் கொண்ட எந்தவொரு இனமாக இருந்தாலும் இந்த செய்தியை எளிதில் கடந்துசெல்லக் கூடாது.

இந்த மக்கள் கூட்டம் வெறுமனே அரசியல்வாதி விஜயை பார்க்க கூடிய கூட்டமல்ல. சினிமாவின் உச்ச பிரபல்யமாக இருக்கும் ஒரு நடிகரை வெறித்தனமாக நேசிக்கும் கூட்டம். இடையில், ஆர்வத்தில் பொது மக்களும் கலந்துகொண்டுள்ளனர். மனிதகுலம் எங்கேயோ சென்றுகொண்டிருக்கிறது. செவ்வாயில் விவசாயம் செய்வது பற்றி சீனா ஆராய்ச்சிகளை நடத்துகிறது.

ஆனால், தமிழ்நாட்டில் பெரும்பான்மையான மக்கள் சினிமா மோகத்தில் இருக்கின்றனர். அதிலும் 30 வயதுக்கும் குறைந்த இளைஞர்களில் 80 சதவீதம் வரை ஏதோ ஒரு நடிகரின் ரசிகனாக இருக்கின்றனர்.

இந்த மனபோக்கின் எதிரொளிதான் அண்மையில் இடம்பெற்ற சம்பவம். விஜயின் கொள்கைகளை கேட்கவோ அல்லது அவரது அரசியல் பற்றி பேசவோ அன்றி அவரை பார்க்க வந்தவர்களே பெரும்பான்மையானவர்கள் என தமிழக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

உண்மையை சொல்ல வேண்டுமென்றால், விஜய் ஓர் அரசியல்வாதியாக தகுதியற்றவர்கள். அவர் ஓர் ரசிக போதையில் உள்ளவர். அவரது செயல்பாடுகளை அவதானித்தால், மாஸ்காட்ட வேண்டுமென்ற நிலையில்தான் கூட்டங்களை நடத்துகிறார்.

தமிழ்நாட்டின் உண்மையான அரசியலை அவர் பேசுவதும் இல்லை. மேலோட்டமாக பேசிவிட்டு அனைத்து தரப்புகளையும் பெற்று முதல்வர் கதிரையில் அமர பார்க்கிறார்.

தமிழக மக்களுக்காக அவர் எத்தனை போராட்டங்களில் கலந்துகொண்டுள்ளார்? தமிழக மக்களுக்காக அவர் பேசிய அரசியல்தான் என்ன? ஆனால், தமிழகத்தின் சினிமா கலாசாரத்தை நன்கு உணர்ந்து தமது ரசிகர் மன்றத்தை மாத்திரம் கட்டமைத்துள்ளார்.

ஒரு நடிகனை பார்த்துவிட வேண்டுமென்ற மனநிலையில் தமிழக இளைஞர்கள் உள்ளனர். அதற்காக எதையும் செய்ய துணிக்கின்றனர். அதனை விஜய் சரியாக உணர்ந்து சாதகமாக பயன்படுத்திக்கொள்கிறார்.

இந்தியாவில் தமிழகம் கல்வியில் முன்னேறிய மாநிலமாக உள்ளது. ஆனால், சினிமா என்ற மோகத்தில் ஊறியுள்ளது. சினிமா சோறு போடாது என்பதை உணர மறுக்கின்றனர் தமிழக இளைஞர்கள். சினிமாவை நேசிப்பது வேறு அதில்



வெறித்தனமாக ஊறிபோவது வேறு. சினிமா என்பது வெறும் பொழுபோக்கு. சீன மற்றும் ஈரானிய படங்கள் போன்று மனித சிந்தனையை வளர்க்கும் படங்களில் தமிழகத்தில் வெகு சிலவே வருகின்றன.

ஒன்றுக்கும் உதவாத மசாலா படங்களே பெருமள வில் வெளிவருகின்றன.

இந்த விபத்துக்கு தமிழகத்தின் ஆளுங்கட்சியாக திமுக மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகிறது. அதில் சில உண்மைகள் இருக்கலாம். ஆட்சியை தக்கவைக்க அதிகாரத்தில் இருக்கும் கட்சிகள் எதை வேண்டுமானாலும் செய்யும். இலங்கையில்கூட பல வரலாறுகள் அதற்கு உதாரணமாக உள்ளன.

ஆனால், இங்கு மக்கள் சிந்திக்க வேண்டும். இத்தகைய பாரிய கூட்ட நெரிசலுக்கு தமது குழந்தைகளுடன் செல்கின்றனர். ஓர் அறிவார்ந்த சமூகம் அவ்வாறு செய்யுமா?

இரண்டு வயது குழந்தையை ஒருவர் அழைத்துச் சென்றுள்ளார். 9, 10 வயது என சிறுவர்களை அழைத்துவந்துள்ளனர். தமது குழந்தைகளுக்கு மூச்செடுக்க முடியாது என்ற அடிப்படை அறிவுக்கூட இல்லாதவர்களா இந்த சினிமா வெறியர்கள்.

நடிகரை பார்ப்பதில் அப்படி என்ன ஆனந்தம் அவர்களுக்கு கிடைக்கிறது எனத் தெரியவில்லை. அதன் விளைவு இன்று பிள்ளைகளை, தாயை, தந்தையை, சகோதரர்களை, உறவுகளை இழந்து வாடுகின்றனர். விஜய் அவர்களது உயிர்களை மீட்டு தருவாரா?

இந்த விடயத்தில் முதல் குற்றவாளி அங்கு சென்ற மக்கள்தான். அதற்கு ஏமாற்றால் போல் ஊடகக் கலாசாரம் வேற. கூட்டம் அதிகமாகிறது என்றால், தமது பாதுகாப்பு கருதி குழந்தைகளுடன் வந்திருந்தவர்கள் வெளியேறிருக்க வேண்டும். ஆனால், அவர்களோ விஜயை பார்க்கும் மோகத்தில் இருந்தனர். குழந்தையின் உயிர் அவர்களுக்கு முக்கியமாக தெரிந்திருக்கவில்லை.

எனவே, இந்த விடயத்தில் எவரையும் குற்றம்சாட்டுவதில் அர்த்தம் இல்லை. அரசாங்கம் 10ஆயிரம் பொலிஸாரை பாதுகாப்பில் நிறுத்தினாலும், இவ்வாறான நெரிசல் ஏற்பட்டால் பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி முதலில் தமது உயிரை காப்பாற்றிக்கொள்ளவே முற்படுவார். அவர் கூட்ட நெரிசலுக்குள் செல்ல மாட்டார்.

எனவே, சினிமா மோகத்தில் திரியும் தமிழக மக்களுக்கும் இந்தச் சம்பவம் ஓர் பாடம். உயிர்கள் விலைமதிப்பற்றது. அதனை மீண்டும் பெற முடியாது என்பதையே அவர்கள் உணர வேண்டும்.

இனியாவது தமிழக இளைஞர்களும், மக்களும் சிந்திப்பார்களா என பார்ப்போம்....!

சினிமா கலாசாரத்திற்கு பின்னால் செல்லாமல் எங்களுடைய தமிழ் மக்களும் தமிழ் நாட்டில் நடந்த சம்பவங்களை பாடமாக எடுத்து செல்ல வேண்டும்.









# தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல்



